
2013, January 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/165/News/2012



யாழ்ப்பாணக் கைதுகள் 1970களின் மறு ஆட்டம்

எம்.ஜி.ஆர். தப்பிப்பிழைத்து 45 வருடங்கள்

ஷிராணி அரசியலுக்கு வரவேண்டுமா?

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள்?

## இந்தியாவை உலுக்கும் பாலியல் வன்கொடுமை

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

EXPRESS NEWSPAPRES (CEY) (PVT) LIMITED



NEWS ALERTS

வீரகேசரியின் விறுவிறுப்பான செய்திகள்...


உடனுக்குடன் உங்கள் கையடக்கத்தொலைபேசியில் தெரிந்துகொள்ளுங்கள்

டயலொக் : reg (space) virakesari என type செய்து

77007 என்ற

இலக்கத்துக்கு அனுப்புங்கள்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மாதாந்த கட்டணமாக ரூபா. 30/- + வரி அறவிடப்படும்.



சமரச இணக்கம் என்பது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், மூலாதாரமான அடிப்படைக் கூறுகளில் விட்டுக் கொடுப்பு என்பது இருக்க முடியாது. இந்த அடிப்படைக் கூறுகளில் எந்த சமரச இணக்கத்தையும் செய்வதாக இருந்தால் அது ஒரு சரணாகதியேயாகும். அது உண்மையில் சகலவற்றையும் விட்டுக் கொடுப்பதே தவிர எதையுமே எடுப்பதல்ல.

மகாத்மா காந்தி

# உள்ளடக்கம்

எமது விருந்தினர்
பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க 09

யாழ்ப்பாணக் கைதுகள்
1970களின் மறு ஆட்டம் 12
எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

ஷிராணி அரசியலில்
இறங்க வேண்டுமா? 16
குமார் டேவிட்

ஆணைக்குழு அறிக்கையும்
இலங்கையரின் மனப்போக்கும் 20
லிலானி ஜெயதிலக

தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகள் 25
என்.சத்தியமூர்த்தி

அரபுலகில் அதிருப்திக்குளிர்காலம் 28
மைக்கேல் ஜான்சன்

பாரதத்தை உலுக்கும்
பாலியல் வன்கொடுமை 31
எம்.பி.வித்தியாதரன்

சென்னை மெயில் 40
எம்.காசிநாதன்

இலங்கையில்
மனித உரிமையும் நல்லாட்சியும் 45
இரா.ரமேஸ்

எம்.ஜி.ஆர். மறைந்து 25 வருடங்கள் 48

சச்சின் டெண்டுல்கரும்
ரிக்கி பொண்டிங்கும் 53

அறிவியல் களரி 57
டாக்டர் எம்.கே.முருகானந்தன்

திரை விமர்சனம் - மதுபானக்கடை 60

கடைசி பக்கம் 64
டாக்டர் எஸ்.சிவதாஸ்





09



16



40



*Samakalam focuses on issues that affect the lives of people of*

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2013, ஜனவரி 01-15


28


12



31


60


48


53


64

*Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...

# அம்பலமாகும் மாயைகள்

பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையின் விளைவாகத் தோன்றிய நெருக்கடி எத்தகைய முடிவமைதிக்குக் கொண்டுவரப்பட்டாலும், இலங்கையின் அரசியல் வர்க்கத்திற்கும் நீதித்துறைக்கும் இடையிலான உறவு நிலை முன்னையதைப் போன்று இருக்கப் போவதில்லை என்பது மாத்திரம் நிச்சயமானதாகும்.

ஒரு புறத்தில் நிறைவேற்று அதிகார பீடத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலான தகராறும் மறுபுறத்தில் நாட்டின் அதியுயர் சட்டவாக்க அமைப்பான பாராளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலான பலப்பரீட்சையும் ஒட்டுமொத்தமாக ஆட்சிமுறை மீதான மக்களின் நம்பிக்கையை முன்னென்றுமில்லாத அளவுக்கு அருகச் செய்து கொண்டிருக்கின்றன.

இலங்கையின் வரலாற்றிலே தற்போது மூண்டிருப்பதைப் போன்று ஆட்சியதிகார பீடத்துக்கும் நீதித்துறைக்கும் (நீதித்துறையின் உயர்மட்ட நிறுவனங்கள் என்று சொல்வதே பொருத்தமானது) இடையே மோதல் நிலை முன்னென்றுமே ஏற்பட்டதில்லை. அரசியலமைப்பை வியாக்கியானம் செய்யும் நியாயாதிக்கம் உச்ச நீதிமன்றத்துக்கேயுரியது என்று அரசியலமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதிலும், அண்மைய சில நாட்களாக சில அரசியலமைப்பு ஏற்பாடுகள் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தினால் செய்யப்பட்டிருக்கக் கூடிய வியாக்கியானங்களைப் பாராளுமன்றம் ஏற்கத்தயாராயில்லை. அரசியலமைப்பை வியாக்கியானம் செய்வதற்கான நியாயாதிக்கம் உச்சநீதிமன்றத்துக்குரியதாக இருந்தாலும் அந்த வியாக்கியானங்கள் சகலவற்றையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை என்று அரசாங்கத்தரப்பால் புதுமையான வாதம் முன்வைக்கப்படுகிறது.

ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களுக்கு அனுகூலமான முறையிலான வியாக்கியானங்களை உச்ச நீதிமன்றம் செய்தால் அவை சரியானவை, அவர்களுக்கு அசௌகரியத்தைத் தரக்கூடிய வியாக்கியானங்கள் என்றால் அவை தவறானவை என்று தான் அரசாங்கத் தரப்பின் இந்த வாதத்தைக் கற்பிதம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிகழ்வுப் போக்குகள் எல்லாம் ஆட்சி நிறுவனக் கட்டமைப்பைச் சுற்றிவர கட்டியமைக்கப்பட்டிருக்கின்ற மாயைகளை ஒவ்வொன்றாக அம்பலப்படுத்துகின்றன. ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வசதியாக அமையாதவை சகலதுமே வலுவற்றவையாக்கப்படுகின்றன!


# கடிதங்கள்










## சமகாலத்தின் தனிச்சிறப்பு

கடந்த மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் தென்லொஸ் ஏஞ்சல்சின் சாண்டிகோ நகரில் காலமான 92 வயதுடைய சித்தார்மேதை ரவிசங்கரைப் பற்றிய செய்திகள் அனைத்து பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகளையும் ஆக்கிரமித்திருந்த போதிலும், அனைத்திலும் ஒரு சில குறிப்பிட்ட விடயங்களையே கேட்க, பார்க்க, வாசிக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால் சமகாலத்திலேயே அவை அனைத்தையும் விட வித்தியாசமான தகவல்களை வாசிக்க முடிந்திருந்தது. "மேதையும் அவரின் பெண்களும்" என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்த கட்டுரையில், ரவி சங்கரின் புகழ், இசைப்பயணம் என்பவற்றைத் தாண்டி அவரின் இல்லற வாழ்க்கை பற்றிய சுவாரஸ்யமான, இதுவரை அறிந்து, தெரிந்து கொள்ள முடியாத பல தகவல்களை வாசிக்கக் கூடியதாக இருந்தது. இது சமகாலத்துக்குரிய தனிச் சிறப்பு

அவரது இசையையும், அவருடைய வெளித்தோற்றத்தையும் பார்த்துப் பிரமித்துப் போயிருந்த என்னைப் போன்றவர்கள், இக்கட்டுரையை வாசித்த போதே "அவருடைய வாழ்க்கையில் பல்வேறு பெண்மணிகளுடன் கொண்டிருந்த உறவுகள் அவருக்கு மன அமைதியைக் கொடுக்கவில்லை, அவரது வாழ்வு அமளிகள் நிறைந்ததாக, மன முறிவுகளைக் கொண்டதாகவும், கசப்பான நினைவுகளைக் கொண்டதாகவும் விளங்கியது" என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. இதைப்போன்ற அரிய, புதிய தகவல்களை எதிர்வரும் இதழ்களிலும் வாசிக்க வேண்டும் என்ற பசியுடன் காத்திருக்கின்றேன்.

**அ.நிரஞ்சனா, கொழும்பு–13**

## மணிரத்தினம் பற்றி

இலங்கையில் தமிழ் இதழியல் துறையில் தரமான அரசியல் சஞ்சிகைக்கு இருந்த குறைபாட்டை நிவர்த்தி செய்யும் விதத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் "சமகாலம்" இதழுக்கு இதழ் மெருகேறிவருவதை அதன் படைப்புகள் மூலம் காணக்கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் 2012 டிசம்பர் 1-15 இதழில் வெளியாகியிருக்கும் இரண்டு ஆக்கங்கள் என்னை மிகவும் கவர்ந்தனவாக உள்ளன.

அதில் முதலாவது குமார் டேவிட் எழுதிய "பிரதம நீதியரசருக்கு எதிரான சூனிய வேட்டை மிகப்பெரிய சூழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கம்". இந்தக் கட்டுரையில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை ஆரம்பித்து அதன் பின்னணியில் இருக்கும் அரசின் வஞ்சகமான நோக்கங்கள் பற்றியும் விளைவுகள் பற்றியும் காலத்தின் நிலைமைக்கேற்ப ஆழமாக ஆராயப்பட்டிருக்கிறது. பல உள்ளார்ந்த விடயங்கள் இதன்மூலம் புடம்போட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன.

அடுத்ததாக கலையுலகம் பகுதியில் இந்திய திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் பற்றிய கட்டுரை வெளியாகியிருக்கிறது. இந்தியத் திரையுலகின் தன்னிகரற்ற தனித்துவமான இயக்குநரின் பக்கங்கள் இக் கட்டுரையில் அழகாக புரட்டிப் பார்க்கப்பட்டிருக்கின்றன. ஆழமான மனித உணர்வுகளைக்கூட குறைந்த வசனங்கள் மூலமும் நிறைந்த உணர்ச்சி வெளிப்பாடுகள் மூலமும் திரைப்படங்களில் உருவமைக்கும் மணிரத்தினம் என்ற சிற்பியின் தகவல்களை தந்தமைக்காக நன்றிகள் பல.

**டி.அய்யாக்கண்ணு, மோதரை, கொழும்பு 15**

## குமார் டேவிட்டின் தரமான ஆய்வுகள்

சுயநிர்ணய உரிமை என்றால் இதுதான் எனப் புரியவைத்த குமார் டேவிட் அவர்களுக்கு என் நன்றிகள். இக்கட்டுரை "கற்றுக்குட்டிகளுக்கான சுயநிர்ணய உரிமை தொடர்பான அரிச்சுவடி" என்று அவர் கூறியுள்ளதன் மூலம் அவரின் கட்டுரைகளை மேலும் படிக்க வேண்டுமென்ற ஆவல் எழுந்துள்ளது.

**எஸ்.பரமேஸ்வரி, கல்கிஸை.**

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

## பரபரப்பை நாடும் ஊடகங்கள்

பரபரப்பை நாடும் ஊடக கலாசாரம் பறித்தெடுத்த அப்பாவியின் உயிர் என்ற கட்டுரையைப் படித்த போது இப்படியும் கீழ்த்தரமான ஊடகங்களா என்ற அருவருப்பே ஏற்பட்டது. அதுமட்டுமன்றி ஜெசிந்தா சுல்தானா தெரியாமல் செய்த தவறை வைத்துக் கொண்டு அவரை தற்கொலை செய்யுமளவுக்கு தூண்டிய சக ஊழியர் கதையும் தண்டிக்க வேண்டும்.

ஊடகங்கள் தமது பொறுப்புகளை மறந்து விட்டன. பரபரப்பான செய்திகள் தான் இன்று இவற்றின் உயிர் மூச்சாகவுள்ளன. தமது பரபரப்புச் செய்திகளினால் எத்தனை பேர், எத்தனை குடும்பங்கள், இனங்கள் பாதிக்கப்படுகின்றனவென்பதை இந்த ஊடகங்கள் சிந்திப்பதே இல்லை. ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரை தமது பெயர், படம் பிரபலமானால் போதும், அதற்காக எதையும் செய்யத் தயங்காதவர்களாகவே உள்ளனர்.

பிரிட்டிஷ் இளவரசி டயானாவைக்கூட பப்பராசிகள் விரட்டி விரட்டி படம் பிடித்தே கொன்றார்கள். இப்படியும் ஒரு கேவலமான இன்னொரு உயிரின் அல்லது குடும்பத்தின் அழிவு மூலம் பிரபலம் தேடவேண்டுமா? எமது நாட்டில் கூட சில வானொலிகள் இது போன்ற அருவருப்பான நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. அவர்கள் முதலில் இக்கட்டுரையைப் படிக்க வேண்டும். ஊடகங்களுக்கு உறைக்கும் வகையில் கட்டுரையை அழகுற எழுதிய அபர்ணாவுக்கு எனது பாராட்டுகள். ஜெசிந்தா சுல்தானாவின் மறைவுக்கு சமகாலத்தினூடாக என் அனுதாபங்கள்.

**ஜெ.மகிஷா, கொழும்பு-4.**

## ரஜினிகாந்தும் அரசியலும்

சமகாலம் இறுதி இதழில் வெளிவந்திருக்கும் முத்தையா காசிநாதன் எழுதியுள்ள "ரஜினிகாந்த அரசியலுக்கு வருவார் ஆனால் வரமாட்டார்.." என்ற கட்டுரையைப் படித்தேன். ரஜினிகாந்தின் 63 ஆவது பிறந்ததினம் கடந்த 12 ஆம் திகதி குதூகலமான முறையில் கொண்டாடப்பட்ட பின்னணியில் ரஜினியின் அரசியல் பிரவேசம் தொடர்பில் மீண்டும் பரபரப்பான தகவல்கள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. இந்தப் பின்னணியில்தான் இந்தக் கட்டுரை முக்கியத்துவம் பெறுகின்றது.

அரசியல் என்ற பேருந்தை 1996 இல் தவறவிட்ட ரஜினி, 2006 இலும் கோட்டைவிட்டு நிற்கிறார் என்பதே நிஜம் எனக்குறிப்பிடும் கட்டுரையாசிரியர், இந்த பிறந்தநாளில் மீண்டும் அரசியலுக்கு வருவேன் என்பதை அவர் சூசகமாக அறிவித்திருப்பது விரைவில் ரிலீஸாகவுள்ள கோச்சடையான் வசூலைப் பெருக்கவே என்று சொல்வோரும் உண்டு என முடித்திருக்கின்றார். ஆனால், இது ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு வாதமாகத் தெரியவில்லை. இதேவேளையில், அமெரிக்கை நாராயணன் எழுதியுள்ள கட்டுரை சிறிதாக இருந்தாலும் நல்ல கருத்து ஒன்றை முன்வைக்கின்றது. "அன்று ரஜினிக்கு ஏற்ற காலம் வந்தது. ஆனால் ரஜினி முடிவு எடுக்கவில்லை. இன்று அதுபோன்ற சூழ்நிலை இல்லை என்பதே உண்மை" என அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.உண்மையில் 1996இல் தெளிவான ஒரு முடிவை எடுப்பதற்கு ரஜினி தவறிவிட்டார். அப்போது அவர் முடிவை எடுத்திருந்தால் அரசியலில் ஒரு இடம் கிடைத்திருக்கும். இப்போது அவருக்கு ஏற்ற சூழ்நிலை இல்லை.

**எம்.நமசிவாயம், 37 ஆவது வீதி, வெள்ளவத்தை.**




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 13

**2013, ஜனவரி 01 - 15**


A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி :** +94 11 7322700
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



புரட்சி என்பது றோசா மலர்ப்படுக்கையல்ல. எதிர் காலத்துக்கும் கடந்த காலத்துக்கும் இடையேயான ஒரு போராட்டமே புரட்சி.
-பிடல் காஸ்ட்ரோ

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

# வாக்குமூலம்....

அதிகாரங்கள் ஒருவரிடம் குவியும் போது அதிகார துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. அதிகாரம் ஊழலுக்கு வழிவகுக்கிறது. முற்றுமுழுதான அதிகாரம் முற்றுமுழுதான ஊழலுக்கு வழிவகுக்கிறது. சரத்பொன்சேகாவைப் போன்று இராணுவப் பின்னணி கொண்ட ஒருவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், இராணுவ சர்வாதிகாரம் வந்துவிடும். இராணுவ சர்வாதிகார ஆபத்து இப்போதே ஓரளவு காணப்படுகின்றது. அது மேலும் அதிகரித்துவிடும். அதனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தேயாக வேண்டும்.



சிரேஷ்ட அமைச்சர்
பேராசிரியர் திஸ்ஸ விதாரண

இடதுசாரித் தலைவர்களான டியூ குணசேகரவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் வாசுதேவ நாணயக்காரவும் இப்போது துணிச்சலான அறிக்கைகளை ஊடகங்களுக்கு விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவையிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைவர்கள் மட்டத்திலும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்ட போது இந்த இடதுசாரித் தலைவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர். தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை இப்போது கண்டிக்கும் இந்த மூன்று புத்திசாலிக் கிழவர்களும் பாராளுமன்றத்தில் குற்றப்பிரேரணை தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பார்களா?



லக்ஷ்மன் கிரியெல்ல
ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி.

குற்றப்பிரேரணைக்கு எதிரான எதிர்ப்புகள் சர்வதேச மயப்படுத்தப்பட்டும் அரசியல் மயப்படுத்தப்பட்டுமிருப்பதால், பிரதம நீதியரசர் திருமதி பண்டாரநாயக்க பதவியை விட்டு விலக வேண்டும். பொது நலவரசிடமிருந்தோ, ஐக்கிய நாடுகளிடமிருந்தோ, ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்தோ, அமெரிக்கா அல்லது இங்கிலாந்திடமிருந்தோ (பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணைக்கு) வருகின்ற எதிர்ப்புகள் இலங்கை பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிட்ட போது கிளம்பிய எதிர்ப்புகளைப் போன்றவையே.



உதய கம்மன்பில
மேல்மாகாண அமைச்சர்

நாட்டுப் பிரிவினையை வேண்டி நின்றவர்கள் இப்போது நீதித்துறையை நிர்மூலஞ் செய்ய கங்கணம் கட்டி நிற்கிறார்கள். மேற்கத்தைய நாடுகள் எமது நீதித்துறையை நிர்மூலஞ் செய்வதற்கு சதி செய்துகொண்டிருக்கின்றன. அடுத்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகப் பொய்யான போர்க் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருவதற்கு திட்டம் தீட்டப்படுகிறது.



வீடமைப்பு அமைச்சர்
விமல் வீரவன்ச

கற்பனாவாத விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் சர்வதேச ரீதியில் நிலைத்திருக்கும்வரை, இலங்கை ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் ஜெனீவாவுக்குப் போய் நிலைவரங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேயிருக்கும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து ஓய்வுபெற்றாலும் கூட, அவர் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்று எரிக்சொல்ஹெய்ம் கூறியிருக்கிறார்.



அமைச்சர் டலஸ்
அழகப்பெரும

பிரதம நீதியரசரின் கதி எப்போதோ தீர்மானிக்கப்பட்டு விட்டது. ஷிராணி பண்டாரநாயக்க நடத்தப்படுகின்ற முறையை நோக்கும் போது, ஒரு அவுன்ஸ் சுயமரியாதை இருக்கிற எந்தவொருவருமே புதிய பிரதம நீதியரசர் பதவியை ஏற்கமாட்டார். அவ்வாறு ஒருவர் அந்தப் பதவியை ஏற்றால், அவர் இருக்கும் உச்ச நீதிமன்ற அமர்வில் நான் யாருக்காகவும் வழக்கில் வாதாடமாட்டேன். மற்றைய உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் அமர்வுகளில் மாத்திரமே நான் வாதிடுவேன்.



எஸ்.எல்.குணசேகர
சிரேஷ்ட சட்டத்தரணி

செய்திச்சரம்

# தலைமை வாரிசுத்தகராறு



கலைஞர் மு.கருணாநிதிக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்குரிய வாரிசு யார் என்பதில் அவரின் மகன்மாருக்கு இடையிலான தகராறு தீர்ந்தபாடாக இல்லை.

மீண்டும் அது தொடர்பில் மூண்டிருக்கும் தகராறுக்கு கலைஞர் வெளியிட்ட கருத்தே காரணமாகவும் அமைந்து விட்டது. கடந்த மூன்றாம் திகதி கழகத் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய கருணாநிதி, "நான் சாகும்வரை சமூகத்தின் மேம்பாட்டுக்காகப் பாடுபடுவேன். எனக்குப் பிறகு யார் என்ற கேள்விக்கான பதில் ஸ்ராலினே. அவர் உங்கள் மத்தியில் இருக்கிறார். அதை மறந்துவிடாதீர்கள்" என்று கூறினார்.

88 வயதான கலைஞர் தனது அரசியல் வாரிசு ஸ்ராலின் தான் என்பதை ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் சூசகமான தகவல்கள் மூலமாகத் தெரிவித்துவந்திருக்கிறார். அதனால் மூத்த மகன் மு.க.அழகிரி ஆத்திரமடைந்துண்டு. அழகிரிக்கு ஆதரவான முகாம் என்றும் ஸ்ராலின் ஆதரவு முகாம் என்றும் கழகத்திற்குள் இருமுகாம்கள் இருக்கின்றன என்ற போதிலும் மத்திய அமைச்சராக இருக்கும் அழகிரியின் முகாமில் செல்வாக்கை முறியடிக்கும் முயற்சிகளில் அண்மைக்காலத்தில் ஸ்ராலின் வெற்றியடைந்து வந்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

59 வயதான ஸ்ராலினுக்கு கழகத்திற்குள் முக்கிய அந்தஸ்து கொடுக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு அவர் தமிழகத்தின் துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்டபோது, கருணாநிதிக்கு அடுத்தது அவரே என்பது உணர்த்தப்பட்டது. ஸ்ராலின் துணை முதலமைச்சர் என்றால் தனக்குத் துணையாக இருக்கும் முதலமைச்சர் என்பது தான் அதன் அர்த்தம் என்று கருணாநிதி தனக்கேயுரித்தான பாணியில் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார்.

ஸ்டாலினை விடவும் இரண்டு வயது மூத்தவரான அழகிரி மதுரையை மையமாகக் கொண்டு தமிழகத்தின் தென் மண்டலத்தில் தனது செல்வாக்கை வலுப்படுத்தி வந்தவர். தலைமைவாரிசு ஸ்ராலின் தான் என்று கலைஞர் சூசகமாகத் தெரிவித்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அழகிரி தனது தந்தையாரைத் தவிர வேறுயாரையும் தலைவராகத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

தென் மண்டலத்தில் கழகத்தின் பதவிகளுக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படும் விடயத்தில் தனது சிபாரிசுகள் அலட்சியம் செய்யப்பட்டு வருவதாகவும் கூட, அழகிரி குறை கூறியிருந்தார். குறிப்பாக ஸ்ராலின் தலைமையிலான தி.மு.க.இளைஞர் அணியின் பதவிகளில் அழகிரியின் ஆட்களுக்குப் பெரும்பாலும் இடமில்லை என்பதே நிலைமை.

எனக்குப் பிறகு ஸ்ராலினே என்று இறுதியாக கலைஞர் தெரிவித்திருக்கும் தெளிவான கருத்து தொடர்பாக சென்னை விமான நிலையத்தில் அழகிரியிடம் கேட்கப்பட்டபோது அடுத்த தலைமைக்குரியவரை நியமனம் செய்வதற்கு தி.மு.க.ஒன்றும் மடாலயம் அல்ல என்று பதிலளித்திருக்கிறார். தி.மு.க. ஒரு சங்கர மடாலயம் அல்ல என்று ஒரு தடவை தந்தையார் கூறியிருப்பதையும் அழகிரி நினைவுபடுத்தியிருக்கிறார்.

# மியன்மாரில் மீண்டும் தனியார் பத்திரிகைகள்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் தனியார் துறையினர் செய்திப்பத்திரிகைகளை வெளியிடுவதற்கு அனுமதியளிக்கப்போவதாக மியன்மார் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

தினசரி செய்திப் பத்திரிகையொன்றை வெளியிடுவதற்கு விரும்பும் எந்தவொரு மியன்மாரின் தனி நபருமோ தனியார் நிறுவனமுமோ அதற்கான அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை பெப்ரவரியில் சமர்ப்பிக்க முடியும் என்று அந்த நாட்டின் தகவல் திணைக்களம் அதன் இணையத்தளத்தில் அறிவிப்புச் செய்திருக்கிறது. எந்தவொரு மொழியிலும் செய்திப் பத்திரிகைகளை வெளியிடுவதற்கு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் அனுமதிக்கப்படும்.

1964 ஆம் ஆண்டுக்குப் பிறகு மியன்மாரில் முதற்தடவையாக தனியார் பத்திரிகைகளை வெளியிட அனுமதிக்கப்படவிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் பதவியேற்றதற்குப் பிறகு ஜனாதிபதி தீய்ன்சீன் அறிமுகப்படுத்த ஆரம்பித்த பரந்தளவிலான ஜனநாயக சீர்திருத்தங்களின் ஒருபகுதியாக பத்திரிகைச் சுதந்திரத்துக்கு வாய்ப்பளிக்கும் ஒரு ஏற்பாடாகவே இந்த நடவடிக்கை அமைந்திருக்கிறது.

ஊடகங்கள் மீதான நேரடித் தணிக்கையை கடந்த ஆகஸ்டில் ரத்துச் செய்த அரசாங்கம் ஊடகவியலாளர்கள் தங்களின் செய்திகளை பிரசுரத்துக்கு முன்னதாக அரசாங்க தணிக்கைக்குழுவுக்கு இனிமேல் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றும் அறிவித்தது.



தற்போது மியன்மாரில் அரசாங்கக் கட்டுப்பாட்டில்தான் செய்திப்பத்திரிகைகள் வெளியாகின்றன. அவை அரசாங்கத்தின் ஊதுகுழலாகவே செயற்படுகின்றன. இவற்றில் 180 க்கும் அதிகமானவை வாராந்த வெளியீடுகள்.

தனியார் நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட பர்மிய, ஆங்கில, இந்திய, சீன மொழிகளிலான தினசரிப்பத்திரிகைகள் ஒரு காலத்தில் மிகவும் துடிப்பானவையாக விளங்கின. காலஞ்சென்ற சர்வாதிகாரி தீவின் 1964 இல் தனியார் தொழில்துறைகளை தேசியமயமாக்கியபோது அவை மூட நிர்ப்பந்திக்கப்பட்டன.

# அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையில் முதல் இந்து



அமெரிக்க காங்கிரஸ் சனப்பிரதிநிதிகள் சபையில் முதற்தடவையாக இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவர் உறுப்பினராகியிருக்கிறார். அத்தகைய சாதனையைப் படைத்த பெருமைக்குரியவரான ஹவாயைச் சேர்ந்த ருல்சி கபார்ட் என்ற 31 வயதான பெண்மணி, சபாநாயகர் ஜோன் போஹ்னர் முன்னிலையில் பகவத்கீதை மீது பதவிப்பிரமாணம் செய்து சரித்திரத்தையும் படைத்திருக்கிறார். என்னிடம் இருக்கும் பகவத்கீதை பிரதி மீது பதவிப் பிரமாணம் செய்வதற்கு நான் தீர்மானித்ததற்குக் காரணம் அதன் போதனைகளே. என்னை மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு தலைதூவராக வருவதற்கு உத்வேகத்தைத் தந்தன. மற்றவர்களுக்கும் நாட்டுக்கும் சேவை செய்ய என்னை நான் அர்ப்பணித்ததற்கு பகவத்கீதையே தூண்டுகோலாக இருந்தது என்று பதவிப் பிரமாணத்தின் போது வாஷிங்டனில் ஜனவரி 4ஆம் திகதி அவர் கூறியிருந்தார்.

தான் ஒரு பல கலாசார, பல இன, பலமத குடும்பத்தில் வளர்ந்தவள் என்றும் தனது தாயார் ஒரு இந்து, தந்தையார் கத்தோலிக்கப் போதகர் என்றும் ருல்சி கபார்ட் கூறினார்.

விருந்தினர் பக்கம்

# தகவல் அறியும் உரிமையின் அவசியம்

காணிப்பிரச்சினைகளுக்கு கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக் குழு (LLRC) மிக முக்கிய இடத்தை வழங்கியுள்ளது. இது மிகவும் பொருத்தமானது. தனிப்பட்ட தேவைகளைத் திருப்திப்படுத்தும் நீண்ட பயணத்தில் காணி உரிமை - காணிப் பயன்பாடு, தொடர்பான பிரச்சினைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. நல்லிணக்கம் தொடர்பான தேசியக் கொள்கை பற்றிய வரைபில் இயல்புநிலை என்று இதனை விபரிக்கின்றோம். இயல்புநிலை தொடர்பான பொது அம்சத்தைப் பொறுத்தவரை அரசாங்கம் நிறையவே செய்துள்ளது. பாரிய உட்கட்டமைப்புக் கருத்திட்டங்கள், வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாகவே இவை செய்யப்பட்டுள்ளன. சொத்துரிமை தொடர்பான நிச்சயத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலமே மனித கௌரவம் உத்தரவாதப்படுத்தப்பட முடியும்.

பிரதேச செயலக மட்டங்களில் நான் பங்கு பற்றிய அநேகமான நல்லிணக்கக் குழுக் கூட்டங்களில், அடிக்கடி காணிப்பிரச்சினைகளே முன்வைக்கப்பட்டன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைத் திட்டத்தின் ஏனைய அம்சங்கள் மிகக் குறைவாகவே கருத்திற் கொள்ளப்பட்டன. ஆனால், ஏற்கனவே ஏற்பட்ட காயங்களை குணப்படுத்தும் மனநிறைவை அடைவதாயின் ஏனைய விடயங்களுக்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

பொருட் தேவைகள் முதன்மையானவையாகவும் உடனடித்திருப்தியை ஏற்படுத்துபவையாகவும் அமையலாம். நடவடிக்கைத் திட்டத்தில் கவனம் செலுத்த வேண்டிய மற்றுமோர் அம்சம் உண்டு. ஏனைய பல பிரச்சினைகளுக்கான முக்கிய தீர்வு இங்கேயே தங்கியுள்ளது. தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இது பற்றிய காலவரையறை குறிப்பிடப்படவில்லை. இது தொடர்பான சட்டங்களை வரைவதற்கு பொருத்தமான காலவரையறையை அமைச்சரவை தீர்மானிக்க வேண்டுமென நடவடிக்கைத் திட்டம் கோருகின்றது. ஊடக அமைச்சு இதனைச் செயற்படுத்த வேண்டிய பொறுப்புவாய்ந்த முகவராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றுவதற்கான முக்கிய குறிகாட்டிகள் சுட்டிக் காட்டப்படவில்லை. சட்டவாக்கத்துறை, மேற்படி சட்டத்தை ஏற்றங்கீகரிக்கக்கூடிய வகையில், அமைச்சரவை அலுவலகம் தொடர்பு கொள்ளும் இணைப்பு மையமாகச் செயற்பட வேண்டும் என கருத்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்



பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க

நடவடிக்கைத் திட்டத்தை அங்கீகரிப்பதற்கு ஓர் ஆண்டு காலத்திற்கு முன்னரே தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டத்தை (National Human Rights Action Plan) நேர்மாறாக அமைச்சரவை அங்கீகரித்திருந்தது. அதேசமயம், தகவல் அறியும் உரிமையை அங்கீரிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டம் குறிப்பிட்டிருந்தது. அத்தோடு, இத்தகைய சட்டத்திற்குச் சட்ட அங்கீகாரம் வழங்குவதே முக்கிய நிறைவேற்றுக் குறிகாட்டியாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. நீதி அமைச்சு இதற்குப் பொறுப்பான முதன்மை முகவராக குறிப்பிடப்பட்டதோடு, ஓராண்டுகாலம் இதற்கென வழங்கப் பட்டிருந்தது.

இது தனக்குரிய பணி இல்லையென நீதி அமைச்சு கருதுவதோடு, ஊடக அமைச்சே இதனை நிறைவேற்றுதல் வேண்டுமென்பதை என்னால் புரிந்து கொள்ள முடியும். 2005 மஹிந்த சிந்தனைக்கு அமைய தயாரிக்கப்பட்ட உரிமைகள் பிரகடனச் சட்ட வரைபில் (Draft Bill of Rights) தகவல் பெறுவதற்கான உரிமை முக்கிய அம்சமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மாத காலத்திற்குள் மேற்படி வரைபை நீதி அமைச்சு மீளாய்வு செய்திருக்க வேண்டும். நீதி அமைச்சு - ஊடக அமைச்சு உட்பட ஏற்புடைய ஏனைய அமைச்சுகளையும் கலந்தாலோசித்து ஒரு நடவடிக்கைத் திட்டத்தை முன்வைத்திருக்க வேண்டுமென நான் உணர்கின்றேன். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைத் திட்டத்தை ஒளிவுமறைவின்றி பேசும் அணுகுமுறைக்கு மேற்படி நீதி அமைச்சின் தாமதம் இட்டுச் சென்றுள்ளது.

இது உண்மையில் துரதிர்ஷ்டமானது. ஏனெனில், நடவடிக்கைத் திட்டத்தின் ஏனைய அம்சங்கள் தகவல் பெறும் உரிமையை பொது மக்கள் சிறந்த முறையில் அணுகுவதற்கு வசதி செய்கிறது. அரச கொள்கைகளைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக் கும் தேவையுடன், இறந்தவர்கள், காணாமற் போனோர், தடுத்து வைக்கப்பட்டோர் பற்றிய தகவல்களை அறிவதும் மிகப் பொருத்தமானதே. அதிகாரிகள் முறையான தகவல்களைப் பராமரிப்பதை உறுதிப்படுத்துவதாயின், மேற்படி தகவல்களை பொதுமக்கள் அடையக் கூடியதாக அமைதல் வேண்டும்.

எவ்வளவு தூரத்திற்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைத்திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது என்பதை எவரும் அறியாத நிலையில் உள்ளனர். இதுவே இக்கருத்து வேறுபாடுகளுக்கான சிறந்த சான்றாதாரமாகும். அமுலாக்கத்திற்கு யார் பொறுப்பு என்பது பற்றி ஓர் உறுதியற்ற தன்மையே காணப்படுகிறது. நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தவர்களே அதன் அமுலாக்கத்திற்கும் பொறுப்பானவர்கள் என ஊகிக்கப் பட்டாலும், ஒரு செயலணி பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டாலும், முன்னேற்றம் பற்றி எதுவித பதிவான தகவல்களும் கிடையாது. தன்நம்பிக்கையுடன், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இடைக்காலப் பரிந்துரைகளைச் செய்த போதும், அவற்றில் ஒரு சில பரிந்துரைகளே அமுலாக்கப்பட்டதையும் இவ்விடத்தில் ஞாபகமூட்ட வேண்டியுள்ளது.

இது வேண்டுமென்றே செய்யப்பட்டது என நான் நம்பவில்லை. இப் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு அமைச்சுகளுக்கிடையேயான செயற் குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது. இச் செயற்குழு செயற்படுகிறது எனவும் நம்பப்பட்டது. மேற்படி செயற்குழு கூட வில்லை என்பதையும் எதுவிதமான பதிவுகளும் இல்லை எனவும் உணர்ந்தபோது, ஜனாதிபதி வியப்படைந்தார். ஒன்றுமே நடைபெறவில்லை என்பது இதன் அர்த்தமல்ல. ஆனால், அரசாங்கத்தின் ஏனைய அங்கங்கள் அறிவுறுத்தப்படவில்லை. பொது மக்களுக்கும் அறிவிக்கப்படவில்லை. அமுலாக்கம் சீரானமுறையில் இடம் பெறவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு குறிப்பிட்டவாறு பல இடைவெளிகள் காணப் பட்டன.

இலங்கை தொடர்ந்தும் காலனித்துவ மனோநிலையில் இறுகியிருப்பதே பிரச்சினையாகும். அரசாங்கம் உயர்ந்தோர் குழாமாக (elite) பாதுகாக்கப்படுகிறது. ஆளப்படுவோருக்கு தமது நடவடிக்கைகளை அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என அரசாங்கம் கருதுகின்றது. நீண்ட காலத்திற்கு முன்னர் தொடர்பாடல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போது அது பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால், மேற்படி அணுகுமுறை இன்று கண்டிக்கத்தக்கது. எவ்வாறாயினும் உண்மையான நடைமுறையில் இத்தகைய நடத்தைப்போக்குக் காரணமாக நவீனத் தொடர்பாடலின் வேகம் காரணமாக தகவல்கள் துரிதமாகப் பயணிப்பதால், இலங்கை பற்றிய தகவல்களும் வேகமாகக் கசிகின்றன. எனவே, அரைகுறை உண்மைகள் காரணமாக முன்னெடுக்கப்படும் பரப்புரைகளால் அரசாங்கம் பாரிய அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றது.

ஒட்டுமொத்தமான வெளிப்படைத் தன்மையே இதற்கான மிகச் சிறந்த பாதுகாப்பாகும். ஒழுங்காகவும் பொருத்தமாகவும் ஊடகங்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். 'தென்னாசியாவின் நல்லாட்சிக்கான சவால்களின் வெளிப்பாடு' என்ற தலைப்பில் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் நான் இதனை ஒரு பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தேன். அந்தரங்கத்தன்மை கட்டாயமாக பேணப்பட வேண்டும் என்ற நிலைமைகளைத் தவிர, ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும், ஆளப்படுவோருக்கு அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் அறிவிப்பது முதன்மைக் கோட்பாடாக அமைதல் வேண்டும். நம்பிக்கைக் குறைபாடுகள் இணைக்க வேண்டிய சகல சந்தர்ப்பங்களிலும் வெளிப்படைத் தன்மை மிக இன்றியமையாதது. தீர்

மானங்களை மேற்கொள்வோருக்கும் சமூகத்திற்கும் இடையில் பாரியளவில் வெளிப்படைத் தன்மையையும் ஒழுங்கான தொடர்பாடலையும் முன்னெடுப்பதன் மூலமுமே இது சாத்தியமாகும்.

இதற்கு மேலதிகமாக இந் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட பல்வேறு முகவர்களுக்கிடையில் ஒழுங்கான தொடர்பாடல் கட்டாயத்தேவையாகும். தற்போது எம்மிடையே நிலவும் முறைசாரா காப்பீடுகள் மீது நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக, சரியான பதிவுகளை நாம் பேணினால் இடைவெளிகளில் காணப்படும் குறைபாடுகள் மீது நாம் விழிப்பாக இருக்க முடியும். உதாரணமாக கிழக்கு மாகாண பிரதேச செயலகமொன்றில் நான் பங்குபற்றிய கூட்டமொன்றில், ஒட்டுமொத்தமான அனைத்து முஸ்லிம் சமூகமும், ஆணைக்குழு பரிந்துரைகளில் தாம் முற்றிலும் மறக்கப்பட்டு விட்டதாகக் கூறியபோது நான் வியப்படைந்தேன்.

இத்தகைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கே நடவடிக்கைத் திட்டம் உருவானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முஸ்லிம் இடம்பெயர்ந்தோர் பற்றி, ஒரு கொள்கையைத் தயாரித்து, வடக்கு கிழக்கிற்கான ஜனாதிபதிச் செயலணியிடம் ஒப்படைப்பது பிரதான நோக்கமாகும். பிரச்சினை என்னவென்றால் அத்தகைய ஜனாதிபதிச் செயலணி கிடையாது. தற்போது இயங்கும் செயலணி வடமாகாணத்தின் மீது மாத்திரம் தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றது. இதனை நான் தவறாகப் புரிந்து கொண்டேனோ தெரியாது. அண்மையில் தனது அடைவுகளை பதிவுசெய்துள்ள கவர்ச்சிகரமான பிரசுரம் அவ்வாறே எடுத்துக் கூறுகிறது.

அதேசமயம் வடக்கு, கிழக்கிற்கென மற்றுமோர் செயலணி மெய்யாகவே இருக்கலாம் என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது. அமுலாக்கல் கொள்கையை உருவாக்குவதற்கான காலம் கடந்துவிட்டது. ஆனால், இது விடயமாக என்ன நடக்கப் போகின்றது என்பது பற்றி கிழக்கின் முஸ்லிம்கள் ஒன்றும் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். மிக நுட்பமாக நோக்குகையில் காணிப்பிரச்சினையையிட்டு உறுதிப்படுத்தப்படாத ஒரு செயலற்ற தன்மையே நிலவுவதாகத் தோன்றுகின்றது. சுற்று நிருபம் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற வேண்டும் என நடவடிக்கைத் திட்டம் திட்டவட்டமாகக் கூறுகின்றது. ஆனால், துரதிர்ஷடவசமாக மேற்படி சுற்றுநிருபத்திற்கு நீதி மன்றத்தில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டபடியால் தற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆத்மா விரும்பினாலும் உடம்பு இடம் கொடுக்க வில்லை (the spirit willing but the flesh is weak) என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட சுற்றுநிருபத்திற்கு மாற்றீடாக மற்றுமோர் சுற்றுநிருபத்திற்கு பரந்த அடிப்படையில் உடன்பாடு காணப்பட்டுள்ளது என சில மாதங்களுக்கு முன்னர் காணி அமைச்சில் இடம் பெற்ற கூட்டத்தின் போது எனக்கு உறுதிமொழி கூறப்பட்டது. மேற்படி நடவடிக்கையை செயற்படுத்த முடியும். ஆனால், இதுவரை எதுவித வரைபும் முன்வைக்கப்படவில்லை. முன்னைய அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுமாறு அதிகாரிகள் பணிக்கப்பட்டாலும், கள நிலைமைகளில் குழப்பம் நிலவுவதால், முன்னேற்றம் மிக மந்தகதியிலேயே இடம்பெறுகிறது.


எனவே, இலக்கை நிறைவேற்றுவதற்கு முழு நேரமாகச் செயற்படும் முகவரிடம் நடவடிக்கைத் திட்டத்தை அமுலாக்கும் பொறுப்பை அரசாங்கம் கையளிப்பது இன்றியமையாதது. இக் குறிக்கோளை அடைவதற்கு ஓர் அமைச்சு நிறுவப்படுவது சாலப் பொருத்தமாகும். மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டத்துடன் மறைக்கச் செய்வதைத் தடுப்பதற்கு, மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவரும், அமைச்சுகளிடையேயான செயற்குழுவின் தவிசாளருமான அமைச்சரிடம் நடவடிக்கைத் திட்டத்தை கண்காணிக்கும் பொறுப்பை ஒப்படைக்கலாம். இதற்கு மாற்றீடாக பொது நம்பிக்கைக்குப் பாத்திரமான சிரேஷ்ட அமைச்சரிடம் இப்பொறுப்பை ஒப்படைக்கலாம்.

உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இப்பொறுப்பு நிலவ வேண்டுமெனக் கருதப்பட்டால், மனித உரிமைகளைப் போன்று, முறைப்படியாக ஜனாதிபதி அமைச்சராகப் பொறுப்பு வகிக்கக் கூடிய வகையிலும், அவரது பிரதி அமைச்சராகச் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை நியமிக்கலாம். அண்மையில் சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம, கனிஷ்ட நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சிறந்த முன்னுதாரணம் எம்மிடம் உண்டு. மேற்படி இருவழிகளில் எதனைக் கடைப்பிடித்தாலும் செயல்திறன் மிக்க செயலாளர் மிக முக்கியத்துவம் வாய்ந்தவராவார். ஒரு முகாமைத்துவக் கருவி என்ற வகையில் திட்ட அமுலாக்கம் குறித்தும் ஆவணங்களைச் சிறந்த முறையில் பராமரிக்கவும் இவர் வல்லவராயிருத்தல் வேண்டும். உடனுக்குடன் தகவல்களைப் பெறக் கூடிய வகையிலும் பொது மக்களின் கூர்ந்தாய்வுக்கு உட்படுத்துவதன் மூலம், திட்டம் முழுமையாகவும் அரிதாகவும் செயல் திறனுடனும் நிறைவேற்றப்பட வேண்டும்.

# யாழ்ப்பாணக் 1970களின்

**விடுதலைப்புலிகள் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள் என்று காட்டுவது அரசாங்கத்தினதும் தமிழர்கள் மத்தியிலுள்ள தீவிரவாத சக்திகளினதும் வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு பொருத்தமானதாக இருக்கக்கூடும். தெரிந்தோ தெரியாமலோ தமிழ் இளைஞர்கள் இந்தப் பொறியில் வீழ்ந்துவிடக்கூடாது**

இலங்கையின் இன உறவுகள் என்று வரும் போது அதில் பல்வேறு கட்டங்கள் இருக்கின்றன. கடந்த நவம்பர் 27 ஆம் திகதி அதில் ஒரு முக்கியமான மைல்கல்லாக அமைந்துவிட்டது. நாற்பது வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வுகளை இன்னமும் நினைவில் வைத்திருப்பவர்களுக்கு இது ஏற்கனவே அனுபவித்தவற்றின் ஒரு மீள் நிகழ்வேயாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மாவீரர் தினத்தை வளாகத்திற்குள் அனுஷ்டித்தனர். பாதுகாப்புப் படையினர் மாணவிகளின் விடுதிக்குள் பிரவேசித்து அவர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். மறுநாள் பல மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். இலங்கைப் பொலிஸின் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் நான்கு பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்தனர். அடுத்து வேறு 40 இளைஞர்களும் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். விடுவிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மாணவர் ஒருவரைத் தவிர, அவர்களில் எவருமே நீதிமன்றங்களின் முன் ஆஜர்செய்யப்படவில்லை. அபகீர்த்திமிக்க பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்



உள்நாட்டு அரசியல்

# கைதுகள் மறு ஆட்டம்



எம்.ஏ.சுமந்திரன் எம்.பி

அவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்ப தாகத் தோன்றுகிறது. இந்த மாணவர் கள் கேட்டுக் கொண்டதன் பிரகாரம், "புனர்வாழ்வுக்கு" அனுப்பப்பட்டி ருப்பதாக பாதுகாப்பு உயரதிகாரிகள் கூறுகிறார்கள்.

சரித்திரத்தின் பின்புலத்தில் இந்த நிகழ்வுப் போக்குகளை மதிப்பீடு செய்யவேண்டியது முக்கியமான தாகும். நாற்பதுவருட காலச் சக்கரம் மீது கவனம் செலுத்தாமல் எம்மால் இருக்கமுடியவில்லை. 1970களின்

ஆரம்பத்தில் தேசிய வாழ்வில் இருந்து இந்த நாட்டின் தமிழர்கள் மிகவும் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஒதுக்கப்பட்டார்கள். கொழும்பு நவரங்க ஹல மண்டபத்தில் பெரும் பான்மை வாக்குகளினால் ஒரு அரசி



யலமைப்பு உருவாக்கப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் பிரேரிக்கப்பட்ட ஒவ்வொரு தீர்மானமும் பெரும்பான்மை வாக்குகளைப் பயன்படுத்தி தோற்கடிக்கப்பட்டது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் எம்.பி.க்களான தியாகராஜா, அருளம்பலம் மற்றும் ஆனந்த சங்கரியைத் தவிர, தமிழரசுக் கட்சியின் எம்.பி.க்கள் அந்த அரசியல் நிருணய சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். பாராளுமன்றத்தில் காங்கேசன் துறைத் தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது எம்.பி.பதவியை இராஜினாமா செய்தார். தனது கட்சி எடுத்த முடிவை அதாவது, முதலாவது குடியரசு அரசியலமைப்பை தமிழ் மக்கள் நிராகரித்திருக்கிறார்கள் என்பதை நிரூபித்துக் காட்டத் தன்னால் முடியுமென்று அன்றைய அரசாங்கத்துக்குச் சவால்விடுத்த செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத் தேர்தலை நடத்துமாறு கேட்டுக் கொண்டார்.

அந்த இடைத்தேர்தலை நடத்துவதை அரசாங்கம் இருவருடங்கள் தாமதித்தது. ஆனால், இறுதியில் தேர்தல் நடத்தப்பட்ட போது அதிகப்பெரும்பான்மை வாக்குகளினால் செல்வநாயகம் வெற்றி பெற்றார். இந்த நிகழ்வுக்குச் சமாந்தரமாக அந்தக் கால கட்டத்தில் வேறு நிகழ்வுப் போக்குகளும் இடம்பெறத் தொடங்கியிருந்தன. பல்கலைக்கழக அனுமதிக்கென அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறை மூன்றாம் நிலைக் கல்விக்கான தமிழ் இளைஞர்களின் நம்பிக்கைகளைச் சிதறடித்தது. இந்த மாணவர்களில் பலர் வெளிநாடுகளில் சென்று, குறிப்பாக இங்கிலாந்துக்குச் சென்று கல்வி கற்பதற்காக அவர்களின் பெற்றோர் காணிகளை விற்றனர், அல்லது ஈடு வைத்தனர். இத்தகைய அந்நியப்படுத்தலினால் விரக்தியுற்ற மாணவர்களில் பலர் இங்கிலாந்தில் இயக்கங்களை ஆரம்பித்தனர். இதுவே முதன்முதலான தீவிரவாதக் குழுக்களாக உருவெடுத்தன. ஈழ மாணவர்கள் பொது ஒன்றியம், ஈழ புரட்சிகர மாணவர் அமைப்பு (ஈரோஸ்) ஆகியவை இதற்கு உதாரணங்கள். இவையிரண்டும் மாணவர் அமைப்புகள் என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிறகு விடுதலைப் புலிகள் தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டதை இந்த வளர்ச்சிப் போக்குகளின் ஒரு அங்கமாகவே பார்த்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

முதலில் நேர்மையற்ற முறையில் தமிழ் இளைஞர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை அரசாங்கம் நிராகரித்தது. பிறகு அவர்கள் ஜனநாயக வழி முறைகளில் தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டிய போது கைது செய்து நீதி விசாரணை எதுவுமின்றி அவசர காலச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்களை அரசாங்கம் சிறையில் அடைத்தது. இத்தகைய ஒடுக்கு முறை நடவடிக்கைகள் 1970களின் நடுப்பகுதியில் தமிழ் இளைஞர்களை தீவிரமான போராட்ட முறைகளை நாடுவதற்கு நிர்ப்பந்தித்தது. நாற்பதுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் நான்கு வருடங்களுக்கும் கூடுதலான காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கொழும்பில் அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாடு நடைபெறவிருந்ததற்கு முன்னதாக சிறைகளில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியதையடுத்து அவர்களை அரசாங்கம் விடுதலை செய்ய முன்வந்தது. பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராஜா அவர்களில் ஒருவர்.

ஆனால், பிறகு ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசாங்க காலத்தில் பயங்கரவாதத்தை 6 மாதங்களில் நசுக்குவதற்கென்று பிரிகேடியர் வீரதுங்கவின் தலைமையில் வடக்கிற்கு இராணுவம் அனுப்பப்பட்டதையடுத்தே தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் தீவிரம் காட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். மாலை வேளைகளில் சந்திகளில் கூடி நின்ற இளைஞர்கள் சுற்றி வளைக்கப்பட்டு, ஈவு இரக்கமின்றித் தாக்கப்பட்டார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்கள். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் பல்வேறு தீவிரவாத இயக்கங்களில் இணையத் தொடங்கினார்கள். இவர்களில் பலர் மத்தியகிழக்கிற்குச் சென்று கெரில்லா போர் முறைகளில் பயிற்சி பெற்றார்கள். திரும்பி வந்த அவர்கள் ஒடுக்கு முறையில் ஈடுபட்ட இராணுவத்திற்கு எதிராக தாக்குதலை நடத்திவிட்டு தப்பியோடும் தந்திரோபாயத்துடனான போராட்டங்களில் ஈடுபட்டார்கள்.

1983 ஜூலையில் நாடுபூராகவும் தமிழர்களுக்கு எதிராக அரசாங்கத்தின் அனுசரணையுடன் கட்டவிழ்த்து விடப்பட்ட பரந்தளவிலான வன்முறையே தமிழ் இளைஞர்களை ஆயிரக்கணக்கில் தீவிரவாத இயக்கங்களில் இணைய நிர்ப்பந்தித்தது. இது மறுக்கமுடியாத உண்மை. தமிழர்களுக்கெதிரான அரசின் கொடுமைகளின் நேரடி விளைவாகவே 1983க்குப் பின்னரான தமிழ்த் தீவிரவாதத்தை நோக்க வேண்டும். தீவிரவாதக் குழுக்களினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரத்துக்கான குற்றப் பொறுப்பில் இருந்து எந்தவொரு குழுவையும் விடுவிக்கும் நோக்குடன் இதை நான் கூறவில்லை. ஆனால், இந்த மோசமான நிலைவரத்தை ஏற்படுத்தியதில் முக்கியமான பங்கை அரசாங்கமே வகித்தது என்பது நிச்சயமானது.

வன்முறையும் எதிர்வன்முறையும் 2009 மே மாதம் வரை ஆயிரக்கணக்கான இலங்கையரை விழுங்கிவிட்டன. விடுதலைப் புலிகளை மாத்திரமல்ல, பல்லாயிரக்கணக்கான தமிழ்க்குடி மக்களையும் ஒழித்துக் கட்டுவதற்கு அரசாங்கம் அதன் இராணுவ வல்லமையைப் பயன்படுத்தியது. இதற்கு இன்னமும் கூட அரசாங்கம் பொறுப்புக் கூறவில்லை. 2009

மேயிற்குப் பிறகு இரு படைகளுக்கிடையில் மோதல் எதுவும் இல்லை. நாட்டு மக்கள் அதனால் ஆறுதலடைந்திருக்கிறார்கள். ஆனால் பல வடிவங்களில் வன்முறைகள், குறிப்பாக தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடரவே செய்கின்றன. இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இன்னமும் தங்கள் சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. கடுமையான இராணுவ மயமாக்கல் தொடருகிறது. அதன் விளைவான அல்லல்களை தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய வன்முறைகளுக்கு உதாரணமாக, இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற காணி அபகரிப்பையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றமையையும் கூறலாம். நாட்டின் தென்பகுதியிலும் கூட எதிர்ப்பைப் பொறுத்துக்கொள்ள முடியாத அரசாங்கம் வடக்கில் ஜனநாயக ரீதியான எந்த எதிர்ப்பையும் தாங்கிக்கொள்வதற்குத் தயாராக இல்லை. 2009 மே மாதத்திற்குப் பிறகு தமிழர் தரப்பிலிருந்து அரசுக்கு எதிராக ஒரு வன்செயல் கூட இடம்பெறாத போதிலும், பொதுமக்களுடன் வெளிப்படையாக ஒடுக்குமுறைப் போக்குடன் தொடர்ச்சியாக நடந்துகொள்கிறது. அபிவிருத்தி நடவடிக்கைகளிலேயோ அல்லது வேறு நடவடிக்கைகளிலேயோ தமிழ் மக்களினால் ஜனநாயக ரீதியில் பாராளுமன்றத்துக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை சம்பந்தப்படுத்தாதமையும் இவற்றில் அடங்கும்.

வெறுமனே இலக்கங்களின் ஊடாக தமிழ் மக்கள் மீது பெரும்பான்மையானவரின் விருப்பத்தைத் திணிப்பதே 1970 வரையான ஒடுக்கு முறை வடிவமாக இருந்தது என்றால், இப்போது உடல் ரீதியான வன்முறைகளுக்குப் புறம்பாக, தமிழ் மக்களின் கௌரவத்தையும் சுயமரியாதையையும் நேரடியாக இலக்குவைக்கிற நடவடிக்கைகள் பெருவாரியாக இடம் பெற்றுக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. நாற்பது வருடங்களுக்கு முன்னரும் இதுவே நடந்தது. அந்தச் சக்கரம் மீண்டும் திரும்பிச்சுழல ஆரம்பித்திருக்கிறது போலத் தெரிகிறது.

மீண்டும் பொதுவாக இளைஞர்களும் குறிப்பாக மாணவர்களுமே இலக்காக இருக்கிறார்கள். 40 வருடங்களுக்கு முன்னரான நிகழ்வுகளின் மறு ஆட்டம் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைக் கொண்டிருக்கிறது. மீண்டும் நாற்பதுக்கும் அதிகமான இளைஞர்களே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படாமல் பயங்கரவாதத்தடைச் சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, அந்த இளைஞர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் வெலிக்கந்த இராணுவ முகாமில் புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் கூட கூறப்படுகிறது. இந்தக் கைதுகளும் தடுப்புக்காவலும் முற்றுமுழுவதுமாக சட்ட விரோதமானவை. அதைப்பற்றி அரசாங்கம் கிஞ்சித்தும் பொருட்படுத்துவதாக இல்லை. விடுதலைப் புலிகள் சாம்பலில் இருந்து மீண்டெழுந்து வருவதாக உலகிற்குக் காட்டுவதில் அரசாங்கம் அக்கறையாக இருக்கிறது. இது தீவிர புலி ஆதரவாளர்களுக்கு இனிப்பாக இருக்கிறது என்பது ஒரு முரண் நகையாகும். ஆனால், யதார்த்தத்தில் இரு தரப்பினருமே தமிழ் இளைஞர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் கீழ்நோக்கிய சறுக்கல் பாதைக்கு இழுக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற எதிரணியின் கூட்டு மேதின பேரணியிலும் வேறு எதிர்ப்பியக்கங்களின் போதும் விடுதலைப் புலிகளின் கொடிகள் காணப்பட்டன. இவை உண்மையில் சிரிப்புக்கிடமான விநோதமான முயற்சிகளாக இருந்த போதிலும், அரசாங்கம் உலகிற்குக் காண்பிக்க முயற்சிக்கின்ற விடயம் எது என்பதற்கான அறிகுறியாக அமைகிறது. இது விடயத்தில் தமிழ் அரசியல் சமுதாயத்தின் மத்தியில் உள்ள தீவிரவாதப் போக்குடைய சக்திகள் அரசாங்கத்தின் மிகப்பெரிய நேச அணிகளாக விளங்குகின்றன எனலாம்.

## வரலாற்றிலிருந்து நாம் தொடர்ச்சியாக படிக்கிற ஒரே பாடம் வரலாற்றிலிருந்து எவரும் பாடம் படிப்பதில்லை என்பதேயாகும்


விடுதலைப்புலிகள் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள் என்று காட்டுவது அரசாங்கத்தினதும் தமிழர்கள் மத்தியில் உள்ள தீவிரவாத சக்திகளினதும் வேறுபட்ட அதேவேளை, எதிரெதிரான நிகழ்ச்சி நிரல்களுக்குப் பொருத்தமானதாக இருக்கக்கூடும். ஆனால், அது அர்த்த புஷ்டியான எந்த நல்லிணக்கத்தையும் அடைவதை நோக்கிய செயற்பாடுகளுக்கு பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இந்த முயற்சியை இரு சமூகங்கள் மத்தியிலும் உள்ள நியாய சிந்தை படைத்தவர்கள் முறியடிக்க வேண்டும். தெரிந்தோ தெரியாமலோ தமிழ் இளைஞர்கள் இந்தப் பொறியில் வீழ்ந்துவிடலாகாது. வரலாற்றில் இருந்து பாடம் படிக்க வேண்டுமானால், அதை நாம் அடிக்கடி நினைவு மீட்டிப்பார்க்க வேண்டியது அவசியமானதாகும். துரதிருஷ்டவசமாக, வரலாற்றில் இருந்து நாம் படிக்கிற ஒரே தொடர்ச்சியான பாடம் எது தெரியுமா? வரலாற்றிலிருந்து எவரும் பாடம் படிப்பதில்லை என்பதேயாகும்! ●



குமார் டேவிட்

# ஷிராணி அரசியலில் இறங்க வேண்டுமா?

**எதிரணி அரசியலில் இணையுமாறு சரத் பொன்சேகா பிரதம நீதியரசருக்கு விடுத்த அழைப்பின் அர்த்தம் தன்னுடனும் ரணில், ஜே.வி.பி.யினர், விக்கிரமபாகு போன்றோருடனும் அரசியல் மேடையில் ஏறவேண்டும் என்பதா?**





உள்நாட்டு அரசியல்



எதிரணி அரசியலில் இணையுமாறு முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். இந்த அழைப்புக்கு சில வட்டாரங்களில் இருந்து பெரும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. இந்த எதிர்ப்புகளை நான் கடுமையாக நிராகரிக்கிறேன். பொன்சேகாவின் அழைப்பு அவசரமானது அல்லது காலங்கனிவதற்கு முந்தியது என்று அவர்கள் கூறியிருந்தால், என்னால் அதை ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால், எதிர்ப்புக் காட்டியிருப்பவர்கள் ராஜபக்ஷவுக்கு எதிராக இன்னொரு எதிராளி வரிசையில் வருவதைத் தடுத்து நிறுத்துவதற்கு மாத்திரமே முயற்சிக்கிறார்கள். என்னைப் போன்று, ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக எதிரணி கட்டியெழுப்பப்படுவதையும் பெருகச் செய்யப்படுவதையும் விரும்புபவர்கள் பொன்சேகாவின் அழைப்பை எதிர்ப்பவர்களை நிச்சயம் ஏளனம் செய்வர். பொன்சேகா எவ்வாறு சிந்திக்கிறார் என்பது மிகவும் தெளிவானது, நேர்மையான வழிவகையூடாகவோ அல்லது தவறான வழிவகையூடாகவோ பிரதம நீதியரசர் பண்டாரநாயக்காவை ராஜபக்ஷ பதவியில் இருந்து வெளியேற்றுவதற்கு திடசங்கற்பம் பூண்டிருக்கிறார் என்று முன்னாள் இராணுவத் தளபதி நம்புகிறார். அனேகமாக தவறான வழிவகையூடாகவே ராஜபக்ஷ தான் நினைத்ததை சாதிப்பார். உங்களைப் பதவியில் இருந்து வெளியேற்றிய பிறகு நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் என்பது பொன்சேகாவின் சிந்தனையின் பின்னணியில் உள்ள தர்க்கமான கேள்வியாகும். எதிரணியில் இணைவதே திருமதி பண்டாரநாயக்கவுக்கு சிறந்த மார்க்கமாக இருக்கமுடியும் என்பதே அவரின் பதிலாகவும் இருக்கிறது.

இயற்கை நீதியையும் அரசியலமைப்பு ஒழுங்கு முறையையும் தூக்கிலிட்டு நீதித்துறையை நாசமாக்க ராஜபக்ஷவினால் முடியுமானால் அவர் நிச்சயம் பிரதம நீதியரசரை உதைத்துத் தள்ளி வெளியேற்றுவார் என்ற பொன்சேகாவின் ஊகத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். செவிடன், குருடனுக்குக்கூட இது தெளிவாகத் தெரியும். "அவ்வாறு முடியுமானால் தான்" என்பதை எச்சரிக்கையாக மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன். மோசமான காரியத்தை ராஜபக்ஷ செய்யாமல் விடக்கூடிய சாத்தியம் இன்னமும் இருக்கக்கூடும். அதற்குக் காரணம் இயற்கை நீதியையும் அரசியலமைப்புஒழுங்கு முறைமையையும் அவர் மதிக்கிறார் என்பதல்ல, நாட்டில் தோன்றியிருக்கும் எதிர்ப்பு அலையும் சர்வதேச விமர்சனங்களும் அவரின் சொந்த நலன்களையும் குடும்பத்தின் நலன்களையும் சேதத்துக்குள்ளாக்கி, ஆட்சியை அரசியல் ரீதியாகப் பலவீனமானதாக்கிவிடக் கூடும் என்பதனாலேயேயாகும். நிகழ்வுப் போக்குகள் ராஜபக்ஷவை பின்வாங்க நிர்ப்பந்தித்தால் மாத்திரமே, பிரதம நீதியரசரைப் பதவியில் இருந்து தூக்கியெறியும் முயற்சி தோல்வியடையும் என்பது தெளிவானது. நீதியில் கிஞ்சித்தேனும் அக்கறையில்லாத வாசுதேவவும் விதாரணவும் ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதற்கான யோசனையொன்றை முன்வைத்திருந்தார்கள். உண்மையில், ஆற்றல் மிக்க அடிமைகள் என்று தங்களை நிரூபிப்பதன் மூலமாக தங்களைப் பாதுகாப்பதற்கே அவர்கள் இந்த யோசனையை முன்வைத்திருக்கிறார்கள் என்பதே உண்மையில் சரியான மதிப்பீடு. பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை நிறுத்திவைக்குமாறு அவர்கள் ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு கூட்டத்தொடரை நிறுத்திவைப்பதன் மூலம் ஆற அமர இருந்து யோசித்து பிரச்சினையில் இருந்து கௌரவமாகத் தப்பிக்கொள்வதற்கான புதிய திட்டத்தை வகுத்துக் கொள்ளலாம் என்பதே வாசுவினதும் விதாரணவினதும் யோசனையின் பின்னணியில் உள்ள தந்திரமாகும். அல்லாவிட்டால், அரசாங்கம் பெரும் சிக்கலில் மாட்டுப்பட வேண்டிவரும் என்பது இவர்களின் அச்சம். பிரத்தியேகமான சூழ்நிலைகள் தோன்றினாலன்றி, பிரதம நீதியரசர் திருமதி பண்டாரநாயக்க தூக்கியெறியப்படுவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இந்த அரசாங்கத்தின் உணர்ச்சியற்றதன்மை பற்றி சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். இது விடயத்தில் தவறு விடாதீர்கள். அதனால், பொன்சேகாவின் யோசனையின் முதல் அம்சத்துடன் நான் இணங்கிக் கொள்கிறேன். பொன்சேகா தனது கருத்துகளை வெளியிடுவதில் அவசரப்பட்டுவிட்டார் என்று கூறுபவர்களுடன் நான் இணங்கிக்கொள்ளவில்லை. ஷிராணி பண்டாரநாயக்க அரசியலுக்கு வரக்கூடிய சாத்தியப்பாடுகள் பற்றிய சிந்தனை ஒவ்வொருவர் மனதிலும் உதித்தது. உண்மை நிலை அவ்வாறிருக்க, வெறுமனே பாசாங்கு செய்வதில் அர்த்தமில்லை. அத்துடன் தவிர்க்கமுடியாமல் அந்த நிகழ்வு இடம்பெறுமேயானால், அதற்கு தயாராகாமலும் இருக்கக் கூடாது. அது மிகவும் முக்கியமான தாகும்.

கெட்டித்தனமாகவோ அல்லது சூழ்ச்சித்தனமாகவோ ராஜபக்ஷ ஷிராணிபண்டாரநாயக்காவை பதவியில் இருந்து அகற்றி விட்டாரென்றால், எந்தவகையான அரசியல் நடவடிக்கையில் அவர் இறங்க வேண்டும் என்ற கேள்வி எழும். வீட்டுக்குப் போய், பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சிக்குலாவி ஓய்வாயிருந்து (அவரின் வயதை கூட்டி மதிப்பிட்டு விட்டேனென்றால், மன்னித்துக் கொள்ளுங்கள்) குடும்பத்தவருக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் மதிய உணவு தயாரிக்கும் வாழ்க்கையை அவர் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பு இல்லை. அவர் ஒரு போராட்டத்துக்குத் தயாராகிவிட்டார். பதவியில் இருந்து நீக்கப்படும் பட்சத்தில், அவர் போராட்டத்தை இடைநடுவில் கைவிட்டுவிட்டு ஓட முடியாது. உண்மையிலேயே, நீதித்துறை வாழ்வுக்குப் பிறகு ஷிராணி போராட்டத்தைத் தொடர வேண்டியதே முக்கியமானதாகும். தனது பதவிக்காக மாத்திரம் போராடுகின்ற ஒரு பெண்மணியாக அல்லாமல் பொது நலன்களுக்கான போராட்டத்தை உருவகிக்கும் ஒரு சின்னமாகவும் ஷிராணி தன்னை வெகு புத்திசாலித்தனமாக மாற்றிக் கொண்டிருக்கிறார். பதவியில் இருந்து நீக்கப்படும் பட்சத்தில், அதற்குப் பிறகு அவர் போராட்டத்தை எவ்வாறு தொடருவார் என்பதிலேயே அவர் எந்தளவுக்கு பொது நலன்களுக்காகப் போராடக் கூடியவர் என்பது நிரூபணமாகும்.

இந்த இடத்தில் தான் நான் சரத் பொன்சேகாவிடமிருந்து மாறுபடுகிறேன். எதிரணி அரசியலில் இணைந்து கொள்ளுமாறு பொன்சேகா ஷிராணி பண்டாரநாயக்காவை அழைப்பதன் அர்த்தம், தன்னுடனும் ரணில், ஜே.வி.பி, விக்கிரமபாகு ஆகியோருடனும் அரசியல் மேடையில் ஏற வேண்டும் என்பதா? அவ்வாறானால் அதில் எனக்கு உடன்பாடில்லை. ஷிராணி வித்தியாசமான ஒரு எதிரணி அரசியல் பாத்திரத்தை வகிக்க வேண்டும். நாட்டை ராஜபக்ஷ சகோதரர்கள் எத்தகைய ஆபத்தான பாதையில் கொண்டு செல்கிறார்கள் என்பதை குட்டி முதலாளி வர்க்கத்தினருக்கு விளங்கப்படுத்தி போதனை செய்யும் பாத்திரத்தை அவர் வகிக்க வேண்டும். கெடுதியான ஆட்சிமுறையும் அதிகார துஷ்பிரயோகங்களும் சட்டத்தின் ஆட்சியின் சீரழிவுக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதை நன்கு விளக்கக்கூடிய ஒரு நிலையில்; அதிகார போதையில் இருக்கும் நிறைவேற்று அதிகார பீடத்தின் அத்துமீறல்களுக்கும் முறைகேடுகளுக்கும் முதலில் சட்டவாக்க சபையையும் (அது ஏற்கனவே நடந்து முடிந்துவிட்டது) அடுத்து நீதித்துறையையும் கீழ்ப்படியச் செய்வது எவ்வாறு சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும் என்பதை விளக்கக்கூடிய நிலையில் இருக்கக் கூடிய தகுதி ஒரு முன்னாள்

பிரதம நீதியரசருக்கு இருக்க முடியும்.

ஆங்கிலம் பேசுகின்ற மேட்டுக் குடியினருக்கும் சாய்மனைக் கதிரையில் இருந்து கொண்டு வம்பளக்கிற கொழும்பு உயர்வர்க்கத்தினருக்கும் மாத்திரம் இந்த விவாதத்தை மட்டுப்படுத்தினால், அதில் எந்த அர்த்தமும் இல்லை. இந்த வேலையை ஏற்கனவே பெருவாரியான அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் செய்து கொண்டிருக்கின்றன. சிங்கள மக்களிடம் செல்லவேண்டியதே தற்போது அவசியமானதாகும். ஜே.வி.பி.யினரும் முன்னரங்க சோசலிச கட்சியினரும் குறுகிய கட்சி மனப்பான்மையிலிருந்து விடுபடக்கூடியதாக இருக்குமேயானால், பொருத்தமான அரங்குகளை ஏற்பாடு செய்வதில் பெருமளவுக்கு உதவ முடியும்.

தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கத்தோலிக்கர்கள் மத்தியில் போக வேண்டிய முக்கியத்துவத்தையும் நிராகரிக்கக்கூடாது. சிறுபான்மைச் சமூகங்கள் ஷிராணி பண்டாரநாயக்காவுடன் இந்தப் போராட்டத்தில் தோளோடு தோளாக நின்றார்கள். நான் குறிப்பிட்டிருக்கும் விவாதப் பொருள் குறித்து ஷிராணி சிறுபான்மைச் சமூகங்கள் மத்தியில் கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்தி அவர்களுக்கான நன்றிக் கடனைச் செலுத்த வேண்டும். இந்தப் போதனைச் செயற்பாடுகள் அரசியல் ஊனைக் கூச்சலுடன் அல்ல, மிகவும் கண்ணியமான வழிகளில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஷிராணி பண்டாரநாயக்காவின் வாழ்க்கையில் மிகவும் நெருக்கடியான இந்தத் தருணத்தில் அவர் செயற்படுகின்ற முறையில் இதுவரை வெளிக்காட்டியிருக்கும் துணிச்சலையும் கண்ணியத்தையும் சமநிலையையும் நான் மெச்சுகிறேன். ஆனால், அவரின் நடவடிக்கைகள் தொடர்பில் என்னிடம் விமர்சனங்களும் உண்டு. அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு வசதி செய்து கொடுத்தமைக்காக அவரை மன்னிப்பது மிகவும் கஷ்டமானது. தவறை ஏற்றுக்கொண்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்கத் தயாராயிருக்க வேண்டும். (எல்லோருமே தவறு செய்கிறோம்) அல்லாவிட்டால், பொதுமக்கள் மத்தியில் போதனை செய்வதற்கான ஒரு குரு என்ற பாத்திரத்தை ஏற்பது தொடர்பில் ஓயாது நச்சரிக்கும் சந்தேகங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும்.

## குற்றப்பிரேரணைக்கு எதிரான ஐக்கிய முன்னணி

குற்றப்பிரேரணைக்கு எதிரான அணிதிரட்டல்கள் இரண்டல்ல, மூன்று கோட்பாட்டுத் திசை மார்க்கங்களைக் கொண்டவையாக இருக்கின்றன. முதலாவது பிரிவினர் பிரதம நீதியரசர் எந்தவிதமான தவறான நடத்தை தொடர்பிலும் குற்றவாளி அல்ல என்றும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் சோடிக்கப்பட்டவை என்றும் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள். இரண்டாவது பிரிவினர் குற்றப்பிரேரணை விவகாரத்தில் தங்களது கருத்துகளைக் கூறுவதை ஒத்திவைத்திருக்கின்ற அதேவேளை, விசாரணைச் செயன்முறைகள் இயற்கை நீதிக்கு முரணானவையென்று அல்லது அரசியலமைப்புக்கு முரணானவையென்று வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்கள். பிரதம நீதியரசருக்கு எதிரான ராஜபக்ஷவின் சூனிய வேட்டையை நிராகரிப்பவர்கள் இந்த இரண்டு திசை மார்க்கங்களில் ஏதாவது ஒன்றை அல்லது இரண்டையும் தங்களது நிலைப்பாடுகளாகக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு கோட்பாட்டுத் திசை மார்க்கம் என்னைப் போன்றவர்களுடையது. 14 குற்றச்சாட்டுகளிலும் அர்த்தப்படுத்தப்படுவதைப் போன்று பிரதம நீதியரசர் குற்றவாளியாக இருக்க வாய்ப்பில்லை என்று நான் நினைக்கிறேன். உண்மையை எம்மால் ஒருபோதுமே அறிய முடியாமற்போகும். ஏனென்றால், கூடுதலான அளவுக்கு அதிர்ச்சி தரத்தக்க வகையிலான தனது தவறான நடத்தைகளின் மூலமாக அரசாங்கம் விவகாரங்களைக் குழப்பியடித்துவிட்டது. நேர்மையான விசாரணையொன்று நடைபெறவேண்டுமானால் நாட்டுக்கு வெளியில் இருந்து செவ்வாய்க் கிரகத்திலிருந்து நீதிபதிகளைக் கொண்டுவர வேண்டிய அளவுக்கு எல்லாமே குழப்பியடிக்கப்பட்டிருக்கிறது. சகலவற்றையுமே எம்மால் அறிய முடியாது என்ற கோட்பாட்டில் நம்பிக்கையுடையவன் நான். பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் விசாரணையில் அது கடைப்பிடித்த நடைமுறைகளும் அரசியலமைப்புக்கு விரோதமானவையா, இல்லையா என்ற முடிவுக்கு வருவதற்கு முன்பாக சட்ட விவகாரங்களில் பேதமை கொண்டவர்களின் தீர்மானம் வெளியிடப்படும் வரை காத்திருக்கவும் நான் தயாராயிருக்கிறேன்.


**அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு வசதி செய்து கொடுத்தமைக்காக ஷிராணி பண்டாரநாயக்காவை மன்னிப்பது மிகவும் கஷ்டமானது. தவறை ஏற்றுக்கொண்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்க வேண்டும்**

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் படுமோசமான அளவுக்கு பக்கச்சார்பானவை என்பதையும் மனச்சாட்சிக்கு விரோதமாக இயற்கை நீதியை மீறியவை என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். நிறைவேற்று அதிகார பீடத்தினதும் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட அரசாங்கக் கட்சியினதும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினதும் நடத்தைகள் போரின் முடிவுக்குப் பின்னர் இருந்து முனைப்படைந்து வருகின்ற மிகவும் பெரியள

விலான செயன்முறைகளின் ஒரு பகுதி என்றே நான் கருதுகிறேன். பெரு முதலாளித்துவக் குழுமத்தின் மீது வடிவமைக்கப்படுகின்ற ஒரு சர்வாதிகார அரசை நிறுவுவதற்கான ராஜபக்ஷ சகோதரர்களின் தீவிர முயற்சிகளே இந்த நிகழ்வுப் போக்குகள் சகலதிற்கும் அடிப்படையாகவுள்ள தர்க்கவாதமாகும். மற்றவை ஒவ்வொன்றும் அதன் தந்திரோபாய ரீதியான அங்கமேயாகும். சர்வாதிகார வலிமையை மேலும் மேம்படுத்துவதற்கான முயற்சியே அடிப்படையான யதார்த்தமாகும். அல்லாவிட்டால், எதற்காக அவர்கள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை இட்டுக் காட்டவேண்டும்? தங்களது விருப்பத்துக்கு இணங்க பந்து விளையாடாத பிரதம நீதியரசர் எதிர்காலத்தில் தோற்றுவிக்கக்கூடிய ஆபத்து எதேச்சாதிகார ஆட்சியின் பாதையைத் தடுக்கக் கூடுமல்லவா?

குற்றப் பிரேரணைக்கு எதிரான இயக்கத்தில் பங்கேற்பவர்கள் மத்தியிலான வேறுபட்ட அபிப்பிராயங்கள் பொருட்படுத்தப்பட வேண்டியவையா? இந்த நேரத்தில் பொருட்படுத்தத் தேவையில்லை என்பதே எனது கருத்து. அரசாங்கத்துக்கு மூக்குடைவை ஏற்படுத்துவதில் இந்த வேறுபட்ட அபிப்பிராயங்கள் ஒழுங்காக உடனிணைந்து செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் பிறகு ஒரு கட்டத்தில் இந்த அபிப்பிராய வேறுபாடுகள் பொருட்படுத்தப்பட வேண்டியவையாக இருக்கலாம். உதாரணமாக, குற்றப்பிரேரணை விசாரணை நடைமுறைகள் தொடர்பான விடயங்கள் குறித்து மாத்திரம் கவலை கொண்டிருப்பவர்கள், அந்த நடைமுறைகள் நேர் சீராக்கப்பட்டால் தங்கள் நிலைப்பாடுகளைத் தளர்த்திவிடுவர் அல்லது பிரதம நீதியரசருக்கு காட்டப்பட வேண்டிய தனிப்பட்ட அநீதிகள் ஒழிக்கப்பட வேண்டுமென்று அக்கறைப்படுபவர்கள், அவருடன் அரசாங்கத்தரப்பு இணக்கப்பாடொன்றுக்கு வந்து, தூதுவர் பதவி அல்லது வேறு சலுகைகளை வழங்கும் பட்சத்தில் அமைதியாகி விடுவர்.

ஆனால், இவை எவையுமே பிரதான அச்சுறுத்தல் அதிகரித்துவருகின்ற சர்வாதிகாரப் போக்கே என்று கருதுகிறவர்களின் கண்களுக்கு நல்லதாகத் தெரியப்போவதில்லை. உண்மையில் இந்தச் சாத்தியப்பாடுகள் ஆபத்தானவை. ஏனென்றால், எதிர்ப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். சர்வாதிகாரத்தை நோக்கிய பாதையில் சரியான நடைமுறைகள் பின்பற்றப்பட்டாலும் கூட, சர்வாதிகாரம் சர்வாதிகாரமே தான். இடைவழியில் எத்தனைபேர் இல்லாமற் செய்யப்படுகிறார்கள், என்பதெல்லாம் பொருட்டல்ல, சர்வாதிகாரம் சர்வாதிகாரமேதான். எனவே நாம் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டார நாயக்காவுக்காகவோ அல்லது அவர் மீதான விசாரணையில் சரியான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்பதற்காகவோ நாம் போராடவில்லை, சர்வாதிகாரத்தை நோக்கிய சரிவைத் தடுத்து நிறுத்துவதற்காகவே போராடுகிறோம். தொடர்ந்து போராட வேண்டும். இன்றைய சண்டைகள் பெரியதொரு போருக்கான ஒத்திகைகள். ●





லிலானி ஜெயதிலக

## பெரும்பாலும் மறக்கப்பட்டுவிட்ட

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையும் இலங்கையரின் மனப்போக்கும்




சில வருடங்களுக்கு முன்னர் எனது மருமகள் வெளிநாட்டில் இருந்து வந்திருந்தபோது என்னுடன் தங்கியிருந்தாள். எனது வீட்டுக்கு அருகாமையில் உள்ள பாடசாலையொன்றில் இருந்து ஒலிபெருக்கி மூலம் வந்த கருத்தொன்றை தற்செயலாகக் கேட்ட அவள் சற்று அதிர்ச்சியடைந்துபோனாள். பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருந்தது. அடிக்கடி சினம் கொள்கிற சுபாவமுடைய ஒரு ஆசிரியர் சில மாணவர்களைப் பார்த்து ஒலிவாங்கியில் ''எனக்குள் இருக்கும் பிசாசைத் தட்டி எழுப்பாதீர்கள்'' என்று அலறினார்.

இன்று பத்திரிகைகளை வாசிக்கும் போது எனக்கு அந்த ஆசிரியரின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. இலங்கையரின் மனதுக்குள் தூங்கிக்கொண்டிருக்கும் பிசாசை எழுப்பிவிடுவது மிகவும் சுலபம் போலத் தோன்றுகிறது. பலவீனமான எமது அகம்பாவத்தை நோக்கி தெரிவிக்கப்படக்கூடிய எந்தவொரு கண்டனமுமே எம்மைச் சினங்கொள்ள வைத்து ஆக்ரோசத்துடன் எதிர்ப்பைக்காட்ட எம்மைத் தூண்டுகிறது. இது இலங்கையரின் மனப்போக்கின் (Sri Lankan Psyche) ஒரு பகுதியா? அவ்வாறானால், அது எமக்கு தீங்காக அமைகிறது.

அநேகமாக மறக்கப்பட்டுவிட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் 12 டிசம்பர் 2012 புதன்கிழமை கருத்தரங்கொன்றில் கலந்துகொண்ட போது இலங்கையரின் மனப்போக்கு பற்றிய சில சிந்தனைகள் எனது மனதை ஊடறுத்துச் சென்றன. ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து, காரணங்கள் வேறுபட்டவையாக இருந்தாலும், வடக்கில் உள்ள சில கடும் போக்குத் தமிழர்களுக்கும் தெற்கில் சிங்களவர்கள் மத்தியில் உள்ள கடும் போக்காளர்களுக்கும் கணிசமான அதிருப்தி இருக்கிறது என்பதை அறியக்கூடியதாக இருந்தது. அறிக்கையின் நோக்கெல்லை குறுகியதாக இருந்ததன் விளைவாக, அது 30 வருட காலப் போருக்கான அடிப்படைக் காரணிகள் மீது கவனம் செலுத்தத் தவறிவிட்டது என்று தமிழர்கள் உணருகிறார்கள். இது மிகவும் முக்கியமான ஒரு விடுபாடாகும். கடும்போக்குச் சிங்களவர்களின் நிலைப்பாடு அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அடியொற்றியதாக அமைந்திருக்கிறது. அதாவது, 2009 மே மாதம் இடம்பெற்ற நிகழ்வுகளை மீட்டுப்பார்க்கக்கூடாது. அதற்குப் பதிலாக, தேசத்தைக் காப்பாற்றிய வீரபுருஷர்கள் என்று ''அங்கீகரிக்கப்பட்ட'' ஆயுதப்படையினரில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதே அந்த நிலைப்பாடு. அத்தகைய கடும்போக்காளர்கள் போர்க்குற்றங்களுக்கான சான்றுகளைத் தேடுவதை மாத்திரம் எதிர்க்கவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில்

இருக்கக்கூடிய ஒப்பீட்டளவில் மென்மையான விதப்புரைகளையும் கூட பரிசீலிக்கத் தயாரில்லாதவர்களாக இருக்கிறார்கள். அதேவேளை, அரசாங்கமோ ஆணைக்குழுவை நியமித்து, அறிக்கையையும் பெற்றுவிட்டு அதை என்ன செய்வது என்று திரிசங்கு நிலையில் இருக்கிறது.

உதாரணமாக, அறிக்கையின் மூன்றாவது அத்தியாயம் இறுதி நாட்களில் போர் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதைப்பற்றிக் கவனம் செலுத்துகின்றது. அதேவேளை, சனல் 4 வீடியோ, திருகோணமலையில் 5 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், மூதூரில் பிரெஞ்சு தொண்டர் நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் 23 பேர் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் போரின் போது ஆட்கள் காணாமல் போனமை ஆகியவை தொடர்பாக விசாரிக்க சுயாதீனமாக குழுவை நியமிக்க வேண்டுமென்றும் ஆணைக்குழு வலியுறுத்தியிருக்கிறது. இந்தக் கொலைகளுடனும் ஆட்கள் காணாமல் போன சம்பவங்களுடனும் அதிகார உயர் மட்டத்தவர்களைத் தொடர்புபடுத்த முடியும் என்றும் வதந்திகள் கிளம்பியிருந்தன. அதிகரிக்கும் சர்வதேச நெருக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்காக தானே நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கையை வைத்துக்கொண்டு ஒரு அரசாங்கம் என்ன செய்கிறது? கையில் இருக்கும் வெடிகுண்டைப் போன்றதே இந்த அறிக்கை என்பதில் சந்தேகமில்லை.

ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை வைத்துக்கொண்டு முன்னைய அரசாங்கங்கள் எதைச் செய்தனவோ அதையே இன்றைய அரசாங்கமும் இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வைத்துக்கொண்டு இதுவரை செய்திருக்கிறது. அதாவது, எதையும் செய்யாமல் காலத்தை இழுத்தடிக்கிறது. இது எனக்கு இலங்கையரின் மனப்போக்கின் இரண்டாவது முக்கியமான அம்சத்தை மனக்கண் முன் நிறுத்துகிறது. ஒரு குறுகிய காலத்துக்கே நாம் ஒரு விவகாரத்தின் மீது கவனம் செலுத்துகிறோம். ஒரு விவகாரம் ''சூடாக'' இருக்கும் வரை அதைப்பற்றி வீதிகளிலும் வீடுகளிலும் நாம் கவனம் செலுத்துவதில் தீவிர அக்கறை காட்டுவோம். ஆனால், சில மாதங்கள் கடந்ததும் அந்த விவகாரத்தை மறந்துவிட்டு, அடுத்த பரபரப்பான விடயம் மீது கவனத்தைச் செலுத்த ஆரம்பிக்கிறோம்.

பேசப்படாத கருத்தொருமிப்பொன்று இருக்கிறது. அதை அரசாங்கத்தில் நியாயம் கற்பித்து வாதாடுபவர்கள் ஒருபோதுமே பகிரங்கத்தில் ஏற்றுக்கொண்டதில்லை. போரின் இறுதி நாட்களில் கணிசமான தொகையில் குடிமக்கள் உயிரிழந்தார்கள், படுகாயமடைந்தார்கள் என்பதே அதுவாகும். போரொன்றின் போது குடிமக்கள் இழப்புகள் தவிர்க்க முடியாதவை என்கிற அதேவேளை, அத்தகைய இழப்புகளின் அளவும் விகிதாசாரமும் குடிமக்களின் பாதுகாப்பையும் சேமநலன்களையும் உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளும் இங்கென்றாலென்ன உலகின் வேறு எந்தப் பகுதியிலென்றாலென்ன, மனிதாபிமான உணர்வைக் கொண்ட எந்தவொருவரினதும் அக்கறைக்குரியதாக இருக்க வேண்டியது அவசியம். புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தின் செயல்களை வடக்கில் தமிழர்களை முற்றுமுழுதாக ஒழித்துக்கட்டுவதற்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட, பழிபாவத்துக்கு அஞ்சாத ஒரு முயற்சியாக, இனப்படுகொலையாகப் பார்க்கிறார்கள்.

ஆனால், 1970 களிலும் 1980களிலும் ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி)யின் கிளர்ச்சிகளை அரசாங்கங்கள் கையாண்ட முறையை நோக்கும் போது, தமிழர்களின் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு கடைப்பிடிக்கப்பட்ட அதே மிலேச்சத்தனமான அணுகுமுறையே சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கும் கடைப்பிடிக்கப்பட்டது என்பதை எம்மால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்ட பிறகு, விசாரணை நடத்தப்பட்டு, மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கைவிடுத்து எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. இது இலங்கையரின் மனப்போக்கின் மூன்றாவது அம்சத்தை எனது சிந்தனைக்குக் கொண்டுவருகிறது. புதியதொரு ஆரம்பத்தைச் செய்ய முடியுமென்ற நம்பிக்கையில் அருவருக்கத்தக்க உண்மைகளை மறைக்கின்ற போக்கு இதுவாகும். கடந்தகால பிரச்சினைகளை உகந்த முறையில், அக்கறையுடன் கவனிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டால் மாத்திரமே புதிய ஆரம்பங்களுக்கு வழி சமைக்க முடியுமென்ற உண்மையை மறந்த நிலையிலான போக்கே இது என்பதிற் சந்தேகமில்லை.

குடிமக்களின் பாதுகாப்புக்கு அதியுயர் முன்னுரிமை கொடுப்பதே போரின் இறுதிக் கட்டங்களில் அர

ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை வைத்துக்கொண்டு முன்னைய அரசாங்கங்கள் எதைச் செய்தனவோ அதையே இன்றைய அரசாங்கமும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையைப் பெற்றபிறகு இதுவரை செய்துகொண்டிருக்கிறது

சாங்கத்தின் கொள்கையாக இருந்தது என்று நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. போர்க் குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளில் இருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் நோக்கில் ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்திருந்தது என்று கருத இடமுண்டு. ஆனால், உயிர் தப்பியவர்கள் கூறுகின்ற கதைகளுடனும் இறந்துபோனவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கைகளுடனும் இது ஒத்திசைவதாக இல்லை. போர்முனையில் இருந்து முரண்பாடான தகவல்களே வந்து கொண்டிருந்தன. சனல் 4 வீடியோவை நாம் நம்புகிறோமோ இல்லையோ, அதுவேறு விடயம். ஆனால், அந்த வீடியோ போரை நடத்திய முறையில் இராணுவத்தினால் இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் தொடர்பில் எமது மனங்களில் மறக்க முடியாத எண்ணப்பதிவை விட்டுச் சென்றிருக்கிறது.

ஆனால், அதேவேளை, விடுதலைப் புலிகள் ஒன்றும் பூனைக்குட்டிகள் அல்ல என்பது எமக்கு மாத்திரம் தானே மிகவும் நன்றாகத் தெரியும். நீண்டதும் கொடூரமானதுமான எமது உள்நாட்டுப் போர்க் காலகட்டத்தில் இலங்கை பூராகவும் ஆயிரக்கணக்கான அப்பாவிக் குடிமக்களின் படுகொலைகளுக்கு விடுதலைப்புலிகள் பொறுப்பாக இருந்தார்கள். அவர்கள் தங்களது நோக்கங்களைச் சாதிப்பதற்காக உண்மைகளைத் திரிபுபடுத்துவதிலும் மறைப்பதிலும் ஆற்றல் கொண்டவர்களாக விளங்கினார்கள். வழிமுறைகளை இறுதி முடிவு நியாயப்படுத்துகிறது என்ற கொள்கையையே விடுதலைப் புலிகள் எப்போதும் பின்பற்றினார்கள். கனரக ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டாமென்ற உத்தரவு காரணமாக, போரின் இறுதி நாட்களில் பெரும் எண்ணிக்கையான படைவீரர்கள் இலையான்கள் போன்று வீழ்ந்து மடிந்தார்கள் என்ற தகவலை இராணுவத்தில் உள்ள மிகவும் மதிப்புக்கும் நம்பிக்கைக்குமுரிய ஒருவர் மூலமாக அறிந்துகொண்டேன். இருந்தும்

**1970களிலும் 80களிலும் ஜே.வி.பி.யின் கிளர்ச்சிகளை எந்தளவு கொடூரத்துடன் அரசாங்கங்கள் அடக்கினவோ அதை கொடூரத்துடன்தான் தமிழர்களின் கிளர்ச்சியையும் ஒடுக்கியது**

கூட, ஆயிரக்கணக்கில் குடிமக்கள் இறந்தார்கள், ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனார்கள், உயிர்தப்பியவர்கள் தங்களுக்கு நேர்ந்தவற்றையும் மற்றவர்களுக்கு நேர்ந்தவற்றையும் பற்றி மனதை உலுக்கும் கதைகளைச் சொன்னார்கள், சனல் 4 கட்சிகளையும் பார்த்தோம். இவையெல்லாவற்றையும் எவ்வாறு நாம் விளங்கிக் கொள்வது? கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் பயங்கரமான ஒரு எதிரி வலுவிழந்து போன நிலையில் அவனை முற்றாக நசுக்கிவிட வேண்டுமென்று ஏற்படுகின்ற ஆர்வத்துடிப்புக்கும் இடையே ஒரு இடைவெளி இருந்திருக்கலாம். அரசாங்கத்தைப் பொறுத்தவரை இத்தகைய துடிப்பு அடக்கமுடியாத அளவுக்கு பலமானதாகவும் இருந்திருக்கக்கூடும். களநிலைவரம் இருளார்ந்ததாக இருந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை, தாராள மனப்பான்மை கொண்ட சிங்களவர்களும் சர்வதேச சமூகத்திலிருந்து எழுந்த குரல்களும் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறார்கள். போரில் விடுதலைப் புலிகளுக்கு பாரதூரமான தோல்விகளை ஏற்படுத்தி, மேம்பட்டதொரு நிலையில் அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலமான இணக்கத் தீர்வொன்றைக் காணுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களைக் கவனத்தில் எடுக்கத் தவறியது? அவ்வாறு செய்திருந்தால் ஆயிரக்கணக்கானவர்களை மரணத்திலிருந்து காப்பாற்ற இயலுமாக இருந்திருக்குமல்லவா? ஏன் செய்யவில்லை.

விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாக ஒழித்துக் கட்டாவிட்டால், மீண்டும் அவர்கள் தங்களை அணிதிரட்டிக் கொண்டு என்றாவது ஒரு நாள் போராட்டத்துக்குத் தயாராவார்கள் என்று அரசாங்கமும் இராணுவமும் அச்சம் கொண்டிருக்கக்கூடும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடிய முயற்சிகள் மிகவும் கவலைக்குரிய வகையில் தோல்வி கண்டன. 1980களில் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் பங்கேற்றவர்களில் சிலர் இன்றைய அரசாங்கத்தில் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். அந்த இராணுவ நடவடிக்கை வெற்றியடையவிருந்த இறுதிக்கட்டத்தில் வெளியார் தலையீடு காரணமாக பயனற்றுப்போய் வெற்றி நழுவிச் சென்றதை இவர்கள் நன்கு நினைவில் வைத்திருந்திருக்கிறார்கள். அதனால், விடுதலைப் புலிகளையோ அல்லது அந்த இயக்கத்துக்கும் தனக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ய முயற்சித்தவர்களையோ அரசாங்கம் நம்பவில்லை. இந்தக் கட்டத்தில் தப்பிக்கொண்ட விடுதலைப் புலிகள் பிறகு வேறு ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மறைத்து வைத்திருப்பார்கள் என்பது அரசாங்கத்தரப்புக்கு நன்றாகத் தெரியும். ஏற்கனவே பெற்றிருந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே அரசாங்கம் போர் நிறுத்தக் கோரிக்கைகளை அலட்சியம் செய்து, விடுதலைப் புலிகளைத் தீர்த்துக்கட்ட முடிவெடுத்தது. பாதிக்கப்பட்ட சகலருக்கும் நீதி கிடைக்கவேண்டுமானால், சாலமன் போன்ற ஒரு மன்னனே தேவை. ஆனால், கூட்டு மறதியும் தீர்வாகப் போவதில்லை.

ஏனென்றால், தங்கள் அன்புக்குரியவர்களையும் நண்பர்களையும் இழந்தவர்கள் தங்கள் அவல அனுபவங்களை மறக்கமாட்டார்கள். புண்கள் குணப்படுத்தப்படவேண்டுமேயன்றி, வெறுமனே கட்டுப் போட்டு, அதை உள்ளே புரையோட விடக்கூடாது. ஆனால், இவ்வாறு கட்டுப்போடுவதையே அரசாங்கம் விரும்பியது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. முழுப்பிரச்சினையுமே மீண்டும் வெடித்துக் கிளம்பி, நச்சு ஆவி நமது நாட்டைச் சூழுவதற்கு பல நாட்கள் எடுக்காது என்பதை மன திற் கொள்வது அவசியம்.

இந்த உண்மையை ஏற்றுக் கொண்டே நல்லிணக்க ஆணைக் குழு, உண்மையைக் கண்டறிய மான சீகமான முயற்சிகளை எடுக்கின்ற அதேவேளை, அரசாங்கம் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று விதப்புரை செய்தது. இவ்வாறு செய்வதன் மூலமாக கடந்த காலப் புண்களைக் குணப்படுத்துவதில் கணிசமான அளவுக்கு வெற்றிகாணக் கூடியதாக இருக்கும்.

வேறுநாடுகளின் அரசுகள் இவ்வாறு செய்திருக்கின்றன. இரண்டாவது உலகமகா யுத்தத்திற்குப் பிறகு ஜேர்மனி யூத சமூகத்திடம் மன்னிப்புக்கோரியது. ஜப்பான், தென்கொரியர்களிடமும் வேறு நாட்டவர்களிடமும் மன்னிப்புக் கோரியது. கல்லறைகளை இடித்துத் தரைமட்டமாக்குவதற்கும் இறந்தவர்களை நினைவுகூருவதைத் தடுப்பதற்கும் பதிலாக, அவர்கள் தாங்கள் செய்த வெட்கக்கேடான செயல்களின் சான்றுகளை பேணிக் காப்பதில் நாட்டம் காட்டினார்கள். மீண்டும் அத்தகைய அட்டூழியங்கள் இடம் பெறுவதை ஒருபோதுமே அனுமதிக்கக்கூடாது என்பதற்கான நினைவுறுத்துவதற்காகவே அவர்கள் அந்தச் சான்றுகளைப் பேணிக்காத்தார்கள். வெட்கப்படுவது ஒரு நல்ல காரியம். அது எம்மை அசௌகரியத்துக்குள்ளாக்கி, எச்சரிக்கையாக இருக்கத் தூண்டுகிறது.

இலங்கையரின் மனப்போக்கின் இன்னொரு அம்சம் விமர்சனங்களுக்கு நாம் காட்டுகின்ற சீற்றத்துடனான பிரதிபலிப்புடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டதாகும். தவறுகளை ஏற்றுக்கொள்வதில் அல்லது வருத்தம் தெரிவிப்பதில் எமக்கிருக்கும் இயலாமையே அதுவாகும். சுதந்திரத்துக்குப் பின்னரான 60 வருடங்களில் இலங்கை பல இனக் கலவரங்களைக் கண்டிருக்கிறது. அவற்றில் பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டனர். பெரும் எண்ணிக்கை வீடுகளும் வாழ்வாதாரங்களும் நிர்மூலஞ்செய்யப்பட்டன. அந்த அனர்த்தங்கள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், அதிகாரத்தில் இருந்த அரசாங்கங்கள் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனவே தவிர, தடுத்து நிறுத்துவதற்கு எதையும் செய்யவில்லை. இந்தக் கொடுமைகளுக்காக தனிப்பட்டவர்கள் தங்கள் இனக் குழுமத்தின் சார்பில் வெட்கப்படுவதாகக் கூறி மன்னிப்புக் கோரினார்கள். 1983 ஜூலை இனவன்முறைக்குப் பிறகு ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க மனங் கலங்கி வருத்தம் தெரிவித்த அதே




> சனல் 4 வீடியோவை நாம் நம்புகிறோமோ இல்லையோ, அது வேறு விடயம். ஆனால் போரைநடத்தியமுறையில்இராணுவத்தினால் இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் தொடர்பில் எமது மனங்களில் மறக்க முடியாத எண்ணப் பதிவை விட்டுச் சென்றிருக்கின்றது

வேளை, அரசாங்கத் தலைவரான ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன குண்டர்களின் அட்டூழியங்களை வடக்கில் 13 படைவீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கான சிங்கள மக்களின் "இயற்கையான பிரதிபலிப்பு" என்று வர்ணித்து நியாயம் கற்பித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. பல வருடங்கள் கழித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 83 ஜூலை கொடுமைகளுக்காக தமிழ் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார். தவறுகளை ஏற்றுக்கொண்டு மற்றவரிடம் மன்னிப்புக் கேட்பதற்கு துணிச்சலும் வலிமையும் தேவை. தனிநபர்களைப் போன்றே ஒரு தேசம் முழுவதற்கும் இது பொருந்தும்.

உண்மையிலேயே, இராணுவமும் குண்டர்களும் செய்த அட்டூழியங்களுக்காக நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள பிரஜைகளிடம் அரசாங்கமும் சிங்கள மக்களும் மாத்திரம் தான் மன்னிப்புக் கோர வேண்டுமென்றில்லை. வடக்கில் இனச்

சுத்திகரிப்பைச் செய்தமைக்காகவும் அர்த்தமற்றதும் கொடூரமானதுமான நீண்ட போரொன்றை முழு நாட்டின் மீதும் திணித்தமைக்காக விடுதலைப் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் கூட மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும். எந்தவொரு தரப்பினரதும் குற்றப்பொறுப்பை ஆராய்வதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய எந்த முயற்சியும் தற்காப்பை நோக்கமாகக் கொண்ட பிரதிபலிப்பையும் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் யார், உண்மையில் குற்றவாளிகள் யார் என்ற முடிவற்ற விவாதத்தையும் தோற்றுவிக்கும். கடும் போக்கு தமிழர்கள் எடுத்திருக்கும் நிலைப்பாடானது கடும் போக்குச் சிங்களவர்களின் நிலைப்பாட்டின் கண்ணாடிப் பிம்பமேயாகும். கடும்போக்கு சிங்களவர்கள் கடும்போக்கு தமிழர்களினால் தாங்கள் பாதிக்கப்பட்டதாகக் கூறுகின்ற அதேவேளை, கடும்போக்குத் தமிழர்கள் கடும்போக்கு சிங்களவர்களினால் தாங்கள் பாதிக்கப்பட்டதாகக் கூறுகின்றார்கள்.

சுதந்திர இலங்கைக்கான அரசியலமைப்பை வரைந்தபோது சோல்பரி ஆணைக்குழு, ஐக்கியப்பட்ட இலங்கையொன்றை உருவாக்குவதற்கு மிகப்பெரிய தடைக்கல் இனவாதமேயாகும் என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தது. அதை அடுத்து வந்த நிகழ்வுப் போக்குகள் நிரூபித்தன. நல்லிணக்க ஆணைக்குழு இது விடயத்தில் என்ன கூறியிருக்கிறது? இனப்பிளவின் இரு தரப்பிலும் எல்லோருமே பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தும் நல்லிணக்க ஆணைக்குழு இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதன் மூலம் எமது பொதுவான மனிதத் தன்மையை அங்கீகரிப்பதை நோக்கி கணிசமான தூரம் செல்ல முடியும். பொதுவான இலங்கையர் என்ற அடையாளத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கிய முதல் அடியெடுத்து வைப்பாக இது இருக்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறது.



வேறு நிகழ்வுகள் எமது கவனத்தை ஈர்க்கத் தொடங்கியதும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நாம் வசதியாகவே ஒதுக்கி வைத்து விட்டபோதிலும்கூட, 2013 மார்ச்சில் ஜெனீவாவில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவை மீண்டும் ஒரு தடவை கூடி ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை மேற்கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கைகளை மீளாய்வு செய்யும் என்பதை நாம் மறந்துவிட முடியாது. "உதவிவழங்கும் பெரிய நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரத்தைப் பாருங்கள். நாம் செய்யவேண்டியவை எவை என்பதைக் கூறுவதற்கு இந்த நாடுகள் யார்?," என்று எடுத்தெறிந்து பேசுகின்ற இயல்பான சுபாவம் எம்மிடம் இருக்கிறது. அதை நாம் தவிர்க்க வேண்டும். அந்த நாடுகளின் கைகளும் கூட இரத்தக் கறை படிந்தவை தான். ஆனால், அவ்வாறு கூறுவதன் மூலமாக எமது கைகளை குறைந்தளவு இரத்தக்கறை கொண்டவையாக மாற்றிவிட முடியுமா? எமது கைகளைச் சுத்தமாக்கிவிட முடியுமா? எல்லாவற்றுக்கும் மேலாக நீண்டகால நோக்கில் எம்மால் அதனால் பயனடையக் கூடியதாக இருக்குமா?

இந்த இடத்தில் தான் சிவில் சமூகம் ஒரு பாத்திரத்தை வகிக்க வேண்டியிருக்கிறது. இப்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சிக்கலான சூழ்நிலையைத் தோற்றுவித்தமைக்காக அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் ஏன் சர்வதேச சமூகத்தையும் கூட நோக்கி எங்களது சுட்டு விரல்களை நீட்டிக் குற்றஞ்சாட்டுவது சுலபமானது. எமக்கு கூறப்படுகின்றவற்றை அடக்கமாக ஏற்றுக்கொள்கின்ற தன்மையும் எமது மனப்போக்கின் ஒருசில பகுதியேயாகும். ஆனால், அவ்வாறு செய்வதன் மூலமாக நாம், மனித உரிமை மீறல்களுக்கு நேரடியாகப் பொறுப்பானவர்களைப் போன்று நாமும் மறைமுகமாகப் பொறுப்பாளிகளாகின்றோம். தங்களுக்குத் தகுதியான அரசாங்கத்தையே மக்கள் பெறுகிறார்கள் என்று பிரபலமான கூற்று ஒன்று இருக்கிறது. ஆளுகை என்பது அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்திடம் மாத்திரம் முற்று முழுதாக விட்டு விடக்கூடிய ஒன்று அல்ல என்பதை இக்கூற்று எமக்கு நினைவுபடுத்துகிறது. தங்களது குரல்கள் உரக்க ஒலிப்பதை, அந்தக் குரல்கள் செவிமடுக்கப்படுவதை மக்கள் வன்முறையற்ற வழிவகைகளின் ஊடாக உறுதிசெய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அந்த வழி முறைகள் - வீதி ஆர்ப்பாட்டங்களாக இருக்கவும், இசையாக இருக்கலாம். திரைப்படமாக, நாடகமாக, எழுத்தாக, பேச்சாக இருக்கலாம். நாம் வகிப்பதற்கு ஒரு பாத்திரம் இருக்கிறது. துணிச்சல் இல்லாவிட்டால், சகலதையும் இழக்க வேண்டிவரும்.

என்.சத்திய மூர்த்தி



# தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள்?

**இந்தியாவில் மட்டுமல்ல ஏனைய நாடுகளிலும் புலிகள் இயக்கத்தின் அடுத்த தலைமுறையினர் என்ற விதத்தில் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் மீண்டும் தொடங்குவது தவிர்க்க முடியாததாகி விடும். அதனால் இனப்போர் முடிவுக்கு வந்த பிறகு தமிழ் மக்களுக்கு உலகளவில் கிடைத்திருக்கும் அனுதாபமும் அரசியல் ஆதரவும் மீண்டும் இல்லாமல் போய்விடும்**

கடந்த டிசம்பர் மாதம் தமிழ் நாடு தலைநகர் சென்னை புறநகர்ப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு பேரை மாநில காவல் துறையினர் கைது செய்துள்ளனர். இலங்கையில் கைது செய்யப்பட்ட சிலர் அளித்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்தியாவில் இந்த நால்வரும் கைது செய்யப்பட்டதாக பத்திரிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்கள், பண்ருட்டி நகர் அருகே வெடிவைப்புப் பயிற்சி எடுத்ததாக தமிழ் நாடு தீவிரவாத ஒழிப்பு "கியு-பிரிவு" பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனால், அவர்கள் இந்தியாவில் வெடிவைப்புச் சம்பவங்களை நிகழ்த்த நினைக்கவில்லை என்றும் கைது செய்யப்பட்டவர்களை மேற்கோள்காட்டி, தமிழ் நாடு காவல் துறையினர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளனர். மாறாக, இந்தக் குழுவினர் இலங்கையில், குறிப்பாக தமிழர் பகுதிகளில் இது போன்ற சம்பவங்களை நிகழ்த்த இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்ட அதே காலகட்டத்தில் தான், இலங்கையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, யாழ். வளைகுடாவில் பதுங்கியிருந்ததாகக் கூறப்பட்ட விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த 45 முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது கைது குறித்து தமிழ் அரசியல் தலைவர்களோ, சமூக ஆர்வலர்களோ குறிப்பிட்டுக் கூறும்படியாக எந்த எதிர்ப்பு அறிக்கையும் விடவில்லை. அவர்களது எதிர்ப்பு எல்லாம் பொத்தாம் பொதுவாகவே அமைந்துள்ளது.

## தீவிரவாதம் அற்ற போராளிக் குழு?

இலங்கையில் இனப்போர் தீவிரம் அடைந்து, முடிவை நோக்கிச் செல்வதற்கு பல மாதங்களுக்கு முன்னரே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கவில்லை என்று கூறிக்கொண்ட புலம்பெயர் தமிழர் பலர், எதிர்காலம் நோக்கி சிந்திக்கத் தொடங்கி விட்டனர். காரணம், கடந்த முறைகள் போல் அல்லாது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசு, இறுதி வரை போராடி, விடுதலைப் புலிகள் இயக்கத்தை இல்லாது ஆக்கிவிடும் என்ற அவர்களது தெளிவான சிந்தனையும் ஆராய்ச்சியுமே.

அவர்களைப் பொறுத்தவரையில், அமெரிக்காவை குறிவைத்து நிகழ்த்தப்பட்ட "செப்டம்பர் 9 தீவிரவாத தாக்குதலுக்கு" பின்னரும் விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களது வழிமுறைகளை மாற்றிக் கொள்ளாததால், சர்வதேச சமூகம் அவர்களை எதிர்த்து, இலங்கை அரசிற்கு ஆதரவாகவே செயல்படும் என்பதை உணர்ந்திருந்தார்கள். ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாது போனால், அதன் அடிச்சுவட்டில், அப்பாவி மக்களை கொள்ளை கொள்ளும் தீவிரவாத முறைகளைக் களைந்து, இலங்கை அரசை மட்டுமே குறிவைத்துத் தாக்கும் போராளிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் சிலரிடமாவது இருந்து வந்தது.

இந்தப் பின்னணியில், இலங்கையில் மீண்டும் போராளிக் குழுக்கள் ஒன்றோ பலவோ உருவாகும் வாய்ப்புகள் குறித்து நாட்டின் பாதுகாப்பு அமைப்புகள் கவனமாகவே இருந்து வந்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அது போன்ற கவலைகள் இந்தியா உட்பட பிற நாட்டு புலனாய்வுத் துறையினருக்கும் இருந்தே வந்திருக்கும். அந்த விதத்தில், இலங்கையில் எந்த விதத்திலாவது தமிழ்ப் போராளிகளோ அல்லது தமிழ்ப் போராளிக் குழுக்களோ உருவாகுமேயானால், அவர்கள் தமிழ் நாடு உட்பட இந்தியாவின் தென் மாநிலங்களிலிருந்து தான் தங்களது முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டிய விடயமே.

இனப்போர் முடிந்த காலம் தொட்டே, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிலராவது இலங்கையில் மீண்டும் அரசை குறிவைத்து தாக்குதல்கள் நடத்த முயலலாம் என்பதை தமிழ் நாடு புலனாய்வுத் துறையினரும் இந்திய அரசின் பல்வேறு துறையினரும் எதிர்பார்த்தே தங்களது வியூகங்களை வகுத்து வந்திருப்பார்கள். தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை வலியுறுத்தவோ அல்லது போரில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் மற்றும் அப்பாவித் தமிழ் மக்களின் பெயரில் பழிவாங்குவதற்காகவோ இத்தகைய நிகழ்வுகள் இடம்பெறலாம் என்ற எண்ணம் இருக்கவே செய்தது.

அது போன்றே, இது போன்ற குழுக்கள் தனித்தனியாகவோ அல்லது ஒரு தலைமையின் கீழோ செயல்படும் வாய்ப்புகளும் கூட அலசி ஆராயப்பட்டுள்ளன. பிற போராளிக் குழுக்களை விடுதலைப் புலிகள் இயக்கம் நிர்மூலம் ஆக்கிவிட்ட நிலையில், அவர்களது தலைமையை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தப்பட்ட இளைஞர்களில் சிலராவது தனிக் குழுக்களாகச் செயல்பட தற்போது முடிவெடுக்கலாம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தால் இல்லாமல் போன இந்தக் குழுக்களின் முதிர்ந்த போராளிகள் கூட மறந்துபட்ட தங்களது இயக்கங்களுக்கு புத்துயிர் ஊட்ட முயற்சி செய்யலாம். அவர்களின் தலைவர்கள் பலரும் புலம்பெயர்ந்த தமிழர்களாக வெளிநாடுகளில் புதுவாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். அல்லது, பழசையெல்லாம் மறந்து உள்நாட்டில் மிதவாத அரசியலில் தலைமைப் பொறுப்புகளில் இருக்கிறார்கள். இவர்களில் எல்லாம், யார், எப்போது, எப்படியெல்லாம் செயல்படப்போகிறார்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. என்றாலும், இவர்களில் யாராவது, எப்போதாவது மீண்டும் போராளிகளாகச் செயல்பட நினைத்தால் அதற்கு தமிழ் நாட்டில் இருந்தே வடிவம் கொடுக்க முயற்சி செய்வார்கள் என்பது எண்ணிப்பார்க்கக் கூடிய விடயமாகவே இருந்து வந்துள்ளது. அந்த விதத்தில், தமிழ் நாட்டில் நிகழ்ந்துள்ள தற்போதைய கைதுகள் முற்றிலும் எதிர்பார்க்கப்படாத விடயமல்ல.

### காரியமும் காரணமும்

“அம்பு யாருடையது? எய்தவன் யார்?” என்பன போன்ற கேள்விகள் எழுவதற்கான காலமும் காரணமும் தற்போது இல்லை. ஆனால், அவ்வாறெல்லாம் நிகழுமேயானால், அதற்கான உடனடிக் காரணம் என்னவென்பது புலப்படக்கூடிய ஒன்றே. இனப்போர் முடிந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரும் விடுதலைப் புலிகளின் காலத்திற்குப் பின்னர் எதிர்பார்க்கப்பட்டஅரசியல் தீர்வு இன்னமும் எட்டப்படவில்லை. மாறாக, இனப்போர் துவங்கும் காலகட்டத்திற்கு முந்தைய தசாப்தங்களில் தோன்றிய இன உணர்வுகள் மீண்டும் தமிழ் இளைஞர்களை ஆட்சி செய்யத் தொடங்கி உள்ளது எனலாம்.

> உலக நாடுகளை பொறுத்தவரை இலங்கை இனப்பிரச்சினையும் தமிழ் மக்களின் உயிரிழப்பும் ஒரு குறிப்பிட்ட காலத்தோடு ஒட்டியவை. அது மறக்கடிக்கப்படும் சூழ்நிலை உருவானால் அவர்கள் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு அடுத்த ஊரில் தங்களது கடையைப் போடப் போய்விடுவார்கள்

ஆனால், இதற்கு எல்லாம் காரணம் என்ன? இனப்போர் முடிந்த கையுடன் அரசு, அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் அதிகாரப் பகிர்வு உட்பட அரசியல் தீர்வுகளுக்கு வழி வகுக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. காரணம் எதுவாகினும், அந்த எதிர்பார்ப்பு இப்போது பொய்யாகி விட்டது. அதற்கு காரணம் இலங்கை அரசு மற்றும் சிங்களப் பேரினவாதிகளின் தொடர்போக்கே என்ற எண்ணமே தமிழ் மக்களின் மனதில் ஆழப் பதிந்துள்ளது. இது போதாது என்று, வடக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் அதீதமான இராணுவ நடமாட்டம் மற்றும் சிங்கள குடியமர்வு என்பது போன்ற குற்றச்சாட்டுகளும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இதற்கிடையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் “மாவீரர் தினம்” அனுஷ்டிப்பு மக்களிடையே புதியதொரு சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. அதனைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று 41 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில், இது போன்ற நடவடிக்கைகள் தமிழ் மக்களிடையே ஒரு ஆதங்கத்தையும் அச்சத்தையும் கூட எழுப்பி இருக்கும். ஆனால், தற்போதைய நிலையில் அவை ஒருவித சலசலப்பை ஏற்படுத்திவிட்டது என்று கருதலாம். இது இருதரப்பாருக்குமே அடிக்கப்பட்ட எச்சரிக்கை மணி என்றே கருதி அவர்கள் செயல்பட வேண்டும். செய்வார்களா, அதனை?

## "சொடக்கு விட்டு" சவாலா?

இருக்கும் பிரச்சினைகள் போதாது என்று, கடந்த வருடம் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் "திரு கார்த்திகை" திருநாள் கொண்டாட்டம் என்ற பெயரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் "மாவீரர் தினம்" "அனுஷ்டிக்கப்பட்டது. எந்த பெயரில் அந்த நாளில் தமிழ் மக்கள் கூடினாலும் அதனை பாதுகாப்புப் படையினர் எதிர்ப்பார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே. அதே சமயம், எத்தனை முயற்சிகள் எடுத்தாலும், தமிழர் பகுதிகளில் ஒரு சிலராவது "மாவீரர் தினம்" ஏதோ ஒரு பெயரில் அனுஷ்டிக்க முயல்வார்கள் என்பதையும் இராணுவம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இதில், இராணுவம் எதிர்பார்த்தது போலவே செயல்பட்டது. இப்போது, கைது செய்யப்பட்ட மாணவர்கள் குறித்து கரிசனையாகப் பேசும் தமிழ் அரசியல் தலைமைகள் அவர்களை பிரச்சினை தொடங்குவதற்கு முன்னர் சரியாக வழி நடத்தத் தவறிவிட்டது. அதேசமயம், பிரச்சினை பெரிதான பின்னர் நிலைமையைச் சீர் படுத்த யாழ்.பல்கலையின் மூத்த ஆசிரியர்கள் சிலர் முயற்சி எடுத்துள்ளது வரவேற்கத்தக்கது.

"திருக்கார்த்திகைத் திருநாள்" என்ற பெயரில் யாழ்.பல்கலையில் மாணவர்கள் நிகழ்த்திய நிகழ்வுகளை இராணுவம் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டிருந்தால் பிரச்சினை பெரிதாக வாய்ப்பு இருந்திருக்காது என்ற கருத்து தமிழ் அறிவு ஜீவிகளிடையே இருக்கிறது. அவ்வாறெல்லாம் இராணுவம் கடந்த காலங்களில் செயல்பட்டிருந்தால் பிரச்சினை இந்த அளவிற்கு வளர்ந்திருக்காது என்பதே உண்மை. அதே சமயம், ஒரு நாளும் இல்லாத திருநாளாக, இந்த வருடம் மட்டும் யாழ்.பல்கலையில் "திருக்கார்த்திகைத் தீபம்" ஏற்றப்பட்டால் இராணுவம் சும்மா இருந்தாலும் அவர்களுக்கு சொடக்கு விட்டு சவால் விடுவது போலவே இந்த வருட நிகழ்வுகள் அமைந்திருந்தன.

## மறக்கப்பட்டதா "மாவீரர் தினம்"?

காரண-காரியங்கள் எதுவாயினும், யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் "மாவீரர் தினம்" அனுஷ்டிக்கப்படுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதே சமயம், தமிழ்ப் பத்திரிகை மற்றும் இணையத்தள செய்திகளை வைத்து நோக்கும் போது, புலம்பெயர் தமிழ் மக்களிடையே நவம்பர் 27-ஆம் தேதியை "மாவீரர் தினம்" என்று அனுஷ்டிப்பதில் கடந்த வருடங்களை ஒப்பிட்டு நோக்கும் போது இந்த முறை, அதிகப்படியான எழுச்சியில்லை என்றே கூற வேண்டும். புலம்பெயர் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு தங்கள் தலைமுறையினரது இணக்க உணர்வுகளை அவர்கள் மறக்க நினைத்து செயல்படுகிறார்களா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். அதே சமயம் அவர்களது ஆதரவும் பின்னர் அரவணைப்பும் தங்களுக்கு எப்போதும் உண்டு என்று இலங்கையில் செயல்பட முயலும் இளைஞர்கள் தங்களது எதிர்காலத்தை எண்ணி நோக்க வேண்டும்.

கடந்த நான்கைந்து தசாப்தங்களாக இனப்பிரச்சினையைக் காரணம் காட்டி, மேலைநாடுகளில் அரசியல் தஞ்சம் கோர விரும்பும் இளைஞர்கள், அவுஸ்திரேலியாவை அடுத்துள்ள "கிறிஸ்மஸ் தீவு" போன்ற திறந்த வெளி சிறைச்சாலைகளில் காலம் கழிக்க விரும்புகிறார்களா? என்ற கேள்விக்கும் பதில் தேடிய பின்னரே தங்களது காலை முன் வைக்க வேண்டும். அல்லது, "லண்டன் ஏ-லெவல்" தேர்வுகளை முடித்துவிட்டு அதே வழியைப் பின்பற்றப் போகிறார்களா? என்ற கேள்விக்கும் பதில் அறிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் தற்போது விடுபட்டுப் போன தமிழ்ச் சமூகத்தினிடையே வெளிநாட்டு மோகம் தலை விரித்தாடுகிறது. இதற்கு இனப் பிரச்சினையை காரணம் காட்டுவார்களேயானால், இன்னமும் விடுபட்டுப் போய் நாளையும் மறுநாளும் கூட அரசுடனும், இராணுவத்தினருடனும், ஏன், சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளுடனும் எதிர்நின்று பேசத் திறனற்றுப் போன அப்பாவித் தமிழ் மக்களை பகடைக்காயாகப் பயன்படுத்தக்கூடாது. அதனை தமிழ் அரசியல் மற்றும் சமூகத் தலைமைகள் எதிர்கொள்ள வேண்டும். எப்படி, தமிழ் இனத்திற்கு அரசியல் தீர்வும் அதிகாரப் பரவலும் முக்கியமோ, அதை விட முக்கியம், அவற்றை அனுபவிப்பதற்கான மக்கள். தமிழ் மக்களே இல்லாது போன வடக்கு மாகாணத்தில், அரசியல் அதிகாரம் இருந்தால் என்ன? போனால் என்ன? யாருக்காக? இவ்வாறெல்லாம் நிகழுமேயானால், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் சிங்களவர்கள் வந்து குடியேறுவதை கேள்வி கேட்பதற்குக் கூட அங்கு தமிழர்கள் எவரும் மிஞ்சி இருக்க மாட்டார்கள். அப்படியானால், யாருக்காக தற்போதைய தமிழ்ச் சமுதாயம் அழுகிறது? தமிழ் அரசியல் தலைமைகள் போராடுகின்றன? இந்தப் பின்னணியில், திருக் கார்த்திகைத் தீபத் திருநாள் என்றோ, "மாவீரர் தினம்" என்றோ எதற்காக விழாக் கொண்டாட்டங்கள்? ஆராதனை, அனுஷ்டானங்கள்? இவ்வாறு எழுதுவதாலும், பேசுவதாலும் மட்டுமே தமிழ் இளைஞர்கள் சமாதானமாகி விடுவார்கள் என்றோ, இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்றோ எதிர்பார்ப்பது அறிவீனம். அது போன்றே, யாழ்ப்பாணத்திலும் வடக்கு மாகாணத்தின் பிற பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள், அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர்கள், தங்களது அன்றாட வாழ்க்கையில் இராணுவம் தலையிடுகிறது என்றோ, தங்களது பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது என்றோ கருதி செயல்பட்டால் அவற்றில் உள்ள உண்மையையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

***(56ஆம் பக்கம் பார்க்க...)***



மேற்காசிய அரசியல்

# அதிருப்திக் குளிர்காலமாக மாறிய அரபு வசந்தம்

■ மைக்கேல் ஜான்சன்

மேற்கிற்கும் கிழக்கிற்கும் இடையேயான கேந்திர தரைப்பாலமாக விளங்கும் மேற்காசியாவை சிரிய நெருக்கடி நிலைகுலையச் செய்துவிடக்கூடும்

**2013** இல் குழப்பகரமான மேற்காசிய ஆட்சியாளர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான ஆழமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. ஜனநாயகத்துக்கும் முன்னேற்றத்துக்குமான நம்பிக்கைகளுக்கு ஊக்கமளித்த 2011 அரபு வசந்தம் அதிருப்தியும் மனக்கசப்புமுடைய ஒரு குளிர்காலமாக மாறியிருக்கிறது. இரு முக்கிய நாடுகள், ஒன்று கூடுதல் சனத்தொகையைக் கொண்ட அரபு நாடான எகிப்து, மற்றையது கிழக்கு அரபுலகின் மத்திய பகுதியான சிரியா, எகிப்தில் இடம்பெறுவது அரசியல் போராட்டம். 1928 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டபிறகு ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் (ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை ஆட்சியதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்த மக்கள் கிளர்ச்சிக்குப்பிறகு) அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வாக்குப் பெட்டிகளைப் பயன்படுத்தியிருக்கிறது. இந்த இயக்கம் தற்போது ஜனாதிபதிப் பதவியையும் பாராளுமன்றத்தின் மேல் சபையையும் அதன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அத்துடன் முஸ்லிம் அடிப்படைவாதிகளினால் வரையப்பட்ட ஒரு புதிய அரசியலமைப்பு நாட்டின் அடிப்படைச் சட்டமாக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் தேர்தலில் பாராளுமன்றத்தின் கீழ் சபையில் பெரும்பான்மையான ஆசனங்களை வெல்ல முடியுமென்று முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. முஸ்லிம்களின் கட்டளைச் சட்டமான 'ஷரியா'வினால் ஆட்சி செய்யப்படுகிற 'இஸ்லாமிய அரசாக' எகிப்தை மாற்றுவதே இந்த இயக்கத்தின் நீண்டகால நோக்கிலான இலக்காகும்.

சகோதரத்துவ இயக்கத்தின் வளர்ச்சியும் ஆதிக்கமும் தாராளவாதிகளினாலும் இடதுசாரிகள் மற்றும் வலதுசாரிகளினாலும் மிதவாத அடிப்படைவாத புரட்சிவாதிகளினாலும் எதிர்க்கப்படுகிறது. இவர்கள் ஒரு "சிவில்'' அல்லது மதச்சார்பற்ற, பன்முகத்தன்மைகொண்ட, ஜனநாயக அரசை உருவாக்கப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அடிப்படைவாதிகளுக்கும் எதிரணி முகாமுக்கும் இடையிலான போட்டா போட்டித் தேர்தல் பிரசார காலத்தில் தீவிரமடையப்போகிறது. நோபல் சமாதானப் பரிசாளரான முஹமட் எல் பராடி, முன்னாள் அரபு லீக் தலைவர் அமிர் மூசா மற்றும் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் ஹம்டீன் சபாஹி ஆகியோரினால் தலைமை தாங்கப்படுகிற 10 கட்சிகள், குழுக்களைக் கொண்ட கூட்டமைப்பான தேசிய மீட்பு முன்னணியே முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் பிரதான எதிராளியாகும்.



ஜனாதிபதி முர்சி

> எகிப்தில் இடம்பெறும் போராட்டத்தின் விளைவுகள்அரபு உலகின் அரசியல் திசைமார்க்கத்தை தீர்மானிக்கக்கூடும்

ஜனநாயக வழிவகைகளின் ஊடாக சகோதரத்துவ இயக்கத்துடன் மோதுவதே தேசிய மீட்பு முன்னணியின் நோக்கமாக இருக்கின்ற அதேவேளை, சவால்களை எதிர்கொள்வதற்கு நேர்மையான வழிமுறைகளையும் பாதகமான வழிமுறைகளையும் பயன்படுத்துவதற்கு சகோதரத்துவ இயக்கம் தயாராகியிருக்கிறது. இந்த இயக்கத்தினால் நியமிக்கப்பட்ட அரச வழக்குத்தொடுநர் தேசிய மீட்பு முன்னணியின் மூன்று தலைவர்களுக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரணை செய்ய ஆரம்பித்திருக்கிறார். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தில் தனது வேர்களைக் கொண்ட நாட்டின் முதலாவது தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி முஹமட் முர்சியை பதவி கவிழ்ப்பதற்கு எகிப்தியர்களைத் தூண்டியதாகவே இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. தேர்தலுக்கு முன்னதாக மிகவும் நெருக்கடியான பாதையில் இரு முகாம்களும் பயணிக்க வேண்டியிருக்கிறது. வாக்காளர்கள் சகோதரத்துவ இயக்கத்தின் மீதும் எதிரணி மீதும் வெறுப்படைய ஆரம்பித்திருக்கும் ஒரு தருணத்தில் முர்சி எரிபொருட்கள், மின்சாரம், மென்பானங்கள், சீமெந்து மற்றும் பொருட்கள் மீதான வரிகளை விதிக்க வேண்டியிருப்பதுடன், நம்பகத்தன்மை வாய்ந்த வேட்பாளர்களை தேர்தல் களத்தில் நிறுத்த வேண்டியும் இருக்கிறது. வரி அதிகரிப்புகளை மக்கள் விரும்பவில்லை.

வரிகளை விதிப்பதை முர்சி ஒத்திவைப்பாரேயானால், வீழ்ச்சியுறும் எகிப்தியப் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதற்கு அவசரமாகத் தேவைப்படுகின்ற 480 கோடி டொலர்கள் கடன்களை வழங்குவதை சர்வதேச நாணய நிதியம் காலவரையறையின்றித் தாமதிக்கக்கூடும். அதேவேளை, சகோதரத்துவ இயக்கத்தின் ஆதரவாளர்கள் தொழில் வாய்ப்புகளையும் மருத்துவ வசதிகளையும் பாடசாலைகளையும் சிறப்பான சேவைகளையும் கோரி நிற்கிறார்கள்.

எகிப்தில் இடம்பெறுகின்ற போராட்டம் அரபுலகத்தின் அரசியல் திசை மார்க்கத்தை தீர்மானிக்கக் கூடுமென்கிற அதேவேளை, சிரியாவில் இடம்பெறுகின்ற மோதல்கள் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையிலான கேந்திரத் தரைப் பாலமாக விளங்கும்

மேற்காசியாவின் உறுதிப்பாட்டைக் குலைத்துவிடலாம். மதச்சார்பற்ற பாதிஸ்ட் (பாத்கட்சி) ஆட்சிக்கெதிரான போராட்டம் எதிரெதிரான நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்ட பல்வேறு ஆயுதக் குழுக்களினால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போதைய ஆட்சி வீழ்ச்சி காணும் பட்சத்தில் ஆட்சிப் பீடத்துக்கு வருமென்று எதிர்பார்க்கப்படும் கெய்ரோவை மையமாகக் கொண்டியங்கும் எதிரணியான சிரிய தேசிய கூட்டமைப்புக்கு ஆட்சி முறையில் அனுபவமும் இல்லை. போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பிரிவுகள் மீது கட்டுப்பாடும் இல்லை.

மிகவும் தகுதிவாய்ந்ததாக வெளிக்கிளம்பக் கூடியது ஜபாத் அல்-நுஸ்ரா என்ற அமைப்பேயாகும். இது அல்கயெடா இயக்கத்தின் ஒரு இணை அமைப்பான ஈராக்கிய இஸ்லாமிய தேசம் என்பதன் ஒரு கிளையாகும். இதன் நோக்கம் அரபுலகு பூராகவும் இஸ்லாமியப் பேரரசு ஒன்றை நிறுவுவதேயாகும். ஆனால் சிரியாவைப் பற்றி அது பெரிதாக அக்கறைப்படப் போவதில்லை. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற போர் நிறுத்தப்படாவிட்டால் ஆயிரக்கணக்கான சிரியர்கள் தொடர்ந்தும் மாளப்போகிறார்கள். 22 மாதகால கிளர்ச்சியின்போது சுமார் 45 ஆயிரம் பேர் ஏற்கனவே பலியாகிவிட்டார்கள். இடம் பெயர்ந்த அல்லது நாட்டை விட்டுத் தப்பியோடிய சிரியர்களின் எண்ணிக்கை 150 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. போர் தொடருமானால் மேலும் ஆயிரக்கணக்கானோர் வெளியேறும் ஆபத்து இருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை.

ஈராக்கிய இஸ்லாமிய தேசமும் (Islamic state of Iraq) அதைப் போன்ற குழுக்களும் தங்களை அணிதிரட்டிக் கொண்டு ஈராக்கில் தங்களின் செயற்பாடுகளை அதிகரித்திருக்கின்றன. அங்கு இவர்கள் (2003 ஆக்கிரமிப்பிற்குப் பிறகு) அமெரிக்காவினால் பதவியில் அமர்த்தப்பட்ட ஷியா அடிப்படை வாதிகளின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான போராட்டத்தை தீவிரப்படுத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் குழப்பநிலை சவூதி அரேபியா மற்றும் வளைகுடா நாடுகளையும் பாதித்திருக்கிறது. பஹ்ரெயின் சுன்னி ஆட்சியாளர்களுக்கு எதிரான ஷியாக்களின் சீற்றத்தினால் தொடர்ந்து குமுறிக் கொண்டிருக்கிறது. ஆளும் சாபா குடும்பத்தினரின் எதேச்சாதிகாரப் பாணியை குவைத்தியர்கள் எதிர்க்கிறார்கள். சவூதியில் ஷியாக்கள் சுன்னி முடியாட்சியையும் மத நிறுவனக்கட்டமைப்பையும் எதிர்க்கிறார்கள். ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆட்சியாளர்களுக்கு எதிரானவர்கள் தடுத்து வைக்கப்படுகிறார்கள். வளைகுடாவின் ஸ்திரமின்மை இந்தியாவின் எண்ணெய் விநியோகங்களையும் இலட்சக்கணக்கான இந்தியர்களின் தொழில் வாய்ப்புகளையும் ஆபத்திற்குள்ளாக்கக்கூடும்.



இஸ்ரேலில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்குப் பிறகு பிராந்தியப் போர் அச்சுறுத்தல் அதிகரிக்கக்கூடும். கூடுதல் பெரும்பான்மைப்பலத்துடன் மீண்டும் அதிகாரத்திற்கு வருவார் என எதிர்பார்க்கப்படும் பிரதமர் நெதான்யாஹூ ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்

அதேவேளை, இஸ்ரேலில் இம்மாதம் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்குப்பிறகு பிராந்திய யுத்த ஆபத்து அதிகரிக்கக்கூடும். அத்தேர்தலில் பிரதமர் பென்சமின் நெதான் யாஹூ கூடுதல் பெரும்பான்மைப்பலத்துடன் மீண்டும் ஆட்சியதிகாரத்துக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தெஹ்ரான் அணுவாயுதங்களைத் தயாரிப்பதைத் தடுக்கும் நோக்குடன் ஈரானின் அணுநிலைகள் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதில் இஸ்ரேலியப் பிரதமர் உறுதியாக இருக்கிறார்.

2013 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் மேற்குலகமும் ஈரானும் அணுத்திட்டம் தொடர்பான தகராறை தீர்த்துவைப்பதற்கு தவறும் பட்சத்தில் தனக்கு ஒரு வாய்ப்பு திறந்து விடப்படுமென்று நெதான் யாஹூ எதிர்பார்க்கிறார். அனேகமாக ஈரானுடனான தகராறை மேற்குவசம் தீர்த்துக் கொள்வது சாத்தியமில்லை என்பதே அவரின் நம்பிக்கையாகவுள்ளது.

ஈரான் மீது விமானத் தாக்குதலை இஸ்ரேல் ஆரம்பிக்கும் பட்சத்தில் அமெரிக்காவும் மோதலுக்குள் இழுக்கப்படும். இத்தகைய சூழ்நிலை தோன்றும் பட்சத்தில், அதனால் மேற்காசியாவில் பேரழிவு ஏற்படலாம் என்று ஒபாமா நிருவாகம் அஞ்சுகிறது. கிழக்கிற்கும் மேற்கிற்குமான எண்ணெய் விநியோகங்களை ஈரானியர்கள் இடையூறு செய்வதால் உலகளாவிய பொருளாதார மீட்சிக்கு அது பாதகமாக முடியும்.

# பாரதத்தை உலுக்கும் பாலியல் வன்கொடுமை

## இந்தியாவின் தஹ்ரிர் சதுக்கமாக டில்லி இந்தியா கேற் மாறிய போது...




'முழு நாடுமே எம்முடன் இருக்கிறது. ஆனால் எனது மகள் தான் எங்களுடன் இல்லை'
பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு பலியான மருத்துவ மாணவியின் தாயாரின் புலம்பல்












எம்.பி.வித்தியாதரன்



கடும் குளிர் நிலவிய அந்த ஞாயிறு மாலைப்பொழுது. அவள் தனது நண்பனுடன் டில்லியின் சனத்தொகைகூடிய ஒருபகுதியின் சந்தடிமிக்க பஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்தாள். அந்த இடத்திற்குப் பெயர் முனிர்கா. தனியார் பஸ்ஸொன்று அந்த நிலையத்திற்கு வந்தது. பஸ் ஊழியர்கள் பிரயாணிகளை ஏறுமாறு கூவி அழைத்தனர். இந்த ஜோடி பஸ்ஸில் ஏறிக்கொண்டது தாங்கள் போக வேண்டிய இடத்திற்கு பத்திரமாக போக முடியும் என்ற நம்பிக்கையில். அவர்கள் போக வேண்டிய இடம் தலைநகரின் புறநகர்ப் பகுதியின் விமான நிலையம் அமைந்திருக்கும் பாலம் ஆகும். ஆனால் அவர்களுக்கு நடந்தது நினைத்துப்பார்க்க முடியாத கொடூரமாகும்.

பஸ் நகர ஆரம்பித்ததும் பஸ் ஊழியர்கள் (இவர்கள் ஜாலியாகப் பொழுதுபோக்குவதற்காக அந்த பஸ்ஸிற்குள் இருந்தவர்கள் என்று பிறகு தெரியவந்தது) ஊழியர்கள் 23 வயதான அந்த மருத்துவ மாணவிக்கருகில் தவறான நோக்குடன் நெருங்க ஆரம்பித்தார்கள். அவளது நண்பன், 28 வயதான கணினிப் பொறியியலாளர் அதை ஆட்சேபித்தார். அவரின் தலையில் அவர்கள் இரும்புக் கம்பியினால் சுயநினைவிழக்கும் வரை தாக்கினார்கள். அவ்வாறு அவர்கள் தாக்கியபோது அவளும் தனது நண்பனைக் காப்பாற்ற தன்னால் இயன்ற முயற்சியைச் செய்தார்கள். மதுபோதையில் இருந்த அந்த கொடுமைக்காரர்களில் ஒருவனின் கையை அவள் கடித்தாள். அதற்குப் பிறகு நாம் இது வரை அறியாதவகையிலான பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாள். அவளும் கூட சுய நினைவிழக்கும்வரை தன்னால் இயன்ற வரை துணிச்சலுடன் அந்த காமுகர்களை எதிர்த்தாள். இவையெல்லாம் நடந்துகொண்டிருக்கையில் பஸ் சனநெரிசல் மிக்க வீதியொன்றினூடாக ஓடிக்கொண்டிருந்தது. அதன் வழியில் மூன்று பொலிஸ் கட்டுப்பாட்டு நிலையங்களை பஸ் கடந்து சென்றது. வர்ண கண்ணாடிகளுடனும் திரைச்சீலைகளுடனும் கூடிய பஸ் அந்த யுவதியை 6 பேரும் மாறி மாறி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கும் வரை ஒரே மார்க்கத்தில் இரு தடவைகள் பயணம் செய்திருக்கிறது. மருத்துவ மாணவியும் நண்பனும் பஸ்ஸில் ஏறி ஒரு மணித்தியாலம் கடந்த நிலையில் விமான நிலையத்திற்கு அண்மையாக மஹிபால்பூர் அருகே ஆளரவம் இல்லாத ஒரு இடத்தில் பெரும்பாலும் நிர்வாணக் கோலத்தில் தூக்கிவீசப்பட்டுக் கிடந்தனர். அவர்களின் உடல்களைக் கண்டதும் ஆட்கள் அங்கே கூடத் தொடங்கினர். பொலிஸ் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அறிவித்ததும் 15 நிமிடங்களில் பொலிஸார் தலத்திற்கு வந்து சேர்ந்தனர். தங்களது ஆடைகளை இருவர் மீதும் போர்த்திய பொலிஸார் சஃப்தர்ஜுங் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். டாக்டர்கள் தங்களால் இயன்றவரை சிறந்த சிகிச்சையை அளிக்க முயற்சித்தார்கள். மாணவியின் உயிரைக் காப்பாற்ற அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தில் உள்ள டாக்டர்களிடம் ஆலோசனை பெறப்பட்டது. டாக்டர்கள் பல சத்திர சிகிச்சைகளைச் செய்து கடுமையாக காயமடைந்திருந்த








குடல் பகுதிகளை அகற்றினார்கள். மாணவியும் உயிருக்கான தனது போராட்டத்தில் குறிப்பிடத்தக்க தைரியத்தை வெளிக்காட்டினாள்.

ஒருவாரத்திற்கும் கூடுதலான காலத்திற்குப் பிறகு இந்தியா பூரா கவும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்க ளின் விளைவான நெருக்குதல்களால் அரசாங்கம் சிங்கப்பூரில் உள்ள வைத்தியசாலை ஒன்றுக்கு அவளை கொண்டு செல்லத் தீர்மானித்தது. அம்புலன்ஸ் விமானமொன்றில் அவள் குடும்ப உறுப்பினர்கள் சகிதம் கிறிஸ்மஸ்ஸுக்கு மறுநாள் கொண்டு செல்லப்பட்ட போது இரத்த அழுத் தத்தில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்க ளைத்தொடர்ந்து மாரடைப்பு ஏற் பட்டது. மேலும் 3 நாட்களுக்கு அவளை உயிருடன் வைத்திருக்க டாக்டர்களால் இயன்றபோதிலும் கூட உயிரைக் காப்பாற்ற முடிய வில்லை. மாரடைப்பைத் தொடர்ந்து அவளது மூளையும் சேதத்துக் குள்ளாகி வீங்கத்தொடங்கியது. டிசம் பர் 28 இரவு அவள் உலகை விட்டுப் பிரிந்தாள். ''இது பாலியல் வல்லுற வைவிடவும் படுமோசமானது.... பரந்தளவில் காயங்கள் ஏற்பட்டிருந் தன.... ஒரு மடங்கலான பொருள் திரும்பத் திரும்ப பயன்படுத்தப்பட்டி ருக்கிறது.'' என்று டாக்டர்களில் ஒரு வர் கூறினார்.

### முன்னென்றும் இல்லாத கிளர்ச்சி

பாலியல் வல்லுறவு விரைவாக அதிகரித்துவருகிற குற்றச்செயல்க ளில் ஒன்றாக இருக்கின்றபோதிலும் கூட துரதிர்ஷ்டவசமாக இந்தியா வில் வழமையாக அது ஒரு பெரிய செய்தியல்ல. தேசிய குற்றப்பதிவு கள் பணியகத்தின் தகவல்களின்படி இந்தியாவில் 1971 ஆம் ஆண்டு 2487 பாலியல் வல்லுறவுச் சம்பவங் கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த எண்ணிக்கை 2011ஆம் ஆண்டில் 24,206 ஆக அதிகரித்திருக்கிறது. கொலைச் சம்பவங்களில் காணப்படு கின்ற 250 சதவீத அதிகரிப்புடன் ஒப் பிடும் போது இது 873.3 சதவீத அதி கரிப்பாகும். இந்தியாவில் ஒவ்வொரு 24 நிமிடங்களுக்கும் ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படு கிறாள். ஓடும் பஸ்ஸுக்குள் இடம் பெற்ற பாலியல் வல்லுறவுக் கொடு மையை ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதும் நூற்றுக்கணக் கில் மக்கள் கூடி ஆர்ப்பாட்டங்க ளைச் செய்ய ஆரம்பித்தார்கள். கடந்த டிசம்பர் 22 ஆம் திகதி (சம்ப வம் இடம்பெற்ற முதல் வார இறுதி யில்) சனிக்கிழமை ஆர்ப்பாட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கின. சமூக இணையத்தளங்கள் மற்றும் கைத் தொலைபேசிகள் ஊடாக செய்யப் பட்ட பிரசாரங்களைத் தொடர்ந்து டில்லியில் ஆட்சி அதிகார பீடங் களான பாராளுமன்றம், ராஷ்டிரபதி பவன் மற்றும் அரசாங்க அலுவலகங் கள் அமைந்துள்ள பகுதிக்கு நெருக்கமான இந்தியா கேற் அருகே மைதானங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் காலையில் இருந்து கூடத்தொ டங்கினார்கள். இவர்களில் அதிகப் பெரும்பாலானவர்கள் இளைஞர்க ளும் யுவதிகளுமாவர்.


அரசியல் தலைவர்களினதும் அர சாங்க நிறுவனங்களினதும் ஊழல்த் தனமான செயற்பாடுகளினாலும் திற மையற்ற அணுகுமுறைகளினாலும் ஆத்திரமும் வேதனையும் அடைந்தி ருக்கின்ற போதிலும் கூட மக்கள் மிக அமைதியாகவே தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டிக்கொண்டிருந்தார்கள். மக்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தபோது அது அரசாங்கத் திற்கு லோக்பால் சட்ட மூலம் ஒன்றை நிறைவேற்றக்கோரி கடந்த வருடம் அண்ணா ஹசாரே தலைமையில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்புப் போரா ட்டத்தை நினைவுபடுத்தியது. அமை தியாக இருந்த மக்களை கலைக்கும் முயற்சியாக டில்லிப் பொலிஸ் கண் ணீர் புகைக்குண்டுகளையும் நீர் பீச்சி யடிக்கும் இயந்திரங்களையும் பயன் படுத்தினர். ஆனால், மக்கள் எளிதாக கலைந்துசெல்லக்கூடிய மனநிலை யில் இருக்கவில்லை. அவர்கள் இரவு

வரை அங்கேயே இருந்தனர். பொலிஸாரின் இந்த தேவையற்ற நடவடிக்கை மக்களின் ஆத்திரத்தை மேலும் அதிகரிக்கவே உதவியது. ஞாயிற்றுக்கிழமை இந்தியா கேற் அருகே மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் கூடினார்கள். அரசாங்கத்திற்கும் பொலிஸாருக்கும் நடுக்கம் பிடிக்க ஆரம்பித்தது.

இந்தியா கேற் மக்கள் சமுத்திரமாக காட்சியளித்தது. இது எகிப்தில் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை அதிகாரத்தில் இருந்து தூக்கியெறிந்த மக்கள் சக்தியின் தஹ்ரிர் (புரட்சி) சதுக்க காட்சிகளை இந்தியாவிற்கு நினைவுபடுத்துவதாக இருந்தது. மேலும் பல மாநில தலைநகரங்கள், பட்டணங்கள், கிராமங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறத் தொடங்கின. இது இந்தியா முழுவதும் தழுவிய ஒரு போராட்டமாக மாறியது. நிலைவரத்தை எப்படிக் கையாள்வதென்பதை அரசாங்கம் தெரிந்திருக்கவில்லை. அண்ணா ஹசாரே, பாபா ராம்தேவ் ஆகியோர் நடத்திய போராட்டங்களிலிருந்து அரசாங்கம் எந்தப்பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லையென்பதை அம்பலப்படுத்தியது.

பொலிஸார் மீண்டும் கண்ணீர் புகையையும் நீர் பீச்சியடிக்கும் இயந்திரத்தையும் பயன்படுத்தினர். மக்கள் வெள்ளம் சீற்றமடைந்தது. பொலிஸார் வன்முறையை பயன்படுத்திய போது மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள கல்வீச்சு நடத்த ஆரம்பித்தார்கள். பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையே ஆங்காங்கே நேரடி கைகலப்புகளும் இடம்பெற்றன. இந்தக் குழப்பநிலையில் காயமடைந்த ஒரு பொலிஸ்காரர் பிறகு மரணமடைந்தார். இளைஞர்களை மாத்திரமல்ல வயோதிபப் பெண்களையும் சிறுவர்களையும் கூட பொலிஸார் கண்மூடித்தனமாகத் தாக்கினர். அதேவேளை, இந்தியா கேற் அருகே அமைதியான முறையில் தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டிய ஒரு கூட்டத்தினர் ஆடிப்பாடிக் கொண்டிருந்தனர். தங்களது அனுபவங்களை நாடகபாணியில் எடுத்துரைத்துக் கொண்டிருந்தனர். மாலைவேளை நெருங்கியதும் இவர்களையும் கூட பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து கலைக்க முயன்றனர். ஆர்ப்பாட்டக்காரர்களைத் தேடி இந்தியப் பத்திரிகைகள் கழகத்திற்குள் பிரவேசித்த பொலிஸார் அங்கிருந்த காவலரைத் தாக்கினர்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் அரசாங்கத்திற்கு கடுமையான நடுக்கத்தைக் கொடுத்தன. காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி தனது வாசஸ்தலத்தில் இருதடவைகள் இளைஞர் குழுக்களைச் சந்திக்கத் தீர்மானித்தார். உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டேயும் சில ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்தித்தார். என்றாலும்கூட அவர் தொடர்ந்தும் கர்வத்தனமான மனநிலையையே வெளிக்காட்டிக் கொண்டிருந்தார். உயர்மட்ட சந்திப்புகளை அடுத்து பிரதமர் மன்மோகன் சிங் முதற் தடவையாக தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றத் தீர்மானித்தார்.




நியூ ரவுண் ஆரம்ப பாடசாலை படுகொலைக்கு பிறகுப் அமெரிக்கர்களுக்கு உரையாற்றிய ஒபாமா கன்னத்தில் உருண்டோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பேசியதை தொலைக்காட்சிகளில் பார்த்தோம். மக்களின் வேதனை மீதான அமெரிக்க ஜனாதிபதியின் கரிசனையின் வெளிப்பாட்டிற்கும் மன்மோகன் சிங்கின் உணர்ச்சியற்ற வேண்டுகோளுக்குமிடையே எவ்வளவு வித்தியாசம்

திங்கட்கிழமை காலை உரையாற்றிய அவர் பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும் என்று உறுதியளித்தார். ஆனால், அதனால் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இல்லை. அரசாங்கத்தின் வார்த்தைகளை பெரிதாக எடுக்க முடியாது என்பது மக்களுக்குத் தெரியும். ஏனென்றால் அண்ணா ஹசாரேக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாத அனுபவம் மக்கள் முன் நிதர்சனமாகயிருக்கிறது. விரைவாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆளும் கூட்டணியின் தலைவியான சோனியா

காந்தியும் கூட உறுதியளித்தார்.

மக்களின் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உருப்படியான யோசனைகள் இல்லாமல் தடுமாறிக் கொண்டிருந்த அரசாங்கம் இறுதியில் மத்திய டில்லி பகுதியை மூடிவிடுவ தற்கு தீர்மானித்தது. அண்மையாக இருந்த சகல மெட்ரோ நிலையங்க



ளையும் மூடிய அரசாங்கம் இந்தியா கேற் அருகே மக்கள் கூடுவதற்கு தடைவிதித்துள்ளது. இந்தியா கேற் றில் இருந்து வாகனப் போக்குவரத்து கள் திசை திருப்பப்பட்ட காரணத்தி னால் அலுவலகங்களைச் சென்றடை வதில் மக்கள் பெரும் சிர மங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா வந்திருந்த வேளையில் தலைநகரில் இத்தகைய குழப்பநிலை ஏற்பட்டது அரசாங்கத்திற்கு பெரும் கவலையைக் கொடுத்தது. இந்தியா வில் இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டங் களைப் பற்றி எத்தகைய எண்ணத்தை ரஷ்ய ஜனாதிபதி கொண்டிருப்பார் என்று அரசாங்கம் நினைத்திருக்கும். வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்க ளுடனான சந்திப்புகள் டில்லி, ஐதரா பாத் இல்லத்திலேயே நடைபெறுவது வழமை. ஆனால், புட்டின் உடனான பிரதமரின் சந்திப்பு பாதுகாப்பு நிறைந்த பிரதமரின் வாசஸ்தலத்திற்கு மாற்றப்பட்டது. இது ரஷ்ய தூதுக்கு

ழுவினருக்கு நிச்சயமாக அசௌகரி யத்தைக் கொடுத்திருக்கும்.

இந்தத் தடை கிறிஸ்மஸ் தினமான செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்தது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் மத்தியிலும் கூட மக்கள் ஜந்தர் மந்தி ரில் சிறிய எண்ணிக்கை என்றாலும் காலை தொடக்கம் இரவுவரை ஆர்ப் பாட்டங்களைத் தொடர்ந்தனர். இங்கு இருவர் காலவரையறையற்ற உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்தனர். நாடுபூராகவும் ஆர்ப் பாட்டங்கள், முடிவு காணாத அரசா ங்கம் இந்த நிகழ்வுப்போக்குகளை தடுப்பதற்கு உருப்படியான யோசனை இல்லாத நிலையில் பாலி யல் வன்கொடுமைக்குள்ளாக்கப் பட்ட மாணவியை இந்தியாவிற்கு வெளியே ஒரு வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு தீர்மானித்தது. அவளுக்கு மிகச் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும் என்று பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் உறுதிய ளித்தனர். இத்திட்டத்தை மிகுந்த இர கசியமாக வைத்திருந்த அரசாங்கம் மாணவியை காப்பாற்றுவதற்காக இரவு பகலாக கடுமையாகப் பாடுபட் டுக்கொண்டிருந்த பல டாக்டர்களின் ஆலோசனையை மீறி அவளை சிங் கப்பூர் வைத்தியசாலைக்கு மாற்றத் தீர்மானித்தது. அதற்கான திட்டம் ஒரு சிலருக்கு மாத்திரமே தெரிந்தி ருந்தது. அந்த டாக்டர்கள் அஞ்சியது

போன்றே அம்புலன்ஸ் விமானத்திற் குள் மோசமானது நடந்தேவிட்டது. அவளுக்கு மாரடைப்பு ஏற்பட்டது டன், மூளையும் வீக்கம் கண்டது. விடாப்பிடியாக தைரிய உணர்வை வெளிக்காட்டிய போதிலும் கூட அவளால் இந்தப் பாதிப்புகளில் இருந்து மீட்சிபெற முடியவில்லை.


மத்திய டில்லியை மூடியதன் மூலம் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துவ தில் ஓரளவு வெற்றியைக் கண்டிருந்த அரசாங்கம், மாணவியின் மரணம் பற்றிய செய்தி வெள்ளியன்று பரவத் தொடங்கியதும் அதே தந்திரோபா யத்தையே கடைப்பிடித்தது. அண் மையாகவுள்ள பத்து மெட்ரோ நிலை யங்களை மூடிய அரசாங்கம் சனிக் கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் வாகனப்போக்குவரத்துகளை திசைதி ருப்பியது. ஆனால் இந்தியா கேற் வீதிக்கு அண்மையாகவும் ஜந்தர் மந் திரிலும் கூடிய மக்கள் ஆர்ப்பாட்டங் களைத் தொடர்ந்தனர்.

துரிதமாகவும் விவேகமாகவும் செயலில் இறங்கிய அரசாங்கம் தக னக்கிரியை ஏற்பாடுகளை இரகசிய மாக வைத்திருந்தது. ஞாயிறு இரவு விஷேட விமானமொன்றில் சிங்கப்பூ ரில் இருந்து மாணவியின் சடலம் டில் லிக்கு கொண்டுவரப்பட்டது. அரசா ங்கத்திற்கு ஏற்பட்டுக்கொண்டிருந்த சேதத்தை கட்டுப்படுத்தும் ஒரு முய ற்சியாக பிரதமரும் சோனியா காந்தியும் சடலம் இறக்கப்பட்ட நேரம் விமானநிலையத்தில் பிரசன்ன மாகியிருந்தனர். பிறகு சடலம் மகா விர் பகுதியில் உள்ள ஒரே ஒரு அறை யைக்கொண்ட மாணவியின் வீட் டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த வீடு அந்த வேளை ஒரு பாது காப்புக் கொத்தளமாக மாற்றப்பட்டி ருக்கிறது. பொழுது புலர்வதற்கு முன்னர் தகனக்கிரியையை முடித்து விடுமாறு மாணவியின் குடும்பத்தின ருக்கு பொலிஸார் நெருக்குதல் கொடுத்தனர். ஆனால், சூரிய உதயத் திற்குப் பின்னர் மாத்திரமே சிதைக்கு தீ வைக்க முடியும் என்று இந்து மரபைச் சகோதரர்கள் சுட்டிக்காட்டி னர். அதையடுத்து மக்கள் வந்து

கூடும் முன்னதாக திங்கட்கிழமை காலை கிரியைகள் எல்லாம் திடுதிப் பென்று முடித்துவைக்கப்பட்டன.

எவ்வாறெனினும் ஆர்ப்பாட்டங் கள் தொடரவே செய்தன. அடுத்து வரும் நாட்களிலும் பெரிய ஆர்ப் பாட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய் யப்பட்டுக்கொண்டிருந்தன. கால வரையறையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த இருவர்களினதும் உடல்நிலை மோசமாகிக் கொண்டு போவதாக இக்கட்டுரையை எழுதிய தருணம்வரை அறிவிக்கப்பட்டிருந் தது. மக்கள் தாங்களாகவே ஆர்ப் பாட்டங்களில் இறங்கிய இத்தகைய நிகழ்வுகளை இந்தியா கண்டதில்லை. எந்தவொரு அரசியல் கட்சியுமோ அல்லது அரசியல் வாதியுமோ சம்பந்தப்படவில்லை. அரவிந்த் கெஜ்ரிவால் அல்லது அண்ணா ஹசாரே போன்ற சமூக ஆர்வலர்கள் கூட பங்கேற்கவில்லை. மத்திய டில் லிப் பகுதியை சுமார் ஒருவார காலத் திற்கு அரசாங்கம் மூடிவிடவேண் டிய நிலையை ஆர்ப்பாட்டங்கள் ஏற் படுத்தியிருந்தன. இன்னமும் கூட இந்தியா கேற் பகுதிக்கு மக்கள் செல்ல முடியாமல் இருக்கிறது. அத னால் மக்கள் ஜந்தர் மந்திரில் கூடுகி றார்கள். இறுதியாக இத்தகைய பிர மாண்டமான ஆர்ப்பாட்டங்களை இந்தியா 1990ஆம் ஆண்டு இட ஒதுக்கீடு அதிகரிப்பிற்கெதிராக மாணவர்களும் இளைஞர்களும் வீதிகளில் இறங்கிப் போராடிய வேளையிலேயே கண்டது.

துயரத்திற்குள்ளாகியிருக்கும் மாணவியின் குடும்பம் அஸ்தியைக் கங்கையில் கரைப்பதற்காகச் சென்றி ருக்கிறது. உத்தரப்பிரதேசமே அவர்க ளின் பூர்வீகமாகும். அடுத்து அவர் கள் சொந்தக் கிராமமான பள்ளியா விற்கு செல்வார்கள். இருவார காலத் துக்கு டில்லியில் இருக்கமாட்டார்கள். ஆனால், அது நிலைவரத்தைக் கையாளுவதில் பெரும் சிக்கலை எதிர்நோக்கியிருக்கும் அரசாங்கத்தி ற்கோ காங்கிரஸ்கட்சிக்கோ எந்த விதத்திலும் ஆறுதலைத் தரும் சாத்தி யமில்லை.




மாணவியின் முகம் இன்னமும் உலகிற்குக் கூட தெரியாததாகவே இருக்கிறது. அவளுக்கு ரைம்ஸ் ஒப் இந்தியா 'நிர்பாயா' என்றும் இந் தியா டுடே வெளியீடுகள் 'ஜோதி' என்றும் பெயர் சூட்டியிருக்கின்றன. தினமும் பெருவாரியான குற்றச் செயல்களை பற்றிக் கேள்விப்படுகிற அதேவேளை, அரசாங்கத்தின் அச மந்தமான போக்கினால் விரக்திய டைந்திருக்கும் பொதுமக்களுக்கு இந்தச் சம்பவம் பாலியல் வன்கொடு மைகள் தொடர்பில் பெரும் விழிப்பு ணர்வைக் கொடுத்திருக்கிறது.

"முழுநாடுமே எம்முடன் இருக்கி றது. ஆனால் எனது மகள் தான் எங்க ளுடன் இல்லை" மாணவியின் தாயார் இவ்வாறு கூறினார். எவ் வளவு உண்மை பாருங்கள்.

தங்களது அன்பு மகளுக்கு இந்த அநியாயத்தைச் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனையை துரிதமா கக் கொடுக்க வேண்டும் என்று குடும் பத்தினர் விரும்புகின்றார்கள். இந்தக் கோரிக்கை ஆயிரக்கணக்கான ஆர்ப் பாட்டக்காரர்களினால், அரசியல்வா திகளினால், சட்டத்துறை நிபுணர்களி னால், ஏன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையினால்கூட முன்வைக்கப் பட்டிருக்கிறது. பாலியல் வல்லுறவு போன்ற கொடுமைகளை இல்லாமல் செய்யமுடியும் என்பதை இந்தியா அதன் கடந்தகாலத்தைய சமூக சீர் திருத்த இயக்கங்களினூடாக உல கிற்கு காட்டியிருக்கிறது என்று கூறி யிருக்கும் நவநீதம்பிள்ளை இந் தியாவில் பெண்களுக்கெதிரான வன் முறைகளை முடிவிற்கு கொண்டு வரும் நோக்குடன் அவசரமானதும் நேர் மைத்திறனுடையதுமான விவா தம் ஒன்று நடத்தப்படவேண்டு மென்று அழைப்பு விடுத்துள்ளார். இன்று தேவைப்படுவது பொதுமக் கள் மத்தியிலான புதிய விழிப்பு ணர்வும் பெண்களின் நலன்களைப் பொறுத்தவரை சட்டத்தை நடைமு றைப்படுத் தும் பிரிவினரின் செய லூக்கத்துடனான அணுகுமுறைமை யாகும். பாலியல் வல்லுறவுக்கு எதிரான இந்திய சட்டங்களை வலுப் படுத்தவேண் டிய நேரம் இது. சிவில் சமூகத்துடன் பரந்தளவிலான கலந் தாலோசனைகளை நடத்துமாறும் இதற்கான செயன்முறைகளில் உதவு வதற்கு பெண்களுக்கு எதிரான வன் முறைகள் தொடர்பான ஐக்கிய நாடு கள் விஷேட அறிக்கையாளரை வரவழைக்குமாறு நான் இந்திய அர சாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

### பிரதமரின் உரையும் ஒபாமா பாணியும்

குற்றச்செயல்களும் நீதி நிருவாக மும் நாட்டில் கையாளப்படுகின்ற முறை குறித்து பெரும் அதிர்ச்சிய

டைந்திருக்கும் மக்களுக்கு உரையாற்றுவதற்கு பிரதமர் மன்மோகன் சிங் தலைநகரில் வன்முறை ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கும் வரை காத்திருந்ததைக் காணக்கூடியதாகயிருந்தது. இந்தியாவில் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதாக மக்களுக்கு வாக்குறுதி அளிப்பதற்கு தொலைக்காட்சியில் வருவதற்கு பிரதமருக்கு ஒருவார கால ஆர்ப்பாட்டங்களுக்கு பிறகே யோசனை வந்தது. சோனியா காந்தியும் அவ்வாறே. இறுதியில் அவர் ஒரு இளைஞர் குழுவைச் சந்தித்தார். மன்மோன் சிங்கோ, சோனியா காந்தியோ அல்லது அவர்களின் இளம் அமைச்சர்களில் ஒருவரோ கூட நேர காலத்தோடு ஆர்ப்பாட்டக்காரர்களை சந்தித்து பாலியல் வன்கொடுமைக்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்தியாவின் நீதித்துறையை சீர்திருத்தம் செய்வதாகவும் உறுதியளித்திருந்தால் வன்முறைகளைத் தடுத்திருக்க முடியும் என்று பலர் நம்புகிறார்கள்.

இது இவ்வாறிருக்க அமைதியாக எதிர்ப்பை வெளிக்காட்டியவர்கள் மீது படுமோசமான வன்முறையை கட்டவிழ்த்துவிட்ட டில்லி நகர் பொலிஸ் ஆணையாளர் தொலைக்காட்சிச் சேவையொன்றின் செய்தி அலை வரிசையில் தோன்றி ''டில்லியில் பெண்கள் மாத்திரமல்ல ஆண்களும் கூட பாதுகாப்பற்றவர்களாகவே இருக்கிறார்கள். ஆண்களின் பொக்கெட்டுகளும் அடிக்கப்படுகின்றன'' என்று கூறியிருந்தார். முன்யோசனையின்றி பேசிய ஆணையாளர் பாலியல் வல்லுறவையும் பொக்கற் அடிப்பையும் ஒன்றாகப் பார்த்திருக்கிறார். இன்னொரு அலைவரிசையில் தோன்றிய உள்துறை அமைச்சர் ஆர்ப்பாட்டம் செய்கிற ஒவ்வொரு குழுவையும் அமைச்சர்கள் தனிப்பட சந்திக்கவேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார். இவர் பெண்களுக்கெதிரான குற்றச்செயல்கள் அதிகரிப்பினால் சீற்றம் அடைந்திருக்கும் மாணவர்களை தீவிர இடதுசாரி கிளர்ச்சியாளர்களான மாவோவாத நக்சலைட்டுகளுடன் ஒப்பிட்டிருந்தார்.

இத்தகைய கருத்துகளை ஆர்ப்பாட்டக்காரர்களும் ஏனையோர்களும் மக்களின் கஷ்டங்கள் தொடர்பிலும் ஆட்சியாளர்கள் மீது அதிகரித்து வருகின்ற மக்களின் அதிருப்தி தொடர்பிலும் ஆளும் வர்க்கம் காட்டுகின்ற அசமந்தப் போக்கின் வெளிப்பாடாகவே பார்க்கிறார்கள். மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையே அதிகரித்துவரும் தொடர்பின்மையின் ஒரு பிரகாசமான வெளிப்பாடாகவும் இதைப் பார்க்க வேண்டும்.

இந்த சம்பவங்களெல்லாம் மக்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ளக் கூடிய உண்மையான மக்கள் தலைவர்கள் இன்றில்லை என்பதை உணர்த்துகின்றது. மன்மோகன் சிங்கோ அல்லது சோனியா காந்தியோ ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி மற்றும் அடல் பிஹாரி வாஜ்பாய் போன்று மக்கள் தலைவர்கள் அல்ல. தற்போதைய தலைவர்களில் எவருமே மக்களுடன் பிணைப்பை ஏற்படுத்தக்கூடியவர்கள் அல்ல. அவ்வாறு பிணைப்பை ஏற்படுத்தக் கூடிய முயற்சிகளை செய்பவர்களும் அல்ல. மருத்துவ மாணவி மரணமடைந்த பிறகு டில்லி முதலமைச்சர் ஷீலா தீக்சித் ஜந்தர் மந்திரின் வீதியில் கூடியிருந்த மக்களுடன் இணைந்து பிரார்த்தனை செய்ய வந்தார். ஆனால் அவரை மக்கள் கூச்சலிட்டு திரும்பிச் செல்ல வைத்துவிட்டனர்.






மன்மோகன் சிங்கினதும் சோனியாவினதும் செயற்பாட்டுப் பாணிகளை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நடத்தையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அண்மையில் அமெரிக்காவின் மாநிலம் ஒன்றில் துப்பாக்கி மனிதனின் வெறியாட்டத்தில் 18 ஆரம்ப பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டார்கள். மறுநாளே அந்த மாநிலத்திற்கு விரைந்த ஒபாமா பலியானவர்களின் உறவினர்கள் மத்தியில் உரையாற்றி உருக்கமானதும் உணர்ச்சிபூர்வமானதுமான வேண்டுகோளை விடுத்தார். அவர் தனது கன்னத்தில் உருண்டோடிய கண்ணீரை துடைத்துத் துடைத்து உரையாற்றிக் கொண்டிருந்ததை நாமெல்லோரும் தொலைக்காட்சிகளில் நேரடியாகப் பார்த்தோம். மக்களின் வேதனைகள் மீதான அமெரிக்க ஜனாதிபதியின் கரிசனையின் வெளிப்பாட்டிற்கும் மன்மோகன் சிங்கின் உணர்ச்சியற்ற வேண்டுகோளுக்குமிடையே எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

## வருடப்பிறப்பில் பாலியல் வல்லுறவு

நிலைவரங்களில் எந்த மாற்றமுமே இல்லை. புதுவருடம் பிறப்பதற்கு முன்னதாகக் கூட டில்லியின் ஆடம்பரப்பகுதியான சப்தர்ஜுங்கில் தொடர்மாடி வீடொன்றில் இரு ஆண்களினால் 17 வயதுச் சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டாள். இந்தச் சிறுமி சமூக இணையத்தளத்தினூடாக இந்த நபர்களை சில மாதங்களுக்கு முன்னர் தொடர்பு கொண்டிருந்தார். அவர்கள் அவளை சந்தைப் பகுதிக்கு வருமாறு அழைத்து புதுவருட கொண்டாட்டம்

ஒன்றுக்கு செல்வதற்கென கூறி காரில் ஏற்றிக் கொண்டுபோய் மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தைச் கொடுத்து பாலியல் வல்லுறவு புரிந்திருக்கிறார்கள். 2011 ஜனவரி 1ஆம் திகதி கூட டில்லியின் துவார்கா பகுதியில் சிறுமியொருத்தி ஒரு கும்பலினால் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள். இருவருடங்கள் கடந்துவிட்டன, இந்தச் சம்பவம் தொடர்பில் ஒரு நபர் கூட இதுவரை கைதாகவில்லை. பொலிஸாரின் பாஷையில் விசாரணை தொடர்ந்துகொண்டிருக்கிறது.

கடந்த வருடம் மாத்திரம் டில்லியில் ஜனவரிக்கும் நவம்பருக்கும் இடைப்பட்ட காலத்தில் 635 பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பில் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. கடந்த 5 வருட காலத்தில் தலைநகரில் இதுவே கூடுதல் எண்ணிக்கையிலான பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெற்ற காலகட்டமாகும். 754பேர் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டனர். ஆனால் இதுவரை ஒருவராவது குற்றவாளியாகக் காணப்பட்டதை நாம் காணவில்லை. அதேவேளை 403பேர் மீதானவழக்குகள் இன்னமும் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 348 பேர் மீதான பொலிஸ் விசாரணை தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஆனாலும் அதிசயம் என்னவென்றால் பாலியல் வல்லுறவு தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டிருக்கும் ஓர் குற்றச் செயலாக விளங்குகிறது.

2011இல் டில்லி பொலிஸுக்கு 572 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்ட அதேவேளை, 2010இல் இந்த எண்ணிக்கை 507ஆகவும் 2009 இல் 469 ஆகவும் 2008இல் 466 ஆகவும் இருந்தது. 2011இல் பொலிஸார் 745 பேர் மீது குற்றம் சுமத்தி வழக்குத் தொடர்ந்தனர். இவர்களில் 18 பேர் குற்றவாளியாக காணப்பட்ட அதேவேளை, 34 பேர் விடுதலை செய்யப்பட்டனர். 597 பேர் மீது பல்வேறு நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. 86 பேர் மீது பொலிஸாரின் விசாரணைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

2010இல் கைதுசெய்யப்பட்டு குற்றம்சாட்டப்பட்ட 685 பேரில் 37பேர் குற்றவாளியாகக் காணப்பட்டனர். 107 பேர் விடுவிக்கப்பட்டனர். 508 பேருக்கு எதிரான வழக்கின் விசாரணை தொடர்ந்துகொண்டிருந்தன. மேலும் 13 பேர் மீது பொலிஸ் விசாரணைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. இவை மத்திய உள்துறை அமைச்சு வெளியிட்ட புள்ளிவிபரங்களாகும். 2009 இல் 675 பேரும் 2008 இல் 604 பேரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்காக கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 2009 இல் 82 பேரும் 2008 இல் 52 பேரும் குற்றவாளியாகக் காணப்பட்டனர்.




இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டால் 2011 இல் 24 ஆயிரத்திற்கும் அதிகமான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பற்றி முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தன. முன்னைய வருடத்தைவிட இது 9.2 சதவீத அதிகரிப்பாகும். இந்தக் குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் (57.7) 18-30வயதுக்கிடைப்பட்டவர்களாவர். மிகவும் மனக்குழப்பத்தைத் தருகின்ற விடயம் என்னவென்றால் இந்தப் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் 94 சதவீதத்திற்கும் அதிகமானவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு தெரிந்தவர்களினாலேயே கொடுமைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இத்தகைய குற்றச் செயல்களைச் செய்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அயலவர்களாக இருந்த அதே வேளை, பெற்றோரும் ஏனைய உறவினர்களும் கூட சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவில் இடம்பெறுகின்ற மொத்த பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் 17 சதவீதமானவை டில்லியில் இடம்பெறுகின்றன.


நிலைவரம் இந்தளவிற்கு படுமோசமானதாக இருக்கின்ற போதிலும் இப்போது மாற்றம் ஏற்படுமென்று மக்கள் நம்புகிறார்கள். பிரதமரும் சோனியா காந்தியும் கடும் நடவடிக்கை எடுத்து துரிதமாக விசாரணைகளை நீதிமன்றங்கள் மூலம் வழக்குகளை விசாரிப்பதாக உறுதியளித்திருக்கிறார்கள். மருத்துவ மாணவி பாலியல் வல்லுறவுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுகின்ற 6 நபர்களும் மிகத் துரிதமாகவே பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்கள். திகார் சிறையில் இந்த 6 பேரும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அங்குள்ள கைதிகள் கூட இவர்களை காறி உமிழ்ந்திருக்கிறார்கள். விசாரணைகளை எந்தவொரு அரசியல்வாதியுமோ அதிகாரியுமோ தாமதிக்கச் செய்வது சாத்தியம் இல்லை. விரைவாக செயல்படுவதை தவிர வேறுமார்க்கமே இல்லை. பாரதிய ஜனதாக் கட்சி விஷேட பாராளுமன்றக் கூட்டத்தை நடத்துமாறு

கோரிக்கை விடுத்திருக்கிறது. ஏனைய எதிர்க்கட்சிகளும் இக்கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன. ஆனால் சட்டத்தை தயார் செய்வதற்கு கால அவகாசம் தேவையென்று அரசாங்கம் கூறுகின்றது. இரு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஆணைக்குழு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை ஆராயும், மற்றையது கடுமையான தண்டனைகளை துரிதமாக வழங்குவதற்கு சட்டங்களில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து ஆராயும்.

பாலியல் வல்லுறவு தொடர்பான சட்டங்களை நவீனமயப்படுத்த வேண்டும் என்று பெண்கள் அமைப்புகள் பல வருடங்களாக கோரிக்கை விடுத்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் பாராளுமன்றவாதிகள் அக்கோரிக்கைகளை இதுவரை அலட்சியம் செய்து வந்திருக்கிறார்கள். கிராமங்களிலும் சிறிய நகரங்களிலும் இடம்பெறுகின்ற பல பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பெருமளவு அலட்சியம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் அண்மைக்காலமாக இத்தகைய சம்பவங்களுக்கெதிராக பரந்தளவில் மக்கள் கொதிப்படைய ஆரம்பித்தார்கள். மும்பையில் புறநகர்ப்பகுதி புகையிரதத்திற்குள்ளும் டில்லி பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளும் இடம்பெற்ற சம்பவங்களை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும்.

### பெண்களுக்கு பாதுகாப்பற்ற டில்லி

நாட்டின் பாலியல் வல்லுறவுத் தலைநகரம் என்று வர்ணிக்கப்படுகின்ற டில்லி கடந்த ஒருதசாப்த காலத்தில் நாட்டின் கவனத்தைப் பெரிதாக ஈர்த்த கற்பழிப்புச் சம்பவங்களை கண்டிருக்கிறது. 2003 ஆம் ஆண்டு திரைப்பட விழாவொன்றிற்குப் பிறகு கார் ஒன்றிற்குள் வைத்து சுவிஸ் பெண் இராஜதந்திரி ஒருவர் கும்பலொன்றினால் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டிருந்தார். பிறகு ஒரு உல்லாசப் பிரயாணியும்




டில்லிப் பல்கலைக்கழக மாணவியொருவரும் வெவ்வேறு சம்பவங்களில் அதேமாதிரியான கொடுமைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர் கூட தோட்டமொன்றிற்குள் வைத்து பெண்மணியொருவரை பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியதற்காக சிறைக்கு அனுப்பப்பட்டார். பாதுகாப்பு என்பது எப்போதுமே ஒரு பிரச்சினையாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் முதல்தடவையாக இப்போதுதான் பொதுமக்கள் பெருமளவில் கொதித்தெழுந்திருப்பதை நாடு காண்கிறது.

டில்லியின் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான இந்துஸ்தான் ரைம்ஸ் அந்த நகரில் பெண்கள் மத்தியில் செய்த ஆய்வொன்றின் முடிவை ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டிருந்தது.

- 72 வீதமான பெண்கள் தாங்கள் பாலியல் ரீதியான கொடுமைகளுக்குள்ளாக்கப்படுவதாக தெரிவித்திருந்தனர்.
- 18 சதவீதமான பெண்கள் அநேகமாக ஒவ்வொரு நாளும் இத்தகைய தொல்லைகளுக்கு முகம் கொடுப்பதாக கூறியிருக்கின்றனர்.
- 16 சதவீதமான பெண்கள் தாங்கள் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தனர்.
- சுமார் 70 சதவீதமான பெண்கள் டில்லி பொலிஸார் பெண்களுக்கெதிரான கொடுமைகள் தொடர்பில் போதுமான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்று கூறினார்கள்.
- பாலியல் வல்லுறவு புரிபவர்களை மலடாக்க வேண்டுமென்று 43 சதவீதமான பெண்கள் நினைக்கிறார்கள்.
- 71 சதவீதமான பெண்கள் பாலியல் வல்லுறவு புரிவோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட வேண்டுமென விரும்புகிறார்கள்.

பாலியல் வல்லுறவு புரிவோருக்கு வழங்கப்படவேண்டிய தண்டனை குறித்து விவாதங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்த வண்ணமேயிருக்கின்றன. கடந்த வாரத்தில் கூட டில்லியில் இரண்டு பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு சம்பவத்தில் டில்லிக்கு வெளியே பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண் டில்லி நகருக்குள் கொண்டுவரப்பட்டு போடப்பட்டார். கடுமையான சட்டங்களினால் மாத்திரம் பெண்களுக்கெதிரான குற்றச்செயல்களை தடுக்கக்கூடியதாக இருக்குமா? மக்கள் மத்தியில், பெண்கள் மத்தியில் மனோபாவம் மாறவேண்டுமா? ஆனால் இதற்கு தந்தை வழி சமூகம் இன்னமும் தயாராக இல்லை போலத் தெரிகிறது.



# வெளிநடப்பின் பின்னணி

அண்ணா தி.மு.க. பொதுக்குழுக்கூட்டத்தில் முக்கிய பேச்சாளர்கள் சகலருமே ஜெயலலிதாவே அடுத்த பிரதமர் என்ற ரீதியில் பேசியிருக்கின்றனர். இறுதியில் பேசிய ஜெயலலிதா பாரதீய ஜனதாவுடனோ, காங்கிரஸுடனோ கூட்டணி இல்லை. தனித்தே போட்டி என்று அறிவித்திருக்கிறார்

## சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்

தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கிறார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. அனைத்து மாநில முதலமைச்சர்களும் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் கூடியிருந்த கூட்டம் அது. அங்கேதான் 2012 முதல் 2017 வரையிலான ஐந்தாண்டு திட்டங்கள் பற்றி தீவிர ஆலோசனை நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் இந்த ஐந்தாண்டுகளில் நிறைவேற்ற வேண்டிய பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பற்றி முதலமைச்சர்கள் கருத்துச் சொல்ல, பிரதமரும் நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றி விரிவான உரையாற்றுவார். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நடைபெற்ற 57 ஆவது கூட்டம் இது.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் ஒருவருக்கு பத்து நிமிடம் மட்டுமே பேசுவதற்கு நேரம் ஒதுக்கிவிட்டு, அந்த நேரம் முடிந்தவுடன் பள்ளிக்குழந்தைகள் போல் மணி அடித்து உட்காரச் சொல்கிறீர்கள். இதன் மூலம் என்னை மட்டுமல்ல, தமிழக மக்களை அவமானப்படுத்தி விட்டீர்கள்" என்று ஆவேசமாகப் பேட்டியளித்து தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்து விட்டார் முதல்வர் ஜெயலலிதா. டெல்லியில் நடைபெற்ற இது மாதிரிக் கூட்டத்தில் இப்படி வெளிநடப்புச் செய்தது 28 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது. அப்போது பிரதமராக இருந்தவர் மறைந்த இந்திரா காந்தி. அந்த எதிர்ப்புக் குரலின் கதாநாயகர்களாக மறைந்த ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ் தலைமையில் நான்கு முதலமைச்சர்கள் இருந்தார்கள். ஆனால், இந்த வெளிநடப்பு தமிழக அரசியலில் புயல் வீச வைத்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் "அன்-பாப்புலராகவும்"


''பலவீனமாகவும்'' இருப்பது இதில் எதிரொலிக்கிறது. 44 சதவீத வாக்கு வங்கியுடன் தமிழக அரசியலில் இமயத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி என்று 4.78 சதவீதமாக மாறி அதன் அடிவாரத்திற்கு வந்ததோ, அதிலிருந்தே காங்கிரஸ் கட்சியை அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் ''கிள்ளுக்கீரை'' போல் பார்க்கின்றன. அதுவும் சென்ற 2011 சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியால் தி.மு.க.வை கரை சேர்க்க முடியவில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகு காங்கிரஸின் மீதுள்ள மோகம் மேகம் போல் கலையத் தொடங்கி விட்டது. அதுவும் குறிப்பாக ''இலங்கைத் தமிழர் பிரச்சினையில்'' காங்கிரஸ் கட்சிக்கு எதிராக தமிழகத்தில் செய்யப்பட்ட''நெகட்டிவ்'' பிரசாரம், புதிதாக உதயமான விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் (தே.மு.தி.க.) 10 சதவீத வாக்குகளை வாரி அணைத்துக் கொண்டது எல்லாம் காங்கிரஸ் கட்சியின் ''கலர்புல் கனவுகளை'' தகர்த்து விட்டது. இன்றைய தமிழக அரசியல் சூழ்நிலை என்பது தே.மு.தி.க.வுடன் கூட்டணி அமைக்கும் கட்சிக்கே ''வெற்றி'' என்பது தாம்பூலத் தட்டில் வைத்து வழங்கப்படும் என்ற நிலைமை.

தமிழகத்தில் காங்கிரஸ் ஒரு சக்தியில்லை என்பது ''உள்ளங்கை நெல்லிக்கனி போல்'' அ.தி.மு.க.விற்கு புரிந்தாலும், மத்திய அரசின் உதவியைப் பெற வேண்டும் என்பதற்காக முதல்வர் ஜெயலலிதா கொஞ்சம் அக்கட்சியின் முக்கிய விவகாரங்களான ''நிலக்கரி பேரம்'', ''வதேரா விவகாரம்'' போன்றவற்றில் கருத்துச் சொல்லாமல் அமைதி காத்தார். ஆனால் காலப் போக்கில், கடும் மின் வெட்டு, காவிரிப் பிரச்சினை போன்றவற்றில் மத்திய அரசு தமிழகத்திற்கு உதவி செய்யவில்லை என்பதால் அவர் வேறு முடிவிற்கு வந்து விட்டார். ஏனென்றால், மக்களின் கோபம் அ.தி.மு.க. மீது திரும்பி, வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் சங்கடமாக மாறிவிடக்கூடாது என்று கருதி அதைச் சமாளிக்க முன்கூட்டியே வியூகம் வகுக்கிறார் முதல்வர் ஜெயலலிதா. தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்திலிருந்து செய்த வெளிநடப்பு இந்த வியூகத்தின் முதல் வெளிப்பாடே!

தமிழகத்தில் நிலவும் தீர்க்கமுடியாத பிரச்சினைகளுக்கு மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசுதான் காரணம் என்ற ''மெஸேஜை'' வாக்காளர்கள் மத்தியில் ''ஜெட்வேகத்தில்''அனுப்ப இந்த வெளிநடப்பு உதவியிருக்கிறது. போதாக்குறைக்கு அ.தி.மு.க.வினர் சில இடங்களில் பிரதமர் மன்மோகன்சிங்கின் உருவபொம்மைகளை எரித்து அதை மேலும் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். இதற்குப் பதிலடியாக மூன்று நாட்கள் கழித்து காங்கிரஸும் சத்தியமூர்த்தி பவனில் முதல்வர் ஜெயலலிதாவின் உருவ பொம்மையை எரிக்க முயன்றது. ஆனால், பொலிஸ் தடுத்து அவர்களைக் கைது செய்திருக்கிறது. ஆக



''அரசியல்'' இப்படியிருக்க, தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்திலிருந்து ஜெயலலிதா வெளிநடப்புச் செய்தது அகில இந்திய அளவில் ஒரு அர்த்தமுள்ள விவாதத்தை கிளப்பியிருக்கிறது. அது, ''தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் முதல்வர் வெளிநடப்புச் செய்யலாமா? ஒரு முதல்வர் பேசுவதற்கு பத்து நிமிடம் மட்டும் கொடுத்தால் போதுமா?'' என்பதே. இது பற்றி நாம் இரு முன்னாள் சீனியர் அரசு அதிகாரிகளிடம் கருத்துக் கேட்டோம். இருவருமே ஐ.ஏ.எஸ் (இந்திய ஆட்சிப் பணி) அதிகாரிகளாக இருந்து மத்திய, மாநில அரசுகளில் முக்கிய பொறுப்புகளை வகித்தவர்கள். இதோ அவர்கள் தங்கள் எண்ணங்களை பிரதிபலிக்கிறார்கள்.



**எம்.ஜி.தேவசகாயம்**
**முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர். ஹரியானா மாநிலம்.**

இந்தியாவிற்கு ''நிர்வாக கட்டமைப்பு'' ரொம்பவும் முக்கியம் என்றாலும் இன்றைய இந்தியாவில் ''பெடரல் செட்அப்'' என்பது ஒரு ''ஜோக்'' ஆக மாறிவிட்டது. கூட்டாட்சி தத்துவத்தில் மாநிலங்கள் சேர்ந்ததுதான் மத்திய அரசு. ஆனால், அதிகாரங்களை மத்திய அரசிலேயே குவித்து வைத்து விட்டார்கள். மாநிலங்களுக்கு மிகவும் குறைவான அதிகாரங்கள் மட்டுமே உள்ளது. இரண்டாவது முறையாக பதவியேற்ற ஐக் கிய முற்போக்கு

வே, இப்போது தமிழக முதல்வர் கையிலெடுக்கும் "காங்கிரஸ் எதிர்ப்பு பிரசாரம்" குஜராத்தில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற நரேந்திரமோடியின் பாணி என்றால் மிகையாகாது.

வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் தே.மு.தி.க.வும் இல்லை, காங்கிரஸுடனும் கூட்டணி இல்லை என்ற சூழ்நிலை அ.தி.மு.க.விற்கு உருவானால் அதைச் சமாளிக்கவே "காங்கிரஸ் எதிர்ப்பு பிரசாரம்" என்ற ஆயுதத்தை ஜெயலலிதா கையிலெடுத்துள்ளார். குஜராத்தில் மூன்றாவது முறையாக "காங்கிரஸ் எதிர்ப்பை" வெற்றிகரமாக களத்தில் கொண்டு போய்ச் சேர்க்க நரேந்திரமோடியால் முடியும் என்றால் ஏன் நம்மால் முடியாது என்பதே அவரது கணிப்பு. இது தவிர அகில இந்திய அளவில் உள்ள இளைஞர்கள் மத்தியில் நரேந்திர மோடிக்கு "பாப்புலர் இமேஜ்" பரவிக் கிடக்கிறது. பா.ஜ.க.வின் அதிகாரபூர்வ பிரதமர் வேட்பாளராக நரேந்திரமோடி அறிவிக்கப்பட்டால், "மோடி இமேஜ்", "காங்கிரஸ் எதிர்ப்பு", "அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகள்" என்ற மூன்று யுக்திகளை துணைக்கு அழைத்துக் கொண்டு வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் இறங்கலாம் என்பது ஜெயலலிதாவின் கணக்கு. அந்தக் கணக்கிற்கு ஏற்றவகையில்தான் இப்போது தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளார். அது மட்டுமன்றி, டெல்லி திரும்பிய கையோடு, "தேசிய பயங்கரவாத தடுப்பு மசோதாவினை மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் சட்டம் ஆக்கக்கூடாது" என்று காட்டமாக பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதி, "காங்கிரஸ் அட்டாக்கை" தொடருகிறார்.

டிசம்பர் 31-ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுவில் அ.தி.மு.க.வின் முக்கிய பேச்சாளர்கள் அனைவருமே, "ஜெயலலிதாவே அடுத்த பிரதமர்" என்ற ரீதியிலேயே பேசியிருக்கிறார்கள். இறுதியில் பேசிய பொதுச் செயலாளர் ஜெயல கூட்டணி அரசில் பாராளுமன்றம் செயல்படவில்லை. சில்லறை வணிகத்தில் வாக்கெடுப்பு நடைபெற்ற விதத்திலேயே பாராளுமன்றம் மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கவில்லை என்பது புலனாகிறது. எதிர்த்து வாக்களிப்போம் என்று சொன்ன சமாஜ்வாடிக் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, தி.மு.க. எல்லாம் கடைசியில் "மதச்சார்பற்ற தன்மை" (செக்யூலரிஸம்) என்று காரணம் சொல்லி, ஏதோ ஒரு வகையில் சில்லறை வணிகத்தில் மத்திய அரசை கரை சேர்த்து விட்டார்கள். சில்லறை வணிகத்திற்கும், செக்யூலரிஸத்திற்கும் என்ன தொடர்பு? என்பது இன்னும் எனக்கு விளங்கவில்லை.

அடுத்து குடியரசுத் தலைவரும் ஜீரோவாகவே இருக்கிறார். ஏதோ சில "கவுன்சில் ஒப் மினிஸ்டர்களும், அதிகாரிகளும்" இந்திய அரசில் நாட்டாமை செய்கிறார்கள். அவர்களும் அமெரிக்க ஏஜெண்டுகளாகவோ, அல்லது நாமினிகளாகவோ இருக்கிறார்கள் என்பதுதான் வேதனை. பிரதமரே அமெரிக்காவின் நாமினிதான் என்றால் மற்றவர்களைப் பற்றி நாம் சொல்ல என்ன இருக்கிறது? இந்தியன் எக்கனமி தெரிந்தவர்கள் யாரும் பிரதமரின் அருகில் இல்லை. இப்படிப்பட்ட சூழலில்தான் தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கவுன்சில் திட்டக் கமிஷனின் ஒரு அங்கம்தான். ஏனென்றால் "பிளானிங் கமிஷன்" செகரட்டரிதான் இந்த தேசிய வளர்ச்சிக் கவுன்சிலுக்கும் செகரட்டரி. இக்கூட்டத்திற்கு முன்பு மாநில அரசுடன், மத்திய அரசு நடத்தும், அவை அனைத்தும் "பீரோகிராட்டிக் எக்ஸர்ஸைஸ்"! அதாவது அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறும் ஆலோசனைகள்! அரசியல்வாதிகளின் தலையீடுகள் இருக்காது. ஆனால், தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டம் என்பது அப்படியல்ல. அதுதான் "பொலிடிக்கல் எக்ஸர்ஸைஸ்". அதாவது பல்வேறு மாநில முதல்வர்கள், அமைச்சர்கள் எல்லாம் பிரதமர் முன்னிலையில் அமர்ந்து விவாதித்து தங்கள் மாநிலத்தின் ஐந்தாண்டு திட்டப் பணிகளை முடிவு செய்வார்கள்.

ஏற்கனவே 12ஆவது ஐந்தாண்டு திட்டம் துவங்கி 9 மாதங்கள் முடிந்து விட்டது. ஆகவே, கூட்டம் தாமதமாகவே கூட்டப்பட்டது. காவேரிப் பிரச்சினை, மின்வெட்டுப் பிரச்சினை போன்றவை தமிழக மக்களை நேரடியாகப் பாதிக்கும் பிரச்சினைகள். இதுபற்றி அதிக நேரம் பேச வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா விரும்பியதில் எந்தத் தவறும் இல்லை. அப்படிப் பேச விடாமல், பள்ளிக்கூட குழந்தைகளுக்கு பெல் அடிப்பது போல் பத்து நிமிடத்தில் பெல் அடித்து உட்காரச் சொன்னது மிகப்பெரும் தவறு. தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் மத்திய அரசு செய்ததை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

பத்து நிமிடம்தான் பேச முடியும் என்று முன்பே முதல்வரிடம் ப்ளானிங் செகரட்டரி சொன்னதாக செய்திகள் வருகின்றன. அது உண்மையென்றால், "அப்படியொரு கூட்டமே தேவையில்லை" என்று கூறி முதல்வர் டெல்லி போகாமலேயே கூட இருந்திருக்கலாம். முதல்வரை அதிக நேரம் பேசவிடாதது "டெமாக்ரட்டிக் எக்ஸர்ஸைஸ்" அல்ல! என்ன செய்வது? இன்றைய சூழலில் மத்திய அரசில் "கரப்ஷன் எக்ஸர்ஸைஸ்", "மல்டி டிரேடிங் எப்.டி.ஐ. எக்ஸர்ஸைஸ்", "பிளாக் மணி எக்ஸர்ஸைஸ்" போன்றவை மட்டும்தானே இருக்கிறது. அதனால், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் "வாக் அவுட்" நியாயமானதே! எதிர்காலத்திலாவது தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டங்கள் மூன்று நாட்களாவது நடைபெற வேண்டும். முதல்வர்களும், பிரதமரும் அமர்ந்து பிரச்சினைகளைப் பேசித் தீர்த்து நாட்டின் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

லிதா, ''பாரதீய ஜனதா கட்சியுடனும், காங்கிரஸுடனும் கூட்டணி இல்லை. நாம் தனித்தே போட்டியிடுவோம்'' என்று அறிவித்துள்ளார். எம்.ஜி.ஆர் தலைமையிலும் சரி, முதல்வர் ஜெய லலிதா தலைமையிலும் சரி பாராளு மன்றத் தேர்தலை இதுவரை காங்கி ரஸ் அல்லது பா.ஜ.க. இல்லாமல் தனியாக சந்தித்தது இல்லை. இந்த இரு கட்சிகளும் இல்லையென்றா லும், பாட்டாளி மக்கள் கட்சி, ம.தி. மு.க. போன்ற கட்சிகளுடன் கூட் டணி வைத்தே தேர்தலைச் சந்தித்து வந்துள்ளது அ.தி.மு.க. ஆகவே, ''நாற்பதுக்கு நாற்பது'' எம்.பி.க்கள் வெற்றி பெற வேண்டும் என்றால், அ.தி.மு.க.விற்கு கூட்டணி முக்கி யம். இப்போது கூட்டணி இல்லை என்று அ.தி.மு.க. அறிவித்துள்ளதற் குக் காரணம், 3 சதவீத வாக்குகள் கூட இல்லாத பாட்டாளி மக்கள் கட் சியே கூட்டணி இல்லை என்று கூறி வரும் நிலையில், 30 சதவீதத்திற்கும் மேல் வாக்கு வங்கி வைத்திருக்கும் அ.தி.மு.க. இவ்வளவு சீக்கிரம் தன் கூட்டணி முடிவை அறிவிக்க வேண் டும் என்ற அவசியமில்லை என்பதே! அது மட்டுமன்றி டாக்டர் ராமதாஸின் பா.ம.க., வைகோவின் ம.தி.மு.க. போன்ற கட்சிகளை தன் அணியில் எடுக்கும் ''வியூகமும்'' அ.தி.மு.க. பொதுக்குழுப் பேச்சின் அர்த்தம் பொதிந்த ''வியூகமாக'' இருக்கிறது!

### மதுவிலக்கு போராட்டத்தை கையிலெடுக்கும் காங்கிரஸ்!

''மதுவிலக்கு'' அமுல்படுத்த வேண்டும் என்று கோரி வைகோ நடத்திய நடைபயணம் முடிந்து விட் டது. தமிழகத்தில் உள்ள நெல்லை மாவட்டத்திலிருந்து, மதுரை வரை 240 கிராமங்கள் வழியாகச் சென்ற வைகோ அனைத்து கிராமங்களிலும் பேச முடியவில்லை. அதற்கு முக்கிய காரணம் ஒரு சில நகரங்கள் தவிர மற்ற கிராமங்களில் கூட்டம் குறை வாக இருந்ததே. ஆனாலும் ''பாத யாத்திரை பாலிடிக்ஸை'' கைவிடுவ தாக இல்லை வைகோ. மேலும், சில மாவட்டங்களிலும் அடுத்தடுத்து தொடரப் போகிறார். ஆனால், ஆங் காங்கு உள்ள உள்ளூர் பிரச்சினை களை முன்வைத்து இந்த பாதயாத் திரை இருக்குமாம். குறிப்பாக பாராளுமன்றத்தில் ம.தி.மு.க. போட் டியிட வேண்டும் என்று விரும்பும் தொகுதிகளை மையமாக வைத்து இது மாதிரி பாதயாத்திரைகள் இனி நடக்கும் என்று ம.தி.மு.க. தலைமைக் கழக நிர்வாகி ஒருவர் கூறுகிறார். அதே நேரத்தில் வைகோவின் பாத யாத்திரைக்குப் பிறகு மனிதநேய மக் கள் கட்சி ''மதுவிலக்கை'' அமுல்ப டுத்தச் சொல்லி ஆர்ப்பாட்டம் நடத்தி விட்டது. ''நாங்களும் மதுவிலக்கை அமுல்படுத்த போராட்டம் நடத்து வோம்'' என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஞானதேசிகன் அறிவித்துள்ளார். வைகோ தொடங்கி வைத்த ''மதுவிலக்கு'' அமுல்படுத்த வேண்டும் என்ற போராட்டம் தமிழ கத்தில் இனிவரும் வாரங்களில் சூடுபிடிக்கும்.

### தூத்துக்குடியில் கனிமொழி போட்டி?



டெல்லி மாணவி கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டது போல் தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் புனிதா என்ற 13 வயது மாணவி கற்பழித்து கொல்லப்பட்டார். இதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணி தூத்துக்குடியிலேயே மாபெ ரும் போராட்டத்தை நடத்தியது. அதில் முதலில் தி.மு.க. துணை



**எம்.ஆர்.சிவராமன்**
**இந்திய முன்னாள் வருவாய் துறைச் செயலாளர்**
**முன்னாள் டைரக்டர், சர்வதேச நாணய நிதியம்**

மாநில அளவில் நடைபெறும் திட் டக்குழுக் கூட்டங்களிலும், இது போன்ற தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டங்களிலும் நான் பலமுறை பங்கேற்றுள்ளேன். அந்த வகையில் தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத் தில் எவ்வளவு நேரம் ஒவ்வொரு மாநில முதல்வரும், அக்கூட்டத் திற்கு தலைமை தாங்குகின்ற பிரதம ரும் பேச வேண்டும் என்பது முன் கூட்டியே ஆலோசிக்கப்படும். ஒரு நாள் கூட்டம் என்றால் ஒவ்வொரு முதல்வருக்கும் எவ்வளவு நேரம் பேச அனுமதிக்கப்படும், இரு நாள் கூட்டம் என்றால் எவ்வளவு நேரம் என்பதெல்லாம் முடிவு செய்யப் பட்டு முன்கூட்டியே சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்களுக்கு தெரிவிக் கப்படும்.

இக்கூட்டம் திடீரென்று கூட்டப்ப டுவது அல்ல. அதற்கு முன்பே இத் திட்டப் பணிகள் குறித்து கடிதப் போக்குவரத்துகள் நடக்கும். வரைவு ப்ளான் திட்டங்கள் அனுப்பி வைக் கப்பட்டு மத்திய-மாநில அரசு அதி காரிகளிடையே கருத்துப் பரிமாற் றங்கள் நடக்கும். தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்கும் போது மாநிலத்தில் உள்ள உடனடிப் பிரச்சினைகள் பற்றிய ''புல்லட் பாயின்டுகள்'' மட்டுமே முதல்வர் கள் பேசுவார்கள். தங்களின் மீதிப் பேச்சு அடங்கிய உரையை தேசிய

பொதுச் செயலாளர் சற்குணபாண்டியன் தான் பங்கேற்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் திடீரென்று தி.மு.க. எம்.பி. கனிமொழி அந்தப் போராட்டத்தில் பங்கேற்றார். புனிதாவை இழந்த குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபா நிதியளித்தார். கனிமொழியின் போராட்டத்தன்றே அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளியை குண்டர் சட்டத்தில் சிறையில் தள்ளியது தமிழக அரசு. கனிமொழி கலந்து கொண்டது பற்றி நம்மிடம் கிசுகிசுத்த தி.மு.க. முக்கிய பிரமுகர், "சமீப காலமாக மு.க.ஸ்டாலினின் ஆதிக்கம் கட்சிக்குள் தலைவரின் கட்டுப்பாட்டையும் மீறிப்போகிறது. தி.மு.க.வில் உள்ள இளைஞரணியை "கட்சிக்குள் ஒரு கட்சியாக" ஸ்டாலின் நடத்துகிறார் என்ற வருத்தம் கலைஞருக்கே இருக்கிறது. அதனால்தான் கனிமொழியை அழைத்து "நீ தூத்துக்குடி போராட்டத்திற்கு தலைமை தாங்கு" என்று தலைவர் உத்தரவிட்டார்" என்கிறார். இந்நிலையில், புதுவருட வாழ்த்துச் சொல்ல தன்னை வந்து சந்தித்த தூத்துக்குடி மாவட்ட தி.மு.க. முக்கிய பிரமுகர்களிடம், "தூத்துக்குடி தொகுதியில் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் கனிமொழி போட்டியிடுகிறார். தேர்தல் வேலையைப் பாருங்கள்" என்று கூறி, "வாழ்த்துக்கு நன்றி சொல்லி" அனுப்பி வைத்துள்ளாராம் கலைஞர் கருணாநிதி.

## அ.தி.மு.க.வினரை அசத்திய 'ஜெ'யின் ஞாபக சக்தி!

அ.தி.மு.க.வின் பொதுக்குழு, சென்ற டிசம்பர் 31ஆம் திகதி சென்னை அருகில் உள்ள வானகரத்தில் நடைபெற்றது. அதில் பங்கேற்க கட்சி நிர்வாகிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அழைப்பு இல்லாதவர்கள் அரங்கிற்கு வெளியில் நின்று கொண்டிருந்தார்கள். அதில் முன்னாள் அமைச்சர் பாண்டுரங்கனும், எம்.ஜி.ஆர் காலத்தில் சென்னை அண்ணாநகர் இடைத் தேர்தலில் போட்டியிட்ட பி.எல். ராதா கிருஷ்ணனும் நின்றார்கள். காரை விட்டு இறங்கியதும் அவர்களைப் பார்த்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, தன் உதவியாளர் பூங்குன்றனை அழைத்து, "பாண்டுரங்கனையும், பி.எல்.ராதாகிருஷ்ணனையும் பொதுக்குழுவிற்குள் அழைத்து வாருங்கள்" என்று கூறினார். பாண்டுரங்கனாவது ஜெயலலிதா அமைச்சரவையில் இருந்தவர். பி.எல்.ராதா கிருஷ்ணனோ 28 வருடத்திற்கு முன்பு இடைத் தேர்தலில் போட்டியிட்டவர். அவரது "இனிஷியலை"க் கூறி பொதுக்குழுவிற்கு அழைத்து வாருங்கள் என்று ஜெயலலிதா சொன்னதைப் பார்த்து "எங்க அம்மாவுக்கு எவ்வளவு ஞாபகசக்தி" என்று அங்கே நின்ற முன்னாள் அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் அனைவரும் அசந்து போனார்கள்.

## 'திருவள்ளுவர் சிலை'க்கு சீறிய கலைஞர் கருணாநிதி!

தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சியில் கலைஞர் கருணாநிதியால் 133 அடிக்கு திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டது. கடலுக்குள் விவேகானந்தர் பாறை அருகில் உள்ள அந்த சிலையை முறையாகப் பராமரிக்கவில்லை என்று இப்போதுள்ள அ.தி.மு.க. ஆட்சியின் மீது குற்றம் சாட்டியுள்ளார் தி.மு.க. தலைவர். ஆனால், கன்னியாகுமரி மாவட்ட தி.மு.க.வினர் இது பற்றி கண்டுகொள்ளவில்லை. ஜனவரி 1ஆம் திகதி கருணாநிதிக்கு வாழ்த்துச் சொல்ல வந்தார் அந்த மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சுரேஷ்ராஜன். அவரைப் பார்த்த கருணாநிதி, "திருவள்ளுவர் சிலை பராமரிக்கப்படவில்லை என்று பேப்பர்களில் எல்லாம் செய்தி வருகிறது. நீ ஒரு போராட்டம் கூட அறிவிக்கவில்லை. நான் இருக்கும் போதே இப்படியா?" என்று சுரேஷ்ராஜன் மீது சீறிப்பாய்ந்து விட்டாராம். "இதற்குக் காரணம் திருவள்ளுவர் சிலை அல்ல. சமீபத்தில் கன்னியாகுமரி சென்ற மு.க. ஸ்டாலினுக்கு "வருங்கால முதல்வரே" என்று சுரேஷ்ராஜன் போஸ்டர் போட்டதுதானாம் என்கிறார் உயர்மட்ட தி.மு.க. பிரமுகர் ஒருவர். ●

வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் பதிவு செய்வார்கள். இதுதான் மரபு. தமிழக முதல்வராக இருந்த போது தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்ற எம்.ஜி.ஆர் இதே போல் பத்து நிமிடம்தான் பேசினார். மீதிப் பேச்சு அடங்கிய உரையை பதிவு செய்தார். இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு பத்து நிமிடம்தான் பேசியிருக்கிறார். இதையெல்லாம் நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன்.

அந்த வகையில் தமிழகத்தின் முக்கிய பிரச்சினைகளான காவிரிப் பிரச்சினை, மின்சாரப் பிரச்சினை குறித்து முதல்வர் "அலாட்" பண்ணப்பட்ட பத்து நிமிடத்தில் பேசி விட்டு, அவரது மீதி உரையை கூட்டத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். அப்படித்தான் அனைத்து முதல்வர்களும் செய்வது வழக்கம். ஏனென்றால் தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டம் என்பது "டிபேட்" பண்ணும் இடமல்ல. இந்தக் கூட்டத்தில் முதலில் பேச வேண்டும் என்று தமிழக முதல்வர் கேட்டிருக்கிறார். அது அனுமதிக்கப்பட்டு, அவ்வாறே முதலில் பேசியுமிருக்கிறார். அப்படியிருக்கையில் அவர் வெளிநடப்புச் செய்திருப்பது தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தை மட்டுமன்றி, அங்கே பங்கேற்ற முதலமைச்சர்களையும் "இன்சல்ட்" பண்ணும் விடயம் என்றுதான் என்னைப் பொறுத்த மட்டில் நினைக்கிறேன். நேரம் போதவில்லை என்றால், பிரதமரிடம் "எனக்கு நீங்கள் கொடுத்த நேரம் போதவில்லை. அதிக நேரம் கொடுத்திருக்க வேண்டும்" என்று முதல்வர் தனியாக தன் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கலாம். அதற்காக தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்திலிருந்து "வாக்அவுட்" பண்ணியிருக்க வேண்டியதில்லை. அதைச் சரி என்று சொல்லமாட்டேன்! ●

# இலங்கையில் மனித உரிமையும் நல்லாட்சியும்



**போரின் முடிவுக்கு பின்னரான இன்றைய சூழலில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு தென்னாபிரிக்காவில் கையாளப்பட்ட வழிமுறைகளை இலங்கை நல்லதோர் பாடமாகக்கொண்டு செயலாற்ற வேண்டியது காலத்தின் தேவை**

இன்று மூன்றாம் உலக நாடுகள் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. வெறுமனே ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சியினூடாக மாத்திரம் ஏற்படும் அபிவிருத்தி பொருளற்றதாகும். மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவிகளை வழங்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு உதவும் நிறுவனங்கள் தாம் அபிவிருத்திக்காக வழங்கும் திட்டங்கள், யோசனைகள், செயற்பாடுகள் என்பவற்றால் அங்கு நல்லாட்சியினை உருவாக்க முடியும் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றன. காரணம் பெரும்பாலும் மூன்றாம் உலக நாடுகளிலேயே முறையற்ற ஆட்சி அதிகமாக நிலைகொண்டிருப்பதனாலாகும். அந்தவகையில் இலங்கையிலும் நல்லாட்சியை ஏற்படுத்துவத ற்கு யாப்பு ரீதியான ஏற்பாடுகள் காணப்படுகின்றபோதும் அவற்றின் நடைமுறைப் பிரயோகம் பெரிதும் திருப்தியற்றதாகவே காணப்படுகின்றது. அதனடிப்படையில் இலங்கையில் நல்லாட்சிப் பண்புகளின் நடைமுறைத்தன்மை குறித்தும் அது தொடர்பாகக் காணப்படும் சவால்கள், சாத்தியப்பாடுகள் குறித்தும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

தற்போதைய இரண்டாம் குடியரசு யாப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய விஷேட ஏற்பாடுகள்காணப்படுகின்றன. சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச் சுதந்திரம், சட்டத்தின் முன் சமத்துவத்திற்கான உரிமை, பேச்சுச் சுதந்திரம் போன்ற பல்வேறு உரிமைகள் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்வுரிமைகள் மீறப்படுகின்ற போது அவற்றிலிருந்து பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் யாப்பில் காணப்படுகின்றன. அந்த வகையில் உச்ச நீதிமன் றம், ஒம்புட்ஸ்மன், இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றை அடிப்படை உரிமை பாதுகாப்பு பொறிமுறைகளாகக் குறிப்பிடலாம். ஆனால், நடைமுறையில் பல்வேறு ஏற்பாடுகளினூடாக அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத் தும் பொறிமுறைகளையும் அரசியல் யாப்பு உள்வாங்கியிருப்பதனையும் காணலாம். அதாவது "தேசிய பாதுகாப்பு, இன, மதச் சமூக வாழ்வு, நீதிமன்ற அவமதிப்பு, பாராளுமன்ற சிறப்புரிமை, அவதூறு சம்பந்தமான சட்டம், தேசிய பொருளாதார நலன், பொதுச் சுகாதாரம், பொது மக்கள் ஒழுங்கு போன்ற கார

இரா.ரமேஷ்

ணங்களுக்காக உரிமைகள் மட்டுப்படுத்தப்படலாம்'' என குறிப்பிடப்படுகின்றது. உண்மையில் அரசியல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான அடிப்படை உரிமைகளை ஏதோ ஒரு வகையில் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் யாப்பில் உள்வாங்கப்பட்டுள்ளமையானது நல்லாட்சியுடன் பெரிதும் முரண்படுவதாக காணப்படுகின்றது.

போர் முடிவடைந்த சூழலிலும் நாட்டில் தொடர்ச்சியாக உரிமை மீறல்கள் இடம் பெற்று வருகின்றமை வெளிப்படையான யதார்த்தமாகும். இலங்கைக்கு பொருளாதார ரீதியாக பெரும் வருமானத்தைத் தேடித்தந்த ஐரோப்பிய யூனியன் வழங்கிய புளூ வரிச் சலுகை நிறுத்தப்பட்டமைக்கு பிரதான காரணம் தொடர்ச்சியான மனித உரிமை மீறல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான பொறிமுறைகள் செயலிழந்தமை, சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு மதிப்பளிக்காமை என்பனவாகும். ''இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டு நல்லாட்சி உறுதிப்படுத்தப்படும் போது ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை மீளவும் வழங்குவது குறித்து ஆராயப்படும்'' என ஐரோப்பிய யூனியன் குறிப்பிட்டிருந்தமை இங்கு நினைவுகூரத்தக்கதாகும். அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரிலும் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் உறுதிப்படுத்தப்பட்டு அது தொடர்பான தீர்மானமொன்றினையும் அமெரிக்கா நிறைவேற்றியுள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும். குறிப்பாக இலங்கையில் பொறுப்புக் கூறுதல் மற்றும் வெளிப்படைத்தன்மையின்மை ஆகிய விடயங்கள் இத்தீர்மானம் கொண்டுவருவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. இவ்விடயமானது நல்லாட்சியின் நிலைப்பாட்டினை தெளிவாகச் சுட்டிநிற்கின்றது. இறுதிப் போரின் போது சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டமை, தொடர்ச்சியாக ஆட்கடத்தல், காணாமல் போதல் இடம்பெறுதல், துணை ஆயுதக் குழுக்களின் செயற்பாடு, நீதித்துறை சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் ஆகியன இதனை மேலும் நியாயப்படுத்துவதாக அமைகின்றன.

ஒரு நாட்டில் நல்லாட்சி நிலவுவதற்கு அங்கு சட்டவாட்சி ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டவாட்சி நடைமுறைப்படுத்தப்பட நீதித்துறைச் சுதந்திரம் மிகவும் முக்கியமானதாகும். ஆனால், இலங்கையில் நீதித்துறைச் சுதந்திரம் அண்மைக்காலமாக கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளின் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியின் ஆதிக்கம் மற்றும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற நீதிபதிகளின் திடீர் இடமாற்றம், பதவி உயர்வு என்பன நீதித்துறைச் சுதந்திரம் இலங்கையில் மீறப்பட்டுள்ளது என்பதனைக் காட்டுகிறது. அரசியல் யாப்பினையும், பிரஜைகளின் அடிப்படை உரிமைச் சுதந்திரத்தினை, சட்டத்தின் ஆட்சியினை பாதுகாக்கும் தலையாய பொறுப்பு நீதித்துறைக்கு உண்டு. இது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான நியமமாகும். இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அவ்விரு தத்துவங்களையும் மறுதலிப்பதாக அமைந்துள்ளது. இதனை உச்சநீதிமன்ற பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை மற்றும் அதன் பின்னணி, விசாரணை முறை என்பன மேலும் வலுப்படுத்துகின்றன.

2001ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 17ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தம் இல்லாது செய்யப்பட்டமை, அதன் பதிலீடாக 2010 டிசம்பர் மாதம் கொண்டுவரப்பட்ட 18 ஆவது சீர்திருத்தம் ஆகியன நீதித்துறைச் சுதந்திரம் மற்றும் சட்டவாட்சியினை சவாலுக்குட்படுத்தியுள்ளது. 18ஆவது சீர்திருத்தம் நீதித்துறையில் அரசியல் தலையீடு அதிகரிக்க, அரசியல் அமைப்பின் மேலாண்மை வீழ்ச்சியடைய வழிசெய்திருப்பதுடன், பொதுத்துறையினையும் அரசியல் மயப்படுத்தியுள்ளது. இத்தகைய சட்டங்கள் இயற்றப்படுவதற்கும், நடைமுறைப்படுத்தப்படுவதற்கும் இன, மத, மொழி ரீதியாக அணிதிரட்டப்பட்டுள்ள சிவில் சமூகம் மற்றும் சீர்குலைந்துள்ள எதிர்க்கட்சி ஆகியன பிரதான காரணம் என்பதனையும் குறிப்பிடுதல் அவசியமாகும். ஜனநாயக நாடொன்றில் அவசரம் என்ற பெயரில் சட்டங்கள் உருவாக்கப்படுவதானது மக்களாட்சித் தத்துவங்களை முற்றிலும் மறுதலிப்பதுடன், அனைத்தான்மை ஆட்சியின் தீவிரத்தன்மையினை வெளிக்காட்டும் ஒரு செயலாக அமைகிறது. அவசரமாக இயற்றப்பட்ட அரசியல் அமைப்புக்கான 18ஆம் திருத்தச் சட்டம், தனியார் துறையை அரசாங்கம் பொறுப்பேற்கும் சட்டம், தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை மசோதா பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டமை, அரசியல் அமைப்பு பேரவை இல்லாது ஒழிக்கப்பட்டமை, தொடர்ச்சியாக இடம் பெற்றுவந்த மனித உரிமை மீறல் அதன் விளைவாக புளூ வரிச்சலுகை நீக்கப்பட்டமை ஆகியன நல்லாட்சியினை சீர்குலைக்கும் செயல்களாக அமைந்தன.

உண்மையில் நல்லாட்சியின் சீர்குலைவானது பின்வரும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த வகையில் வினைத்திறன் அற்ற பொது நிர்வாகம் (அரசியல் மயமாக்கம்), அரசியல் தலையீடு நிறைந்த நீதித்துறை, பொதுச் சொத்து மற்றும் பொது நிதி மீதான பாராளுமன்ற கட்டுப்பாடு வீழ்ச்சியடைதல், மனித உரிமை மீறல், அடிப்படை உரிமை, பாதுகாப்பு பொறிமுறைகள் பலவீனமடைந்து வருகின்றமை, அதிகார ஒருமுகப்படுத்தல், சட்டவாட்சி வீழ்ச்சியடைதல், அரசியல் அமைப்பின் மேலாண்மை வீழ்ச்சியடைதல், இனத்துவ பாகுபாடுகள் மற்றும் புறக்கணிப்புகள் அதிகரித்தல், சுதந்திர ஊடகத்துறை இன்மை, ஆட்சியியல் செயல்முறையில் வகைப் பொறுப்பு மற்றும் வெளிப்படைத் தன்மை இன்மை, அதிகரித்த இலஞ்ச ஊழல், அதிகார துஷ்பிரயோகம், பொதுச் சேவையில் பாகுபாடு, தேர்தல்கள் மீதான அவநம்

பிக்கை, சகிப்புத்தன்மையின்மை, திராணியற்ற பொது நிர்வாகம், குடும்ப ஆட்சி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்கூறிய காரணிகள் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியையும் பாதித்துள்ளமை வெளிப்படையாகும். ஆகவே, நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளமை மாற்றுக் கருத்துக்கு இடமில்லாத ஒரு விடயமாகும். அதற்கு பின்வரும் வழிமுறைகள் அவசியமாகும்,

- விழிப்புணர்ச்சி மிக்க, துடிப்புள்ள, அர்ப்பணிப்புள்ள, சிவில் சமூகத்தை கட்டியெழுப்புதல்: குறிப்பாக இனத்துவ, மொழி, மத ரீதியான பகைமைகளை மறந்து பொது நலனுக்காக ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும். உண்மையில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் சிவில் சமூகத்திற்கு பிரமாண்டமான பங்குண்டு என்பது அகில ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.
- 17ஆவது சீர்திருத்தத்தினை மீண்டும் செயற்படச் செய்தல்: இதன் மூலம் அரசியல் அமைப்புப் பேரவையினை மீண்டும் இயக்கச் செய்தல், சுயாதீன ஆணைக்குழுக்களை தாபித்து வினைத்திறன் மிக்க பொதுத் துறையினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.
- அரசியல் அமைப்பு மேலாண்மையினை பாதுகாத்தல் மற்றும் உறுதி செய்தல்: அரசியல் அமைப்புடன் முரண்படும் சட்டங்களை, கொள்கைத் தீர்மானங்களை ரத்துச் செய்யும் அதிகாரம் நீதித்துறைக்கு இருத்தல் வேண்டும். இதற்கு அரசியல் தலையீடு அற்ற சுயாதீனமாக நீதித்துறை ஒன்றினை கட்டியெழுப்புதல் அவசியமாகும். அதேபோல் சுயாதீன நீதிச்சேவை ஆணைக்குழு ஒன்றும் காணப்பட வேண்டும்.
- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை வகைப்பொறுப்பு கூறச்செய்யும் வகையில் பொறிமுறை ஒன்றினை உருவாக்குதல். அதிகார வேறாக்கத்திற்கு முன்னுரிமை அளித்து சமநிலை தடைப்பாடுகளை பின்பற்றுதல்.
- தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தினை இயற்றுதல், அரசியல் சார்பற்ற வெளிப்படைத் தன்மை கொண்ட வகைப்பொறுப்புமிக்க பொதுத்துறை நிர்வாகத்தினை கட்டியெழுப்புதல். பொதுச் சேவை ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுவதனை உறுதிசெய்தல்.
- சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் நல்லாட்சியை நோக்கிய பயணத்தில் சாதாரண மக்களையும் பங்காளிகளாகக் கொள்ளுதல்.
- அமுக்க குழுக்களின் செயற்பாடு மற்றும் பொதுசன அபிப்பிராயத்திற்கு இடமளித்தல்.
- அடிப்படை உரிமை பாதுகாப்பு பொறிமுறைகளை சக்திப்படுத்தல், அவற்றுக்கு போதிய அதிகாரங்களை வழங்குதல், அவை அரசியல் தலையீடு இன்றி செயற்படுவதனை உறுதி செய்தல்.
- அரசியல் அதிகாரத்தை மற்றும், நிர்வாக அதிகாரத்தை உள்ளூர் மட்டத்தில் பன்முகப்படுத்தல். அதன் மூலம் மக்களுக்கு சிறந்த பொதுச் சேவையினையும், சமூக அபிவிருத்திச் சேவையினையும் வழங்குதல். உள்ளூர் அபிவிருத்தி செயற்பாடுகளில் பொதுமக்களின் பங்களிப்பை உத்தரவாதப்படுத்தல், மக்கள் மைய அபிவிருத்தியை, பங்கேற்பு அபிவிருத்தியைத் தூண்டுதல்.
- அரசியல் திட்ட மறுசீரமைப்பு செயன்முறையில் சிறுபான்மையினர் பங்கேற்பு, கருத்தொருமைப்பாடு என்பவற்றை உறுதி செய்தல், அரசியல் திட்டத்தில் நல்லாட்சிக்கான பொறிமுறைகளை உருவாக்குதல்.
- பொது நிதி மீதான பாராளுமன்ற கட்டுப்பாட்டை அதிகரித்தல் மற்றும் வலுப்படுத்தல்.
- சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களை மதித்தல், அவற்றை உள்ளூரில் நடைமுறைப்படுத்துவதற்கான சட்டங்களை உருவாக்குதல்.

மேற்கூறிய உபாயங்கள் இலங்கையில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு பெரிதும் துணைபுரியும். உண்மையில் நல்லாட்சியினை ஏற்படுத்துவதன் மூலம் இனங்களுக்கிடையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை மறந்து தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியும். ஆயினும், போர் முடிவடைந்த சூழலில் உருவாக்கப்பட்ட 18ஆம் சீர்திருத்த சட்டம், தனியார் துறைக்கான ஓய்வூதியத் திட்டம், தனியார் துறையை அரசு பொறுப்பேற்கும் சட்டம், உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் திருத்த சட்ட மசோதா, திவிநெகும சட்டமூலம் என்பன நல்லாட்சித் தத்துவங்களுக்கு முரணாக காணப்பட்டதுடன், சிறுபான்மை மக்களின் அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கையினை மேலும் தூண்டுவதாக அமைந்தன. இச்சட்டங்கள் பொது கலந்துரையாடல்கள் இன்றி அவசரமாக இயற்றப்பட்டதுடன், ஏனைய அரசியல் கட்சிகள், இனத்தவர்கள், பொது மக்களின், சிவில் சமூக அமைப்புகளின் கருத்துகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. இவை நல்லாட்சியுடன் பெரிதும் முரண்படுகின்றன. 30 ஆண்டுகால நீடித்த போர் முடிவடைந்த சூழலில் இவ்வாறான சட்டங்கள் உருவாக்கப்படுவது நல்லாட்சியை பெரியளவில் சீர்குலைப்பதுடன், சிவில் முரண்பாட்டால் ஏலவே நலிவடைந்துள்ள தேசிய ஒருமைப்பாடு, சகவாழ்வு, நிலையான சமாதானம், ஜனநாயகம் ஆகியவற்றை மேலும் நிலைகுலையச் செய்துவிடும் என்பது மனம் கொள்ள வேண்டிய விடயமாகும். போருக்குப் பின்னரான சூழலில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் தென்னாபிரிக்காவில் கையாளப்பட்ட வழிமுறைகளை இலங்கை நல்லதொரு பாடமாகக் கொண்டு செயலாற்றுவது காலத்தின் தேவையாகும்.

# எம்.ஜி.ஆர். மறைந்து 25 வருடங்கள்; தப்பிப்பிழைத்து 45 வருடங்கள்



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ்த் திரையுலகில் தனக்கெனத் தனியான முத்திரையைப் பதித்துச் சென்றவருமான மக்கள் திலகம் எம்.ஜி.இராமச்சந்திரன் மறைந்து கடந்த மாதம் 24ஆம் திகதியுடன் சரியாக 25 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. 1987 டிசம்பர் 24 ஆம் திகதி இரவு அவர் இறந்த செய்தியை மறுநாள் காலை அகில இந்திய வானொலி அறிவித்த போது "நம்பமுடியாதது ஆனால், நடந்து விட்டது. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். காலமானார்'' என்றே அறிவிப்பாளர் வர்ணித்தார். உண்மையிலேயே அவர் மறைந்துவிட்டார் என்பதை அவரின் ரசிகர்களும் ஆதரவாளர்களும் உடனே நம்பியிருக்கமாட்டார்கள். ஏனென்றால், எம்.ஜி.ஆர். அத்தகையதொரு பிரமிக்கத்தக்க படிமத்தை தன்னைப்பற்றி மக்கள் மனதில் ஏற்படுத்தியிருந்தார்.

"நான் செத்துப் பிழைத்தவண்டா, யமனைப் பார்த்துச் சிரித்தவண்டா'' என்று "எங்கள் தங்கம்'' என்ற தனது படத்தில் எம்.ஜி.ஆர். பாடலைப் பாடி நடிக்கும் காட்சியொன்று வருகிறது. அதைப் பார்க்கும் எவருமே காலஞ்சென்ற நடிகவேள் எம்.ஆர். ராதாவினால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பியதையே அவர் அவ்வாறு கூறும் வகையில் காட்சி அமைக்கப்பட்டது என்றே எவரும் நினைப்பர்.

எம்.ஜி.ஆரை ராதா எதற்காகச் சுட்டார் என்ற கேள்விக்கான விடை இதுவரையில் புதிராகவே இருந்து வருகிறது. அந்தச் சம்பவம் இடம் பெற்று 45 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், அதற்கான காரணம் குறித்து தெளிவான விளக்கங்கள் வெளிவந்ததாக இல்லை. இந்நிலையில், எம்.ஜி.ஆர். மறைவின் கால் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இந்தியாவின் தேசிய ஆங்கிலத் தினசரிகளில் ஒன்றான "இந்து''வில் கடந்த மாதம் 23,24 ஆம் திகதிகளில் எம்.ஜி.ஆர். சுடப்பட்ட சம்பவம் மற்றும் அது தொடர்பிலான வழக்கு பற்றி ஏ.சிறிவத்சன் என்பவர் அப்பத்திரிகையின் சுவடிகளை ஆராய்ந்து ஒரு கட்டுரைத் தொடரை எழுதியிருக்கிறார். அவற்றின் தமிழாக்கத்தை "சமகாலம்'' வாசகர்களுக்காகத் தருகிறோம்.

### எம்.ஜி.ஆர். சுடப்பட்ட தினம்

1967 ஜனவரி மாதம் சென்னை மாநகரம் மிகவும் பரபரப்பும் சுறுசுறுப்பும் கொண்டதாக இருந்தது. ஐக்கிய நாடுகள் சபையில் இசை நிகழ்ச்சியை நடத்திவிட்டு நாடு திரும்பிய இசைமேதை எம்.எஸ். சுப்புலட்சுமியை வரவேற்பதற்கு மட்ராஸ் கோர்ப்பரேசன் பிரமாண்டமான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது. சட்டசபைத் தேர்தலுக்கான பிரசாரங்களை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தியிருந்தன. இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையேயான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதற்கு டிக்கெட்டுகளைப் பெறுவதில் கிரிக்கெட் ரசிகர்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள்.

எம்.ஜி.ஆர். ரசிகர்களைப் பொறுத்தவரை, அவரது தாய்க்குத் தலைமகன் திரைப்பட வெளியீடே அந்த மாதம் மிகவும் முக்கியமான நிகழ்வாக இருந்தது. ஜனவரி 12ஆம் திகதி எம்.ஜி.ஆர். ரசிகர்கள் (மறுநாள் இடம்பெறவிருந்த) அத்திரைப்பட வெளியீட்டைக் கொண்டாடுவதற்காக நகரெங்கும் தோரணங்களை அமைப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஆனால், திடுதிப்பென நிலைவரம் தலைகீழாக மாறியது.

பறங்கிமலையில் நந்தம்பாக்கத்தில் உள்ள எம்.ஜி.ஆரின் வீட்டில் வைத்து மாலை 5 மணியளவில் அவரை நடிகவேள் எம்.ஆர். ராதா துப்பாக்கியால் சுட்ட செய்தி பரவத்தொடங்கியது. ரசிகர்கள் அதிர்ச்சியும் சீற்றமும் அடைந்தார்கள்.

அவசர சிகிச்சைக்காக எம்.ஜி.ஆர். இராயப்பேட்டை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டதையறிந்து ரசிகர்களும் ஆதரவாளர்களும் அங்கு விரைந்தார்கள். "எம்.ஜி.ஆர். வாழ்க'' கோஷம் வானத்தையே அதிரவைத்தது. கல்வீச்சுகளை நடத்தி ரசிகர்கள் அட்டகாசத்தில் இறங்கினார்கள். இது இரவு 9 மணிவரை

நீடித்தது. எம்.ஜி.ஆரைச் சுட்ட ராதாவும் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்ய முயற்சித்ததால், அதே ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகச் செய்தி பரவியது. பறங்கிமலையில் உள்ள ராதாவின் வீட்டுக்கு படையெடுத்த எம்.ஜி.ஆர். ரசிகர்களில் ஒரு பகுதியினர் உடைமைகளையெல்லாம் சூறையாடினர். உடனடியாகவே அரசாங்கம் தடையுத்தரவைப் பிறப்பித்தது.

சத்திரசிகிச்சைக்காக இரு நடிகர்களையும் அரசாங்க பெரியாஸ்பத்திரிக்கு மாற்றவேண்டியிருந்தது. எம்.ஜி.ஆரின் இடதுபுறக் காது அருகே கன்னத்தில் பாய்ந்த குண்டு அவரது கழுத்துப்பகுதியின் முதலாவது முள்ளெலும்புக்குப் பின்னால் சிக்கிக் கொண்டது. ராதாவின் வலது பக்கக் கன்னத்தின் ஊடாகப் பிரவேசித்து காயத்தை ஏற்படுத்திய குண்டு மண்டையோட்டில் உடைவை ஏற்படுத்திவிட்டது. அவரின் கழுத்தைத் தாக்கிய குண்டு கழுத்தின் பின்பகுதியில் சிக்கிக்கொண்டது.

இராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு வெளியே பெருந்திரளாக மக்கள் கூடிவிட்டதால், எந்தவொரு வாகனத்தையும் வீதிகளின் ஊடாகச் செலுத்தமுடியவில்லை. பிறகு பொலிஸார் பலவந்தமாக சனக் கூட்டத்தை ஓரளவு விலக்கி இரவு 10.15 மணியளவில் வாகனங்கள் போவதற்கு ஏற்பாடுகளைச் செய்யக்கூடியதாயிருந்தது. ஒரே அம்புலன்ஸிலேயே எம்.ஜி.ஆரும் ராதாவும் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ராதாவின் உடலில் இருந்து குண்டுகளை டாக்டர்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றினார்கள். ஆனால், எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரை, குண்டை அகற்றினால் அது கழுத்து முள்ளெலும்பை மேலும் சேதப்படுத்திவிடுமென்று டாக்டர்கள் அஞ்சினார்கள். அக்குண்டைத் தொடாமல் விடுவதற்கு அவர்கள் தீர்மானித்தார்கள். அடுத்த நாள் காலை 11 மணியளவில்தான் இருவருக்கும் சுய நினைவு திரும்பியது.

இரவு பூராகவும் ரசிகர்கள் மனம் பதைபதைத்த வண்ணமே காணப்பட்டனர். இருவரதும் உடல்நிலைபற்றி வெளியான செய்திகளால் ரசிகர்களும் நலன்விரும்பிகளும் ஆறுதலடைந்தனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் வெளியில் தெரிவதைப் போன்று சாதாரணமானதாக இருக்கவில்லை. பின்னர் தொடர்ந்த புலன் விசாரணைகளும் நீண்ட வழக்கு விசாரணையும் சிக்கலான கதையொன்றைக் கட்டவிழ்த்துவிட்டன.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற போது எம்.ஜி.ஆர். வீட்டில் ராதாவுடன் கே.கே. வாசுவும் இருந்தார். அவர் முக்கியமான ஒரு சாட்சி. திரைப்படத் தயாரிப்பாளரான வாசு எம்.ஜி.ஆரைக் கதாநாயகனாக வைத்து "பெற்றால்தான் பிள்ளையா" என்ற படத்தைத் தயாரிப்பதற்காக 1966 ஆம் ஆண்டு எம்.ஆர்.



ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருந்தவாறு சட்டசபை உறுப்பினராக பதவியேற்கும் எம்.ஜி.ஆர்.




ராதாவிடம் பணத்தைக் கடனாகப் பெற்றிருந்தார். படம் வெற்றிகரமாக ஓடி பெரும் வசூலைக் கொடுத்தது. ராதாவிடம் பெற்ற கடனை வட்டியுடன் சேர்த்து திருப்பிக் கொடுத்துவிட்டார் வாசு.

எம்.ஜி.ஆரை மீண்டும் கதாநாயகனாகக் கொண்டு இன்னொரு படத்தைத் தயாரிப்பதற்காக வாசுவை ராதா அணுகினார். ஜனவரி 12 ஆம் திகதி காலை இருவரும் திரைப்படத் தயாரிப்பு குறித்து கலந்துரையாடுவதற்காகச் சந்தித்தனர். மாலை 4.30 மணியளவில் வாசுவும் ராதாவும் நந்தம்பாக்கத்தில் உள்ள எம்.ஜி.ஆரின் வீட்டுக்குச் சென்றனர். வரவேற்பு அறையில் இருவரும் அமர்ந்திருந்தனர். ராதா தான் கொண்டு வந்த பையை மேசைமீது வைத்தார். இருவரும் எம்.ஜி. ஆர். வரவுக்காகக் காத்திருந்தனர்.

இந்தக் கட்டம் வரையில் ''கதை'' தெளிவானது. சகலதரப்பினரும் பரந்தளவில் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், இதற்குப்பிறகு தெரிவிக்கப்பட்ட விபரங்கள் தான் மாறுபாடானவையாக அமைகின்றன.

உத்தேச புதிய திரைப்படத்தின் விபரங்கள் பற்றி எம்.ஜி.ஆரும் வாசுவும் பேசிக்கொண்டிருந்த போது ராதா தனது இருக்கையை விட்டு எழுந்தார். அப்போது அவரை உட்காருமாறு எம்.ஜி.ஆர். வேண்டிக்கொண்டார். ஆனால், அவரின் சொல்லை ராதா மதிக்கவில்லை. எம்.ஜி.ஆரும் வாசுவும் தங்கள் பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தபோது திடீரென்று பெரிய சத்தமொன்று கேட்டது.

சூடுபட்ட வேதனையை உணர்ந்த எம்.ஜி.ஆர். தனது இடது காதை கையால் பொத்திக்கொண்ட போது இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நிமிர்ந்து பார்த்த போது ராதா கையில் சுழல் துப்பாக்கியுடன் நிற்பதை எம்.ஜி.ஆர். கண்டார். ராதா பின் வாங்கி தனது வலது கன்னத்தில் தானே சுட்டுக்கொண்டார். அடுத்து கழுத்திலும் சுட்டார். எம்.ஜி.ஆர். ஒருவாறாகச் சமாளித்துக் கொண்டு முன் அறை வரை நடந்து சென்று தன்னை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச்செல்லுமாறு தனது சாரதியைக் கேட்டார். இவ்வளவு சம்பவத்தையும் வழக்கு விசாரணையின் போது எம்.ஜி.ஆரும் வாசுவும் நீதிமன்றத்தில் கூறியிருந்தனர்.

ஆனால், ராதா வேறுவிதமாகக் கூறினார். தன்னையும் வாசுவையும் வீட்டின் வரவேற்பு மண்டபத்தில் எம்.ஜி.ஆர். சந்தித்தபோது அவரைப் பற்றி அவதூறான கட்டுரைகளை எழுதியமைக்காக ராதாவை கடுமையாக ஏசியதாக ராதா கூறினார்.

''முதலமைச்சர் காமராஜரைக் கொலை செய்வதற்கு நான் திட்டம் தீட்டிக்கொண்டிருப்பதாக நீங்கள் எழுதுகின்றீர்கள். பிறகு என்னைச் சுடப்போவதாகவும் அச்சுறுத்துகின்றீர்கள். அதேமாதிரி நான் கதைப்பதையும் தடுக்க முடியாது'' என்று எம்.ஜி.ஆர். கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், ராதா இதை மறுத்தார். வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்த போது பெரியதொரு சத்தத்தைக் கேட்டதும் தனக்கு தலை சுற்றுவது போல் இருந்தது என்றும் கன்னத்தில் சூடுபட்டதை உணர்ந்ததாகவும் அப்போது எம்.ஜி.ஆர் துப்பாக்கியை தன்னை நோக்கி நீட்டிக் கொண்டிருந்ததாகவும் ராதா கூறினார்.

தனக்குச் சூடுபட்டதும் உடனடியாக எம்.ஜி.ஆர். மீது பாய்ந்து அவரிடமிருந்த துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுட்டதாக ராதா தெரிவித்தார்.

ஜனவரி 30 வரை ராதா ஆஸ்பத்திரியில் இருந்தார். பிறகு சென்னை மத்திய சிறையில் ஏ-வகுப்பு அறையில் தடுத்து வைக்கப்பட்டார்.

தேர்தல் பிரசாரங்கள் முழுவீச்சில் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. கழுத்தில் காயத்துக்கு கட்டுப்போட்டுக் கொண்டு எம்.ஜி.ஆர். ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருக்கும் படங்கள் பட்டி தொட்டி எங்கும் ஒட்டப்பட்டன.

பெப்ரவரி 23 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. காங்கிரஸை படுமோசமாகத் தோற்கடித்த திராவிட முன்னேற்றக் கழகம் புதிய ஆட்சியை அமைத்தது. எம்.ஜி.ஆர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரை பிரமிக்கத்தக்க பெரும்பான்மை வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

எம்.ஜி.ஆரைக் கொலை செய்வதற்கு முயற்சித்ததுடன், தற்கொலைக்கு முயன்றதாகவும் ராதாமீது குற்றஞ்சாட்டி பெப்ரவரி 27ஆம் திகதி பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். சூட்டுச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட சுழல் துப்பாக்கி ராதாவுக்குச் சொந்தமானது என்றும் அதன் அனுமதிப் பத்திரம் 1964 ஆம் ஆண்டில் காலாவதியாகிவிட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## குற்றவாளியாகக் காணப்பட்ட ராதா

புதிதாக பதவிக்கு வந்த தி.மு.க. அரசாங்கம் வழக்கில் அதன் செல்வாக்கைப் பிரயோகித்து தனக்கு நேர்மையான விசாரணை மறுக்கப்படக்கூடிய சூழ்நிலை தோன்றுமென்று ராதா அஞ்சினார். சென்னை மாநிலத்துக்கு வெளியேயுள்ள நீதிமன்றமொன்றுக்கு வழக்கை மாற்றக்கோரி உச்சநீதிமன்றத்தை அணுகினார் நடிகவேள். ஆனால், ஆட்சியில் இருக்கும் கட்சி அதன் செல்வாக்கையோ அதிகாரத்தையோ பிரயோகிக்காது என்று முதலமைச்சர் சி.என். அண்ணாத்துரையும் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியனும் வழங்கிய

உத்தரவாதங்களையடுத்து வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றக்கோருமனுவை ராதா வாபஸ் பெற்றுக் கொண்டார்.

அதேவேளை, மார்ச் 23ஆம் திகதி எம்.ஜி.ஆருக்கு கழுத்தில் வலி ஏற்பட்டு அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவரது முள்ளெலும்பில் சிக்கிக் கொண்ட குண்டு அதன் ஆரம்ப இடத்தில் இருந்து சற்று நகர்ந்து விட்டதை எக்ஸ்ரே படங்கள் காட்டின. டாக்டர்கள் தாமதிக்காமல் உடனடியாகவே சத்திர சிகிச்சையை மேற்கொண்டு அந்தக் குண்டை எம்.ஜி.ஆரின் உடலில் இருந்து அகற்றினார்கள். ஆனால், அவரின் குரல் பழுதாக்கப்பட்டுவிட்டது.



தாய்க்கு தலைமகன் படத்தில்
எம்.ஆர்.ராதாவுடன் எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி

சென்னை செசன்ஸ் நீதிமன்றத்தில் ஆகஸ்ட் முதலாம் திகதி வழக்கு விசாரணை ஆரம்பமாகியது. அரசியல் குரோதம், தொழில் பொறாமை மற்றும் தனிப்பட்ட காழ்ப்பு ஆகியவை காரணமாக ராதா எம்.ஜி.ஆரைக் கொலை செய்யும் நோக்குடனேயே அவரது வீட்டுக்குச் சென்றிருந்தார் என்று நிரூபிப்பதற்கு வழக்குத் தொடுநர் தரப்பு விரும்பியது.

ஆனால், ராதாவின் சார்பில் ஆஜரான வக்கீல் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வழக்குத் தொடுநர் தரப்பு தவறிவிட்டது என்றும் நடைபெற்றது இருவருக்கும் இடையிலான இழுபறியின் போது ஏற்பட்டிருக்கக்கூடிய விபத்தே என்று நிலைநாட்ட முயற்சித்தார். அது சுலபமானதாக இருக்கவில்லை. ஆனால், ராதாவின் தரப்பில் ஆஜரான எஸ்.மோகன் குமாரமங்கலம், என்.ரி.வானமாமலை மற்றும் என்.நடராஜன் ஆகியோர் கடுமையான சில கேள்விகளை முன்வைத்தனர்.

பி.ஆர். கோகுலகிருஷ்ணன் தலைமையிலான (இவர் பிறகு மேல் நீதிமன்ற நீதிபதியானார்) வழக்குத் தொடுநர் தரப்பு ராதா படுமோசமான நிதி நெருக்கடியில் இருந்தார் என்பதை நிரூபிப்பதற்கு பல சாட்சிகளை அழைத்து விசாரித்தார். உதாரணமாக ராதாவை பத்து வருடங்களாக அறிந்திருந்த புடவை வியாபாரியான எஸ்.ஏ.நடராஜசெட்டி அளித்த சாட்சியத்தைக் கூறலாம். தன்னிடம் 37,600 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்துவிட்டு ஆக 1001 ரூபாவை மாத்திரம் ராதா தந்ததாகவும் மிகுதிப் பணத்தை அவரிடமிருந்து பெறுவதற்கு மேல் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகளைத் தாக்கல் செய்ய வேண்டியிருந்தது என்றும் செட்டி சாட்சியம் அளித்தார்.

அடுத்து வழக்குத் தொடுநர் தரப்பு ராதாவின் நிதிநெருக்கடியை அவரின் அரசியல் கருத்துகளுடன் இணைக்க முயற்சித்தது. திராவிடர் கழகத்தை ஆதரித்த ராதா தி.மு.க. வின் முன்னணி உறுப்பினரான எம்.ஜி.ஆருக்கு எதிராக கடுமையான கருத்துகளைக் கொண்ட ஒரு பேர்வழி என்று காண்பிக்க முயற்சிக்கப்பட்டது. ஜனவரி 8 ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் மகாநாட்டில் உரையாற்றிய ராதா, நேரடி நடவடிக்கையில் இறங்குமாறு கழக உறுப்பினர்களுக்கு அறைகூவல் விடுத்ததாகவும் கத்திகளை வைத்திருப்பது மாத்திரம் போதுமானதல்ல என்று கூறியதாகவும் பொலிஸ் சுருக்கெழுத்துப் பணியகத்தில் கடமையாற்றிய தமிழ் கனிஷ்ட நிருபரான ஆர்.சுப்பிரமணியம் தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு சாட்சியளித்தார்.

ஜனவரி 12 ஆம் திகதி சைதாப்பேட்டை பொலிஸுக்கு ராதாவினால் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் "என்னுடைய முடிவு" என்ற தலைப்பிலான நான்கு பக்கப் பிரசுரம் முக்கியமான சான்றாக இருந்தது. ஆரியத்துக்குத் துணைபோகும் பேர்வழிகளில் சிலரை ஒழித்துக் கட்டுவதற்கான நோக்கத்தை ராதா அதில் விளக்கியிருந்ததாகக் கூறப்பட்டது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் செயற்பாடுகளுக்கு முன்னணியில் நிற்கப்போவதாகவும் ராதா பிரசுரத்தில் கூறியிருந்தாராம்.

பெரும் விரக்தியடைந்திருந்த தனது உயிரை மாய்த்துக் கொள்வதன் மூலமாக ஒரு தியாகியாகக் காட்டிக்கொள்ள விரும்பினார். தனக்கு பணத்தைக் கடனாகக் கொடுத்தவர்களிடமிருந்து தப்பிக் கொள்வதற்கான ராதாவின் மார்க்கமே இது என்பதே வழக்குத் தொடுநர் தரப்பின் முடிவு.

ராதாவுக்கு எதிராகச் சாட்சியம் அளித்தவர்களில் பலர் சொல்லிக் கொடுக்கப்பட்டதையே கூறினார்கள் என்றும் "என்னுடைய முடிவை" ராதா எழுதியிருக்கவில்லை என்றும் அவர் தரப்பிலான வக்கீல்கள் வாதஞ் செய்தனர். இரத்தக்கறை படிந்த எம்.ஜி.ஆரின் உடைகளை பரிசோதனைக்குட்படுத்தாமலேயே பொலிஸார் அவரின் குடும்பத்தினரிடம் கொடுத்திருந்தமையும் விளங்காத ஒன்றாக இருக்கிறது என்றும் அந்த வக்கீல்கள் கூறினர்.

அந்த உடைகளை பொலிஸார் பரிசோதனை செய்திருந்தால் அவற

றின் மீது சிதறிய ராதாவின் இரத்தத்தைக் கண்டுபிடித்திருப்பார்கள் என்பதே பிரதிவாதி தரப்பு வாதம். சுருக்கமாகச் சொல்லப் போனால் வழக்குத் தொடுநர் தரப்பினால் கற்பிக்கப்பட்ட நோக்கங்களை நிராகரித்த ராதா தரப்பு வக்கீல்கள் "யார் யாரைச் சுட்டார்கள்" என்பதே பிரச்சினையின் சாரம் என்று வாதிட்டனர். ராதாவின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட இரு குண்டுகளையும் எம்.ஜி.ஆரின் உடலில் இருந்து மீட்கப்பட்ட ஒரு குண்டையும் பரிசோதித்த சென்னை மருத்துவக் கல்லூரி சட்டமருத்துவ பேராசிரியர் டாக்டர் கே.சி.பி.கோபாலகிருஷ்ணன் மூன்று குண்டுகளும் ஒரே துப்பாக்கியில் இருந்தே வெளியேறியிருந்தன என்பதை ஊர்ஜிதம் செய்தார். எந்தத் துப்பாக்கியில் இருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன என்பதே பொலிஸார் முன்னால் இருந்த கேள்வி.

சுடு கலன்கள் நிபுணரான ஏ.வி.சுப்பிரமணியன் இந்த வழக்கில் ஒரு முக்கிய சாட்சி. ஒரேமாதிரியான தோட்டாக்களைப் பயன்படுத்துவதற்கென்று வடிவமைக்கப்பட்டவையே எம்.ஜி.ஆரினதும் ராதாவினதும் துப்பாக்கிகள் என்று கூறிய அவர், தோட்டாக்களில் உள்ள குறியீடுகளே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை என்று சுட்டிக்காட்டினார். தோட்டாக்களை ஆராய்ந்த சுப்பிரமணியன் அவை ராதாவின் துப்பாக்கியில் இருந்தே வெளியேறியிருந்தன என்பதை அடையாளம் கண்டார்.

சுப்பிரமணியம் மைக்ரோ புகைப்படங்களைப் பயன்படுத்தவில்லை என்று காரணம் கூறி இந்த வாதத்தைத் தோற்கடிக்க பிரதிவாதித் தரப்பு முயற்சித்தது. குண்டுகள் நிரப்பப்பட்ட துப்பாக்கியை ராதா எம்.ஜி.ஆர். வீட்டுக்கு எடுத்துச் சென்றார். அத்துடன் அவ்வாறு ஏன் செய்தார் என்பதற்கான விளக்கத்தை ஒரு போதுமே அவர் அளிக்கவில்லை என்று வழக்குத் தொடுநர் தரப்பு பதில்வாதம் செய்தது. எம்.ஜி.ஆரின் வீட்டில் இருந்து பொலிஸாரினால் எடுக்கப்பட்ட துப்பாக்கியில் குண்டுகள் நிரப்பப்பட்டிருக்கவில்லை என்றும் அத்தரப்பு கூறியது.


இருதரப்பு வாதங்களையும் கேட்டபிறகு அக்டோபர்22ஆம்திகதி நீதிமன்றம் தீர்ப்பு நவம்பர் 4 அறிவிக்கப்படும் என்று தெரிவித்தது.

கொலை செய்ய முயற்சித்ததாகவும் ஆயுதச் சட்டத்தை மீறியதாகவும் ராதாவை நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டது. எம்.ஜி.ஆரைச் சுடுவதற்குப் பயன்படுத்திய துப்பாக்கியின் அனுமதிப்பத்திரம் 1964 ஜனவரி 26ஆம் திகதி காலாவதியாகிவிட்டது. ராதாவுக்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் உடனடியாகவே அத்தீர்ப்பை எதிர்த்து மேல் நீதிமன்றத்திடம் மேன்முறையீடு செய்தார். நீண்ட காலத்துக்குப் பிறகு 1968 ஏப்ரல் 24 ஆம் திகதி மேல்நீதிமன்றம் ராதாவின் மனுவை நிராகரித்து செசன்ஸ் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தது.

"ராதா மீது எம்.ஜி.ஆருக்கு ஏதாவது காழ்ப்பு இருந்திருந்தால் அவரைத் தனது வீட்டுக்கு வருவதற்கு அனுமதித்திருக்கமாட்டார். ராதாவை வீட்டுக்குள் அனுமதித்துவிட்டு அவரைச் சுடுவது குறித்து எம்.ஜி.ஆர். சிந்தித்திருக்கமாட்டார். தன் வீட்டில் வைத்து சுடுவதன் மூலமாக பிடிபடக்கூடிய ஆபத்துக்குள் தன்னைத் தள்ள விரும்பியிருக்கமுடியாது. ராதாவைச் சுட்டுக் கொலை செய்ய முயற்சிக்கிற அளவுக்கு அவர் மீது எம்.ஜி.ஆருக்கு குரோதம் இருந்தது என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது" என்று தீர்ப்பில் நீதிபதி கூறினார்.

ராதா உச்ச நீதிமன்றத்தை நாடினார். அவரின் மேன்முறையீட்டை உச்சநீதிமன்றம் நிராகரித்த போதிலும், மனிதாபிமான காரணங்களின் அடிப்படையில் அவரின் தண்டனையைக் குறைத்தது. 57 வயதான ராதாவுக்கு பெரிய குடும்பம் இருந்தது. அதைப் பராமரிக்க வேண்டிய பெரிய பொறுப்பு அவருக்கு இருந்ததை நீதிமன்றம் கருத்திலெடுத்தது. 1969 மே 2 ஆம் திகதி ராதாவின் சிறைத்தண்டனையை 5 வருடங்களாக உச்ச நீதிமன்றம் குறைத்துத் தீர்ப்பளித்தது.

5 வருட சிறைவாச காலம் முடிவடையவிருப்பதற்கு ஒருமாதம் முன்னதாகவே தி.மு.க. அரசாங்கம் ராதாவை 1971 ஏப்ரல் 29 விடுதலை செய்தது. மொத்தமாக ராதா நான்கு வருடங்களும் மூன்று மாதங்களுமே சிறைவாசத்தை அனுபவித்தார்.



துப்பாக்கிச்சூட்டுக்கு பிறகு குணமடைந்து நடித்த முதல் திரைப்படமான காவல்காரனில் ஜெயலலிதாவுடன் எம்.ஜி.ஆர்.

விளையாட்டு



# அதிர்ச்சி தரும் ஓய்வுகள்

நடராஜா விநாயகன்

## சச்சின் டெண்டுல்கரும் ரிக்கி பொண்டிங்கும்

சர்வதேச கிரிக்கெட்டில் அடுத்தடுத்து அதிர்ச்சிகள் ஏற்படுகின்றன. உலகப் புகழ்பெற்ற, வீரர்கள் அடுத்தடுத்து ஓய்வுபெறுவது சர்வதேச கிரிக்கெட்டை பாதிக்கத் தொடங்கியுள்ளது. கிரிக்கெட்டின் வடிவங்கள் மாறுபட்டு வரும் நிலையில் உலகப் புகழ்பெற்ற வீரர்களின் ஓய்வு கிரிக்கெட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறதோ, இல்லையோ ரசிகர்கள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. “ருவென்ரி-20” போட்டியின் வருகை டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒரு நாள் போட்டிகளிற்கான மவுசை பெரிதும் பாதித்து வருகையில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளிலிருந்து புகழ்பெற்ற வீரர்கள் ஓய்வுபெறுவது அவற்றை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளி வருகிறது.

ஐந்து நாட்களைக் கொண்ட டெஸ்ட், ஒரு நாளைக் கொண்ட சர்வதேச ஒரு நாள் போட்டி, நான்கு மணி நேரத்திற்குள் முடிவை அறியக் கூடிய “ருவென்ரி-20” போட்டி யென கிரிக்கெட்டின் வடிவங்கள் இன்று மாறுபடுகின்றன. இது கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு உதவுகிறதோ, இல்லையோ கிரிக்கெட்டை வைத்து பணம் சம்பாதிப்போருக்கு பெரிதும் உதவுகிறது. பழைய திரைப்படங்களைப் போல் டெஸ்ட் போட்டிகளும் இடைக்காலத் திரைப்படங்களைப் போல் ஒரு நாள் போட்டிகளும் தற்போதைய திரைப்படங்களைப் போல் “ருவென்ரி-20” போட்டிகளும் இருப்பதாகவே காணப்படுகிறது. இதனால் கிரிக்கெட் வீரர்கள் மீது இருந்த மவுசு குறைந்து அந்த நேரத்தில் அந்தப் போட்டியில் யார் மிகத் திறமையை வெளிப்படுத்துகிறாரோ இவரே அன்றும் அடுத்த சில தினங்களும் “ஹீரோ” வாகிறார்.

இந்தநிலையில் இன்று டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளின் முக்கியத்துவம் குறைவடைய அவற்றில் பிரகாசித்தவர்களெல்லாம் ஓரம் கட்டப்படும் நிலையேற்பட்டுள்ளது. “ருவென்ரி-20” போட்டிகளில் அன்றன்று நடைபெறும் ஆட்டங்களில் அதுவும் துடுப்பாட்டங்களில் பிரகாசிக்கக் கூடியவர்களை வைத்து டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளிலும் ஆடிவிட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு இன்றைய இளம் ரசிகர்கள் மத்தியில் ஏற்படத் தொடங்கி விட்டது. இதனால் தான் ஊடகங்களில் வரும் கடும் விமர்சனங்களையடுத்து டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளிலிருந்து சிரேஷ்ட வீரர்கள் திடீர் திடீரென ஓய்வுபெறும் கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் கிரிக்கெட் உலகில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரும் அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங்கும் மிகவும்

முக்கியத்துவமானவர்கள். உலகக் கிரிக்கெட்டில் இன்று இந்தியா மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகிறது. கிரிக்கெட்டே தெரியாத உலகின் இரு அணிகள் இந்தியாவில் எந்த மைதானத்தில் விளையாடினாலும் அங்கு ஆயிரக்கணக்கில் ரசிகர்கள் திரளும் நிலை வேறு எந்தவொரு நாட்டிலுமில்லை. அவ்வாறானதொரு நாட்டில் கிரிக்கெட் மதமென்றால் அங்கு சச்சின் கடவுளாயிருந்தவர். அவர் சர்வதேச ஒரு நாள் போட்டியிலிருந்து திடீரென ஓய்வுபெற்றமை ரசிகர்களை முழுமையாகப் பாதித்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய காலத்திலிருந்து இது வரை சச்சின், பாகிஸ்தான் அணிக்கெதிரான எந்தவொரு போட்டித் தொடரிலும் பங்குபற்றாமலிருந்ததில்லை. ஆனால் மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர் இந்தியாவுக்கு வருகை தந்த பாகிஸ்தான் அணியுடனான ஒருநாள் தொடரில் பங்கேற்று தனது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டுக்கு விடைகொடுக்கலாமென சச்சின் நினைத்திருந்தார்.

இந்திய அணியின் தேர்வுக்குழு மாற்றப்பட்டது. ஸ்ரீகாந்த் மாற்றப்பட்டு தேர்வுக்குழுவின் புதிய தலைவராக சந்திப் பட்டேல் நியமிக்கப்பட்டார். ஸ்ரீகாந்த் அணித் தலைவராக நியமிக்கப்பட்ட குறுகிய காலப்பகுதியில் தான் ஸ்ரீகாந்த்தின் தலைமையில் பாகிஸ்தான் சென்ற இந்திய அணியில் அறிமுக வீரராக சச்சின் டெண்டுல்கர் 1989இல் களமிறங்கினார். அப்போதைய அணியில் சந்திப் பட்டேலும் இடம்பிடித்திருந்தார். ஆனால் அப்போது அவர் அணியிலிருந்து வெளியேறும் நிலையிலிருந்தார். அந்த சந்திப் பட்டேல் தான் ஸ்ரீகாந்த் தேர்வுக்குழுத் தலைவர் பதவியிலிருந்து விலகிய பின்னர் தேர்வுக்குழுவின் தலைவராகியுள்ளார். அவர்தான், பாகிஸ்தானுக்கு எதிரான இம்முறை தொடரில் சச்சினுக்கு வாய்ப்பு வழங்க மறுத்துவிட்டார். சச்சின் எவ்வளவோ கேட்டும், இந்த ஒருநாள் தொடருடன் ஓய்வுபெற அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதையடுத்தே பாகிஸ்தான் ஒரு நாள் தொடர் ஆரம்பமாவதற்கு முன் சச்சின் எவருமே எதிர்பாராத வகையில் ஓய்வை அறிவித்தார்.




இதேபோன்றதொரு நிலைதான் அவுஸ்திரேலிய அணியில் ரிக்கி பொண்டிங்கிற்கும் ஏற்பட்டது. அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக் கப்டனாக விளங்கியவர் பொண்டிங். இவரது தலைமையில் ஆஸி.அணி இருமுறை (2003, 2007) உலகக் கிண்ணத்தை வென்று சாதித்தது. 1995 இல் சர்வதேச கிரிக்கெட்டில் காலடி வைத்த இவர் கடந்த வருட பிற்பகுதியுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்று விட்டார். 17 வருட கிரிக்கெட்டில் 2012 பெப்ரவரியில் சர்வதேச ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வுபெற்றார். 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு பின் "ருவென்ரி-20" போட்டிகளில் பங்கேற்கவில்லை. இந்த நிலையில் கடந்த வருட பிற்பகுதியில் பேர்த்தில் நடைபெற்ற தென் ஆபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றார். ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்தி வந்த போதும் 37 வயதில் அடுத்தடுத்து சில டெஸ்ட்களில் சோபிக்காததால் கடும் நெருக்கடிக்கும் விமர்சனத்துக்கும் உள்ளானார். மேலும் நெருக்கடிகளையும் குறிப்பாக அவமானத்தையும் சந்திப்பதை தவிர்ப்பதற்காக டெஸ்ட் போட்டியிலிருந்தும் ஓய்வுபெற்றார்.

1995 இல் பேர்த்தில் இலங்கைக்கு எதிரான டெஸ்டில் அறிமுகமான பொண்டிங் அதே பேர்த் மைதானத்தில் கடைசி டெஸ்ட் போட்டியுடன் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வை முடித்தார். அதேநேரம் பாகிஸ்தானுக்கு எதிராக தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வை ஒரு நாள் போட்டி மூலம் ஆரம்பித்த சச்சினுக்கு அதே பாகிஸ்தான் அணி 5 வருடங்களுக்குப் பின் இந்தியா வந்த நிலையில் அந்தத் தொடரில் பங்கேற்று

ஓய்வுபெற அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் பொண்டிங்கின் விருப்பத்திற்கேற்ப அவர் ஓய்வுபெற வாய்ப்பளிக்கப்பட்டது. இதனால் தான் பொண்டிங் ஓய்வுபெற்ற போது அவரை வாழ்த்தி அனுப்ப அவுஸ்திரேலிய வீரர்களுடன் தென் ஆபிரிக்க வீரர்களும் காத்திருந்தனர். ஆனால் இந்திய மண்ணில் தனது கடைசி ஒரு நாள் தொடரை பாகிஸ்தானுடன் விளையாடி விடைபெற சச்சினுக்கு அனுமதி மறுக்கப்பட்டமையானது ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய கிரிக்கெட்டை மதமாகவும் சச்சினை அதன் கடவுளாகவும் நேசித்தவர்களுக்கு இனி இந்திய கிரிக்கெட் மீதான பற்று குறைந்துவிடலாம். இதை சச்சினின் திடீர் ஓய்வுடன் பெரும்பாலான ரசிகர்கள் கூறியுள்ளனர். ஆனாலும் சச்சின் டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்ந்து விளையாடவுள்ளார். பாகிஸ்தான் அணி இம்முறை இந்திய மண்ணில் "ருவெண்ரி-20" தொடரை சரிசமனாக்கி ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியமையானது ரசிகர்களை கடும் விசனமடையச் செய்துள்ளது. அதேநேரம் பொண்டிங்கின் ஓய்வும் சச்சின் ஓய்வும் ரசிகர்களிடையே கிரிக்கெட் குறித்த கேள்விகளையும் எழுப்பியுள்ளது. உலகப் புகழ்பெற்ற இவ்விரு வீரர்களதும் அடுத்தடுத்த ஓய்வு, புகழ் மங்கிப் போய்க் கொண்டிருக்கும் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளையும் மேலும் பாதிப்புக்குள்ளாக்கிவிடலாம்.

ஆனாலும் இவ்விரு வீரர்களதும் அபார திறமைகள் குறித்து ரசிகர்கள் சிலாகிக்கத் தொடங்கிவிட்டனர். இருவர் பற்றியுமான ஒப்பீடுகளும் தொடங்கிவிட்டன. டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் இருவருமே மிகவும் திறமைசாலிகள். இருவரும் தத்தமது அணிகளை வழிநடத்தி பல சாதனைகளைப் படைத்ததுடன், சோதனைகளையும் சந்தித்தவர்கள். இருவருமே கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்களாக கருதப்படுபவர்கள். சாதனைகள் பலவற்றில் சச்சினும் பொண்டிங்கும் முன்னும் பின்னும் இருப்பவர்கள். டெஸ்ட் ஓட்டங்களை அதிகம் குவித்ததில் சச்சின் முதலிடத்திலுள்ளார். 15, 546 ஓட்டங்கள் குவித்துள்ளார். அதேபோல் ஒரு நாள் போட்டிகளிலும் 18, 426 ஓட்டங்களைக் குவித்து சச்சினே முதலிடத்திருக்கின்றார். பொண்டிங் டெஸ்ட் போட்டிகளில் 13, 366 ஓட்டங்களும் ஒருநாள் போட்டிகளில் 13, 704 ஓட்டங்களும் குவித்துள்ளார். சச்சினின் டெஸ்ட் சதங்கள் 51. பொண்டிங்கின் டெஸ்ட் சதங்கள் 41. சச்சின் ஒரு நாள் போட்டிகளில் 49 சதங்கள் விளாசியுள்ளார். பொண்டிங் 30 சதங்கள் விளாசியுள்ளார்.

ஆனால் டெஸ்ட் அரைச் சதங்களில் இருவருக்குமிடையே பெரிதும் வித்தியாசமில்லை. சச்சின் அடித்தது 65 அரைச்சதங்கள் பொண்டிங் அடித்தது 62 அரைச் சதங்கள். ஒருநாள் போட்டிகளில் சச்சின் 96 அரைச் சதங்கள் எடுக்க பொண்டிங் 80 அரைச் சதங்கள் அடித்துள்ளார். அதேநேரம், பொண்டிங்கை விட எல்லாவற்றிலும் சாதித்த சச்சினால் கப்டன் பதவியில் பெரிதாக சாதிக்க முடியவில்லை. பொண்டிங் கப்டன் பதவியிலிருந்த போது அணியை வழிநடத்துவதிலும் தனது ஆட்டத் திறனை முன்னெடுப்பதிலும் வெற்றி கண்டவர். பொண்டிங் கப்டனாக உலக சாதனை படைத்தவரென்றே கூறலாம். அதில் சச்சினின் சாதனையைக் கூறவே முடியாது. சச்சின் மீது கப்டன் பதவி திணிக்கப்பட்டது. ஆனால் பொண்டிங்கிடம் அப்பதவி தேடி வந்தது. சச்சினோ கப்டன் பதவியால் மிரண்டவர், பொண்டிங்கோ அதன் மூலம் சாதித்தவர்.

சச்சின் 25 டெஸ்ட் போட்டிகளுக்கு கப்டனாயிருந்து அதில் 9இல் வென்றார். 4இல் தோற்றார். 12 போட்டிகள் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தன. அதேநேரம், 73 ஒரு நாள் போட்டிகளுக்கு சச்சின் கப்டனாயிருந்தார். அதில் 23 இல் மட்டுமே அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். 43 இல் தோல்வியடைந்தார். 2 டிரா ஆனது. 6 போட்டிகளுக்கு முடிவு கிடைக்கவில்லை. ஆனால் டெஸ்ட் போட்டிகளில் பொண்டிங் அபார திறமை படைத்தார். டெஸ்ட் அரங்கில் அதிக வெற்றிகள் பெற்ற கப்டன்கள் வரிசையில் பொண்டிங் முதலிடத்திலுள்ளார். 77 டெஸ்ட்போட்டிகளுக்கு தலைமை வகித்து 48இல் வெற்றி பெற்றார். 16 டெஸ்டில் மட்டுமே தோல்வியடைந்தார். 13 போட்டிகளை டிரா செய்தார். அத்துடன் சிறந்த களத்தடுப்பாளரான பொண்டிங் டெஸ்ட் வரலாற்றில் அதிக "கேட்ச்" பிடித்தவர்கள் வரிசையில் 2 ஆவது இடத்திலுள்ளார். இவர் 196 கேட்ச்கள் பிடித்துள்ளார். இந்தியாவின் ட்ராவிட் 210 கேட்ச்களுடன் முதலிடத்திலுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 6 முறை இரட்டைச் சதமடித்துள்ள பொண்டிங் ஒருமுறை கூட 300 ஓட்டங்களைத் தொடவில்லை. இவரைப் போன்றே சச்சினும் டெஸ்ட் வரலாற்றில் முச்சதம் அடிக்கவில்லை.

அதிக டெஸ்ட் போட்டிகள் விளையாடியோர் வரிசையில் சச்சின் 192 டெஸ்ட்களில் ஆடி முதலிடத்திலுள்ளார். அதேநேரம், 168 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் ஸ்ரீவோவுடன் அதிகூடிய டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முதல் அவுஸ்திரேலியர்கள் என்ற சாதனையை சமப்படுத்தியுள்ளார். சர்வதேச ரீதியில் 2ஆவது இடத்திலுள்ளார். பொண்டிங், ஸ்ரீவோ தலைமையில் இருமுறையும் தனது தலைமையில் இருமுறையும் உலகக் கிண்ணத்தை வென்றவர். ஆனால் சச்சினோ 1992 முதல் தொடர்ச்சியாக 2011 வரை 6 உலகக் கிண்ணத்தில் பங்கேற்றும் கடந்த உலகக் கிண்ணத்திலேயே வெற்றியைப் பெற்றவர். கப்டனென்று வரும் போதும் சாதாரண வீரரென்று வரும் போது அணியின் வெற்றிக்கு பெரும் பங்களிப்பை வகித்தவர் என்ற மிகப்பெரும் பெருமையை பொண்டிங்கே பெறுகிறார். இதில் சச்சின் பின் நிற்கிறார். இதனால் சச்சின் பல

தடைவைகள் பெரும் சர்ச்சைகளுக்கு முள்ளானார்.

ஆனாலும் ஒருநாள் போட்டியென்றாலும் டெஸ்ட் போட்டியென்றாலும் சாதனையென்று வரும்போது சச்சினே எப்போதும் முதலிடத்திலுள்ளார். ஒருநாள் போட்டியில் ஒரு ஆண்டில் அதிக ஓட்டங்கள் மற்றும் சதங்கள் அடித்த வீரர்களில் சச்சின் முதலிடம் வகிக்கின்றார். 1998இல் 34 போட்டிகளில் 9 சதம் உட்பட 1894 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ஏழு முறை ஒரே ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார். அதிக முறை 90 க்கும் 99 ஓட்டங்களுக்குமிடையில் ஆட்டமிழந்தவர் வரிசையிலும் சச்சின் முதலிடத்திலுள்ளார். இவர் 18 போட்டிகளில் 90 க்கும் 99 ஓட்டங்களுக்குமிடையில் ஆட்டமிழந்து சதச்சாதனையை தவறவிட்டவர். ஒரு நாள் போட்டியில் துடுப்பாட்டத்தில் 15 ஆயிரம் ஓட்டங்கள் (18, 426), பந்து வீச்சில் 100 விக்கெட் (154விக்கெட்), களத்தடுப்பில் 100 கேட்ச் (140) என சகல துறைகளிலும் அசத்தி புதிய வரலாறு படைத்தவர். அதிக பவுண்டரிகள் அடித்ததில் முதலிடத்திலுள்ளார்.

2016 பவுண்டரிகள் அடித்துள்ளார். அதிக சிக்ஸர்கள் அடித்தவர்களில் (195) 3 ஆவது இடத்தில் உள்ளார்.

இவ்வாறு சச்சினதும் பொண்டிங்கினதும் சாதனைகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இருவரதும் திறமைகளுக்கும் எல்லை இல்லை. மிகவும் புகழ்பெற்ற நிலையிலும் சகலதுறைகளிலும் அல்லது தாங்கள் பிரகாசிக்கும் ஏதாவது துறையில் புகழின் உச்சியிலிருக்கையில் ஓய்வுபெற்று விட வேண்டுமென புகழ்பெற்ற வீரர்கள் பலர் கூறியுள்ளனர். இது சுயநலமானதென்பதுடன், கோழைத்தனமானதும் கூட. திறமை குன்றி அணியிலிருந்து துரத்திவிடப் படலாமென்ற அச்சத்தில் திறமையுடன் இருக்கையில் ஓய்வுபெறுவதென்பது வெட்கக் கேடானது. யுத்தமுனையில் போராடும் ஒரு படை வீரன் தான் சாகும்வரை அல்லது எதிரி சாகும்வரை போராடுவது போல் தனது முழுத்திறமையையும் அணிக்காக அர்ப்பணிக்க வேண்டும். எப்படி ஒரு போர் வீரனிடமிருந்து அவனது தியாகத்தை ஒரு நாடு எதிர்பார்க்கின்றதோ அப்படி உலகப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்களும் ஓய்வுபெற அனுமதிக்கப்பட வேண்டும். இதுதான் விளையாட்டுக்குரிய பண்பென்பதை முழு உலகமும் உணரும் வரை சச்சின், பொண்டிங் போன்ற ஜாம்பவான்கள் கண்ணீருடன்தான் ஓய்வுபெறவேண்டும். ●

---

*(27ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ஆனால், இந்த நியாயங்களால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடுமா, அல்லது பெரிதாக்கப்படுமா? இதிலுள்ள சிக்கல்களையும் முடிச்சுகளையும் நன்றாக உணர்ந்துள்ள தமிழ் அரசியல் மற்றும் சமூகத் தலைமைகள், ஆடிக்கு ஒரு நாள், ஆவணிக்கு ஒரு நாள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளாமல், அந்த மக்களிடையே இருந்து, வாழ்ந்து, அவர்களது ஆதங்கங்களுக்கு வடிகாலாகவும், பிரச்சினைகளுக்கு செவிமடுப்போராகவும் செயல்பட வேண்டும்.

இல்லாது போனால், இந்தியா மட்டுமல்ல, பிற நாடுகளிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அடுத்த தலைமுறையினர் என்ற விதத்தில் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் மீண்டும் தொடங்குவது அந்தந்த அரசாங்கங்களுக்கு தவிர்க்க முடியாததாகிவிடும். அதன் காரணமாகவே, இனப்போர் முடிவிற்குப் பின்னர் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உலகளவில் கிடைத்துள்ள அனுதாபமும் அரசியல் ஆதரவும் மறுபடியும் இல்லாததாகிப் போய்விடும்.

மாறாக, புலம்பெயர் தமிழர்களை, அந்தந்த நாட்டு காவல்துறையினர் மீண்டும் சந்தேகக் கண்களுடன் பார்க்கத் தொடங்கலாம். அவ்வாறான சூழ்நிலை உருவாகுமேயானால், அவுஸ்திரேலியா மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்கள் குடிபுகுந்துள்ள ஒவ்வொரு நாடும் தங்களுக்கு என்றொரு "கிறிஸ்மஸ் தீவை" உருவாக்கிக் கொள்ளும். சர்வதேச அளவில் தற்போது தமிழர்களை ஆதரிக்கும் அரசாங்கங்கள் கூட, இலங்கைப் பகுதியில் தங்களது எதிர்கால பாதுகாப்புத் திட்டங்களை மனதில் நிறுத்தி செயல்பட தொடங்கும். அப்போது, மீண்டும் கொழும்பில் கோலோச்சும் எந்தவொரு அரசுடனும் சமாதானம் செய்து கொள்ள அவை தயாராகி விடும். அவ்வாறான நிலையைத்தானா, தமிழ்த் தலைமைகள் விரும்புகின்றன?

உலக நாடுகளைப் பொறுத்தவரையில், இலங்கை இனப்பிரச்சினையும், அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழப்பும் ஒரு குறிப்பிட்ட காலத்தோடு ஒட்டியவை. அது மறந்து போனால், அல்லது மறுக்கடிக்கப்படும் சூழ்நிலை உருவாகுமேயானால், அவர்கள் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு அடுத்த ஊரில் தங்களது கடையைக் கட்ட போய்விடுவார்கள். அந்த இடைப்பட்ட காலத்திலேயே தமிழர்கள் தங்களது வாழ்வுரிமையைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அல்லது, கிடைத்த உரிமைகளை தற்போது ஏற்றுக்கொண்டு இலங்கையில் அடுத்த ஒரு அரசு தலைமையை பதவியேற்கும் பட்சத்தில் அவர்களுடன் அரசியலில் உடன்பாடோ அல்லது போராடியோ அதிகப்படியான உரிமைகளைப் பெற முயற்சிக்க வேண்டும். இல்லாது போனால், "வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வாராவிட்டால்" என்ற தமிழ் பழமொழிக்கு, தமிழர்களே இலக்கியமாகவும் இலக்கணமாகவும் மீண்டும் மீண்டும் தங்களை முன்னிறுத்திக் கொள்வார்கள். மற்றப்படி, தமிழ்ச் சமூகம் மீண்டும் மீண்டும் சந்திக்கப் போவது துன்பமும் துயரமும் தான். ●

அறிவியல் களரி

# புற்று நோய்

## ஒரு வியாதி மட்டுமா?

## அல்லது

## உயிரினத்தின் பரிணாம வளர்ச்சியைக் காட்சிப்படுத்துகிறதா?

கனவுகளுக்குள் ஆழ்ந்திருப்பது எனக்கு மிகவும் பிடித்தமானது. வாழ்க்கையில் நம்மால் எட்டிப் பிடிக்க முடியாத உச்சங்களைக் கணகதியில் கைவசமாக்கும் வித்தை கனவுகளால் மட்டுமே சாத்தியமாகும். நான், நீங்கள் எல்லோரும் சாதாரணர்கள். உப்புக்கும் மிளகுக்கும், காதலுக்கும் காமத்திற்கும் கனவு காண்பவர்கள். ஆனால், தூர நோக்கும், பரந்த நுண்ணறிவும் கொண்ட விஞ்ஞானிகளின் கனவுகள் உலகத்தையே மாற்றியமைக்கும் வீச்சுக் கொண்டவையாகும்

### விஞ்ஞானிகளின் கனவு

பல விஞ்ஞானிகளின் மனங்களை அரித்துக் கொண்டிருக்கும் கனவு ஒன்று உண்டு. வெறிபிடித்த காளை மந்தைக்குள் புகுந்தால் என்ன நடக்கும்? சுற்றி நிற்பவற்றைக் குத்திக் குளறி ரணகளமாக்கிவிடும். கனவென ஆச்சரியப்படும் விதத்தில் அந்த வெறிக்காளை திடீரெனத் தன்னையே பன்மடங்கு மீளாக்கிப் பெருகினால் மந்தையே அழிந்துவிடக் கூடிய ஆபத்துண்டு. அதே விதமாக எமது உடலின் சில கலங்கள் (C-e-l-ls) வெறிமிகுந்து கட்டுப்பாடுகளை மீறி தான்தோன்றித்தனமாக பெருகத் தொடங்குவது பேராபத்தாகும். அதுதான் புற்றுநோய். ஏன் இவ்வாறு கலங்கள் பெருகத் தொடங்குகின்றன என்ற கேள்வி விஞ்ஞானிகளை நீண்டகாலமாக அலைக்கழிக்கிறது. அதற்கான விடைகளைத் தேடிக் கனவுகளும் காண்கிறார்கள். நோய்க் கலங்களை அழிப்பதன் மூலமே அந்நோயைக் குணப்படுத்த இன்றைய மருத்துவம் முயல்கிறது. மிகவும் பரிச்சயமான உதாரணம் சொல்லலாம். ஒரு சில பயங்கரவாதிகளைக் கொல்ல கண்மூடித்தனமாக பீரங்கிக் குண்டுகளை வீசுவது எப்படியோ அவ்வாறே புற்றுநோய்க் கலங்களைப் பூண்டோடு அழிக்க ரேடியோ தெரபி, கீமோதெரபி என முயல்கையில் ஆரோக்கியமான கலங்கள் பலவும் அழிந்தொழிகின்றன. இதனால்தான் புற்றுநோய்க்கான சிகிச்சையானது ஈன இரக்கமற்ற கொடுங்கோல் மன்னனின் மறைவான செயற்திட்டங்கள் போல பாரிய பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

பல தசாப்த ஆராய்ச்சிகளின் பயனாக புற்றுநோய் தொடர்பான சில விடயங்கள் தெரியவருகின்றன. புற்றுநோய்க்கான துணை நிரைல் கூறு புற்றுநோய்க்கான துணை நிரைல் கூறு (subroutine) எல்லா உயிரினங்களுக்குள்ளும் இருக்கிறது. செயலாற்றல் மிக்க அதுதான், கதிர்வீச்சு, இரசாயனங்கள், அழற்சி, கிருமித் தொற்று போன்றவற்றால் ஊறு ஏற்படும்போது கலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்குகிறது. பூமியில் உயிரினங்களின் வரலாற்றை பின்நோக்கிப் பார்க்கும்போது அவற்றின் கட்டுமானத்தில் புற்றுநோய்க்கான வாய்ப்பு ஆழமாகப் பதிந்திருக்கிறது என்கிறார்கள். மறைவாக இருப்பது சரியான தருணத்தில் சரியான சமிக்ஞை கிடக்கும்போது தூண்டப்பட்டு துரிதமாகச் செயற்பட ஆரம்பிக்கும்போது புற்றுநோய் ஏற்படுகிறது என்கிறார்கள்.

எனவே இது ஒரு நவீன பிறள்வு (modern aberration) அல்ல. பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாகவே நடக்கிறது. இது மனிதர்களில் மட்டும் வருவதில்லை. ஏனைய பாலூட்டிகளிலும், மீன்கள், ஊர்வன ஏன் தாவரங்களில் கூட வருகின்றன. புற்றுநோய் தோன்றுவதற்கான சில மரபணுக்கள் பல மில்லியன் வயது



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

டையவை என விஞ்ஞானிகள் கருது கிறார்கள். பூமியில் உயிரினங்கள் எவ்வாறு தோன்றின? எவ்வாறு படிப்படியாக இன்றுள்ள நிலையை எய்தின? இது பற்றிய பல கருத்துகள் உள்ளன. ஆனால் விஞ்ஞான ரீதி யாகப் பார்க்கும்போது உயிரினங்க ளின் பரிணாம மாற்றத்தில் நடை பெற்ற இரு விடயங்கள் மிக முக்கியமானவையாகும். சுமார் 2 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே சாதாரண சிறிய கலங்களிலிருந்து சிக்கலான பெரிய கலங்கள் உருவா கின. அத்தகைய கலங்களின் செயற் பாட்டிற்கு அதிக சக்தி தேவை. அவ் வாறான சக்தியைக் கொடுப்பதற்கு மைற்ரோகொன்றியா (mitochondria) வந்தது. புராதன பக்றீரியாக்க ளின் எச்சங்கள்தான் மைற்ரோகொன் றியா என்று கருதுகிறார்கள்.


### நச்சு ஒட்சிசன்

ஒரு முக்கியமான கருத்து உங்க ளுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இன்று நாம் உயிர் வாயு எனக் கொண் டாடும் ஒட்சிசனானது ஆரம்ப காலத்து தனிக்கல உயிரினங்களுக்கு நச்சுத்தன்மையான வாயுவாக இருந் தது. ஒளிச்சேர்க்கை மூலம் உற்பத்தி யாகி வளியில் செறிந்து கிடந்த இந்த ஒட்சிசனானது அன்றைய உயிரினங் களுக்கு அச்சுறுத்தலாக இருந்தது. இதிலிருந்து தப்ப அவற்றிற்கு இரண்டே இரண்டு வழிகளே இருந் தன. ஒட்சிசன் தேங்குவதைத் தடுப்ப தற்கான வழிகளைத் தேடுவதும், நச் சுத்தன்மை வாய்ந்த ஒட்சிசனால் பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப் புகளைத் தடுப்பதும் முதலாவதாகும். மற்ற வழி மிகவும் சாதுர்யமானது. நச்சு எனப்படும் அந்த ஒட்சிசனையே தனக்கு சக்தியை வழங்குவதற்கு ஏற்ப தான் மாற்றமுறுவதாகும். இதற் கும் உதவியது அந்த மைற்ரோகொன் றியா தான்.

இன்றைய உயிரினங்களில் மைற் ரோகொன்றியாதான் நச்சு ஒட்சிச னைக் கலங்களுக்கு சக்தியைத் தருவ தற்கான பணியைச் செய்கிறது. அபரிமிதமாகக் கிடைத்த ஒட்சிசனை முடாக் குடியன் போலக் குடிக்கவல்ல கலங்கள் உருவாகிய மாற்றமானது கூர்ப்பின் அடுத்த நிலைக்கு உயிரி னங்களைக் கொண்டு சென்றது. இந்த இரண்டாவது மாற்றம்தான் மிக முக்கியமானது. உயிரினங்களின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, புற்றுநோய் பற்றிய புரிதலுக்கும் மிகவும் முக்கிய மானதாகும். அதாவது இதுவரை காலமும் ஒரு கல உயிரினங்கள் மட் டுமே இருந்த பூவுலகில் முதல் முறை யாக பல கலங்களை உடைய உயிரி னங்கள் தோன்றின. இது புற்றுநோய் பற்றிய ஆய்வுகளுக்கும் முக்கிய மான விடயமாகும். எப்படி எனப் பார்ப்போம்.

### பல கலங்களைக் கொண்ட உயிரினங்கள்

பல கலங்கள் கொண்ட உயிரினங்க ளின் தோற்றமானது வாழ்வின் அடிப் படைத் தன்மையில் அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒரு கலம் கொண்ட உயிரினங்களின் வாழ்வானது சாதாரண சுற்றுவட்டம் போன்றது. தனிக் கலங்களான அவை தம்மைத்தாமே படியெடுத்துப் பெருகுமே ஒழிய இனப் பெருக்கம் செய்ய வேண்டிய தேவை கிடை யாது. இன்னொரு விதத்தில் சொன் னால் அவை ஆண், பெண் பேத மில்லா இறப்புமற்ற உயிரினங்களா கும். அங்கங்கள் உறுப்புகள் எனத் தோன்றிய பின்னர் உயிரினங்களால் தம்மைத்தாமே படியெடுப்பது முடி யாத காரியமாயிற்று. தமது இனத்தின் தொடர்ச்சியை நிச்சயப் படுத்த, தமது உயிரணுக்களை அடு த்த சந்ததிக்கு கடத்த இனப்பெருக்கம் செய்ய வேண்டியது அவசியம். இந்த இனப் பெருக்கத்தை விந்து, முட்டை ஆகிய சிறப்பான முளைய உயிரணுக்கள் ஊடாகவே தொடரவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் இறப்பு என்பது அவற்றிற்கு நியமமாயிற்று. சில கலங்கள் சில காலத்திற்கு தம்மைத் தாமே படியெடுக்க முடிந்தாலும், அவற்றிற்கான உயிரியல் தேவை முடிந்ததும் அவற்றின் வாழ்வு முடிவு றும். ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வாறு இறப்பைத் தழுவிக் கொள் ளும். இதை Ap-o-p-t-os-is




என்பார்கள். நிர்ணயிக்கப்பட்ட அத்த கைய இறப்பை மேலாண்மைப்படுத் துவது முற்கூறிய மைற்ரோகொன்றி யாவாகும்.

## புற்றுநோய் எவ்வாறு?

உயிரணுக்களுக்கும் ஏனைய கலங் களுக்கும் இடையேயான நம்பிக்கை உடன்பாட்டின் முறிவுதான் புற்று நோய் எனலாம். கலங்களின் இறப்பை செயலிழக்கச் செய்து தம்மை அழியாத நிலைக்கு உயர்த்து வதற்காக, அளவிற்கு அதிகமாக பெருகும் முயற்சிதான் புற்றுநோய் எனச் சொல்லலாம் போலிருக்கிறது. இதனால்தான் "பேராசை பிடித்த கலங்களின் பெருக்கம்" எனப் புற்று நோயைப் பலரும் கருதினர். ஆனால், அண்மைய ஆய்வுகளின்படி புற்று நோய் பற்றிய தவறான பார்வை அது எனச் சொல்லத் தோன்றுகிறது.

## புதிய கருத்து

புற்றுநோய்க் கலங்கள் ஒட்சிசன் மிகவும் குறைந்த சூழலில் பெருகுவ தில் வெற்றியடைகின்றன. இது



நொதித்தல் எனப்படும். இது metab-olism தின் செயற்திறன் குறைந்த வடிவம் எனலாம். ஆதி உயிரினங் கள் அவ்வாறு செய்தன. மூதாதையர் கடந்து வந்த சில தடங்களை உயிரி னங்கள் தமது வளர்ச்சிப் பாதையில் இப்பொழுதும் பிரதிபலிக்கின்றன.

உதாரணமாக ஒரு சோடிக்கு மேற்பட்ட முலைகளுக்கான அடை யாளங்களுடன் பல வளர்ந்த ஆண், பெண் இருபாலாரையும் காணமுடிகி றது. வால் போன்ற அடையாளத்து டன் அல்லது வாலுடன் பிறந்த குழந் தைகள் பற்றிய பதிவுகள் மருத்துவ உலகில் பல உள்ளன. பரிணாம வளர்ச்சியானது முந்தைய மரபணுக் களிலிருந்தே கட்டமைக்கப்படுவதே இதற்குக் காரணமாகும். சில தருணங் களில் அத்தகைய பாதைகள் முடக் கப்படுகின்றன. அந்த நிலையிலேயே அடையாள முலைக் காம்புகள், அல் லது அடையாள வாலுடன் மனிதர் கள் பிறக்கிறார்கள்.

இவற்றை அடிப்படையாக வைத்தே அவுஸ்திரேலிய தேசிய பல் கலைக்கழகத்தின் Charles Davis மற்றும் Paul Davies ஆகியோர் இணைந்து புற்றுநோய் பற்றிய ஒரு புதிய கோட்பாட்டை முன்வைக்கி றார்கள். அவர்கள் இவ்வாறு சொல்கி றார்கள், "புற்றுநோய் உடலில் பரவு கையில் உயிரினமானது தனது பரிணாம வளர்ச்சிப் பாதையை மீண் டும் கடக்கிறது. ஆனால், மிக மிக வேகமான கதியில் எனலாம். இயல் பான கலங்களின் ஒழுங்கு முறை யைக் குலைப்பதன் மூலம் தனது மூதாதையர்களின் வாழ்க்கை முறையை மீள் நிர்மாணம் செய்ய முனைகின்றன."

இது சில தரவுகளின் அடிப்படை யில் முன்வைக்கப்படும் கோட்பாடு. முற்றுமுழுதான முடிவல்ல. புற்று நோய் பெருகுவதானது தனது மூதா தைக் கலங்களின் மரபணுக்களை மீளச் செயற்பட வைப்பது போன்ற தாகும். மிகக் கடுமையான புற்றுநோ யானது ஒரு பில்லியன் ஆண்டுக ளுக்கு முன்னான உயிரினங்களின் வாழ்வை மீள அமைக்கிறது என லாம். இருந்தபோதும், உயிரில் தேவை ஏதாவது இருந்தால் மட்டுமே புராதன ஜீன்ஸ் இப்பொழுதும் செயற் படும். உடலுக்கான அடிப்படை வரைவு போடப்பட்டு கருவானது தாயின் வயிற்றில் வளர ஆரம்பிக் கும்போது புராதன ஜீன்ஸ் அதன் வளர்ச்சிக்கு வழிகாட்டுவதற்காக இயங்கிக் கொண்டிருக்கும்.

ஆனால், அது பூர்த்தியானதும் அதன் இயக்கம் நிறுத்தப்படும். உதா ரணமாக கருவிலுள்ளபோது எல்லா மனிதர்களுக்குமே வாலும் செளவுக ளும் சிறிது காலத்திற்கு இருக்கின் றன. புற்றுநோய் ஏற்படும்போது கரு முளையின் ஆரம்பநிலையில் (early stage embryonic ge-n-es-) மரப ணுக்களில் சில துயில்நீங்கி செய லூக்கம் பெறுவதை விஞ்ஞானிகள் கண்டறிந்தமை இதற்குச் சான்றாகும்.

உயிரினங்களின் பரிணாம உயிரி யல், வளர்ச்சி உயிரியல் ஆகியவற் றின் இடையே ஆழமான இணைப்பு கள் உள்ளன. இவை பற்றிய சில தெளிவுகள் ஏற்பட்டுள்ளன. புற்று நோய்க்கான சிகிச்சையில் புதிய திசைகளைத் திறக்க இவை உதவும். மேலும் தெளிவும் பலனும் பெறுவ தற்கு புற்றுநோய் பற்றிய அடிப்படை அறிவை மேலும் தேடவேண்டி யுள்ளது. புற்றுநோயின் தொடக்கம், அது பெருகும் விதம் ஆகியவற்றின் நுணுக்கங்களை மேலும் கண்டறிவ தன் மூலம் பூமியில் உயிரினம் கடந்து வந்த பாதை பற்றிய அறிவைப் பெற முடியும். அதனால் புற்றுநோய் பற் றிய பயங்கள் நீங்கி மனித இனத்தில் வாழ்வு பற்றிய நம்பிக்கை வளரும்.

விஞ்ஞானிகள் தேடலுடன் கூடிய கனவுகள் காணட்டும். அதற்கான சான்றாதாரங்களை ஆய்வுகள் மூலம் கண்டறியட்டும். மரணபயம் நீங்குவ தான மனிதர்களின் கனவுகள் பலிக் கட்டும்.

## திரை விமர்சனம்

மயூரா




சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுத்தாளர் ஒருவர் இலக்கியக் கூட்டமொன்றுக்கு குடித்துவிட்டு வந்தாரென்ற குற்றச்சாட்டின் மூலம் அந்த எழுத்தாளர் மூர்க்கமாக அக்கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். அந்தச் சம்பவம் அன்று பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியது. குறிப்பாக தமிழ் சிறுபத்திரிகைச் சூழலில் குடியின் சமூகவியல், குடியின் அரசியல், குடியின் உளவியல், குடியின் பண்பாடு என்று பன்முகப்பார்வைகள் கருத்தாடல்களாக வெளிப்பட்டன. அப்போது அ.மார்க்ஸ் எழுதிய “குடியின் குடித்தனம்” என்ற கட்டுரை பரவலான வாசிப்புக்கும் உரையாடலுக்கும் மற்றும் கண்டனத்திற்கும் உட்படுத்தப்பட்டது. இவைதொடர்பில் பல்வேறு எழுத்தாளர்கள் குடி என்னும் இரண்டெழுத்து மந்திரம் குறித்து ஆங்காங்கு தமது சிந்தனைகளை, பார்வைகளை பதிவு செய்துள்ளார்கள்.

சமீபத்தில் முத்தையா வெள்ளையன் என்பவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் குடிசார்ந்து எழுதப்பட்ட பல கட்டுரைகளைத் தொகுத்து குடியின்றி அமையா உலகு என்னும் நூலாக 2008 இல் வெளியிட்டுள்ளார். இந்நூல் நுட்பமான வாசிப்பிற்கும் ஆழமான சமூக புரிதலுக்கும் அறிவுபூர்வமான விடயங்களைத் தந்துள்ளது. மது தீர்ந்த காலி கோப்பைகள் சூனியமானவைகள் அல்ல. அவற்றில் நமது மகிழ்ச்சிகளையும் கொண்டாட்டங்களையும் துயரங்களையும் அவலங்களையும் எள்ளல்களையும் அசிங்கங்களையும் அவரவர் வசதிக்கேற்ப இட்டு நிரப்புகிறோம். பொதுவாக குடியைக் கைக்கொண்ட ஒரு மனிதனின் சமூகம் இழிவுபடுத்தி வைக்கிறது. அம்மனிதனது குடிப்பழக்கத்தைக் காரணம் காட்டி என்னவிதமான புறக்கணிப்புகளைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் இந்த சமூகம் அவனுக்குச் செய்கிறது.

ஒரு மனிதன் குடியைக் கைக்கொள்கிறதும், குடியற்றவனாக வாழ்கிறதும் தனிமனிதன் சார்ந்ததல்ல. அது இச்சமூகம் சார்ந்தது. சமூகத்தின் மேல் இருக்கும் கோபமும் அச்சமும் அவலமும் எரிச்சலுமே காரணமென்றால் அது மிகையல்ல. சாராயம் காட்சி விற்பனை செய்தவர்கள் இன்று அரசியலில் (தமிழ் நாட்டில் கோலோச்சுகிறார்கள்) மதுக்கடையில் வரிவருவாய் மூலம் கோடி கோடியாய் இலாபம் மீட்டும் அரசமைப்பை நிலவும் சமூகம் வாய் பொத்தி வேடிக்கை பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது. அதிகார போதை மூலமும் பொருளாதார போதையின் வழியாகவும் கொல்லப்படுபவர்கள், சுரண்டப்படுபவர்கள், வறுமைக்குத் தள்ளப்படுபவர்கள் முதலானவர்களின் எண்ணிக்கையை விட குடிகாரர்களால் ஏற்படும் தீமைகள் ஒப்பீட்டளவில் குறைவானதே என்று இந்நூலின் பதிப்பாளர்

ஏ.லோகநாதன் (புலம்) குறிப்பிடுவது எமது கவனத்திற்குரியது. இது ஆழ மான சிந்தனைக்கும் விவாதத்திற்கும் உரியது. நாம் சமூகம் தொடர்பில் இந்த சிந்தனைகளை உள்வாங்கித் தான் மேலே செல்ல வேண்டும்.

ஆதி சமூக குழுக்களில் இருந்த மது வைப் பற்றிய பார்வையும் அறம் மற் றும் ஒழுக்கவியல் கோட்பாடும் பண்பாட்டுச் சூழலும் பின் காலனிய வாழ்க்கை முறைக்குச் சாத்தியப்படு மா? அல்லது நிலப்பிரபுத்துவ கால னிய ஆட்சியில் ஏற்பட்ட வாழ்க்கை முறைக்கான கோட்பாடுகள் பின் காலனிய சூழலில் சரிதானா என்ப தில் குடியைப் பற்றி சமூகவியலில் ஓர் மீள் பார்வை தேவையாகவும் அவசியமாகவும் இருக்கிறது. இதைப் பற்றிய விவாதத்தை பல நிலைகளில் மேல் எடுத்துச் செல்லவே இந்நூல் விளைகிறது.




இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் ஒன்றான நாஞ்சில் நாடனின் "உண்ணற்க கள்ளை...." எனும் கட்டுரையை அடிப்படையா கக் கொண்டு "மதுபானக் கடை" என் னும் தமிழ்த் திரைப்படத்தை கமலக் கண்ணன் இயக்கியுள்ளார். இந்தப் படம் தமிழில் ஒரு புது முயற்சி என்று கூறலாம். அதை விட இந்தப் படத்தை குடும்பத்துடன் பார்க்கலாமா? வேண்டாமா? என்று தயங்க வைக் கும் படம் என்றும் கூறலாம். ஆனால், நாம் ஒவ்வொருவரும் நிச்சயம் பார்க்க வேண்டிய படம். இந்தப் படத்தில் கதையென்று எதுவுமில் லை. கதை இருப்பதாக நினைத்தால் அது உங்கள் கற்பனையே என்ற எழுத்துடன் தான் படம் ஆரம்பிக்கி றது.

ரசிகர்களை நோக்கி சொடக்குப் போட்டு "பஞ்ச்" வசனங்கள் பேசும் கதாநாயகன் இல்லை. தொடைகள் தட்டி சவால் விடும் ஹீரோத்தனம் இல்லை. பக்கம் பக்கமாய் வில்லத் தனம் இல்லை. கவர்ச்சி நடிகைகளின் குத்துப்பாட்டு இல்லை. இரட்டை அர்த்த வசனம் பேசும் நகைச்சுவைக் காட்சிகள் இல்லை. இவையெதுவும் இல்லாமல் தமிழில் படம் சாத்தியமா என்ற கேள்வி நமக்கு வரலாம். ஆனால் சாத்தியம் என்று தான் இந் தப் படம் நிரூபித்துள்ளது. ஒரு இடத் தையோ அல்லது ஒரு சம்பவத் தையோ மையமாக வைத்து முழுப்படத்தையும் நகர்த்தும் கதைப் போக்குடைய தமிழ்ப்படங்கள் மிகக் குறைவு. அப்படி வெளிவரும் திரைப் படங்கள் பொதுவாக ஒரு பரிசோ தனை முயற்சியாகவோ அல்லது விருதுக்காக எடுக்கப்படும் படமாகத் தான் நிச்சயம் இருக்கும். மதுபானக் கடை எந்தவித மறைமுக அரசியல் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பால் உரு வாக்கப்பட்ட படம் சமூகப் பிரக் ஞையும் அரசியல் உணர்வும் தெளி வாக இனங்காணப்பட்டு தேவைக் கேற்ப முழுமையாக வெளிப்படும் வகையில் இத்திரைப்படம் உருவாக் கப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பி டப்பட வேண்டும்.

கால்கள் தள்ளாடியபடி திரையில் நடந்துபோகும் குடி மக்களின் காட்சி கள் தொடங்கி படம் எப்பொழுது முடிந்தது என்று சிந்திப்பதற்கிடை யில் தொய்வில்லாமல் படம் நகர்ந்து செல்கிறது. படத்தில் வரும் ஒவ் வொரு காட்சியும் குடிப்பழக்கமுள்ள ஒவ்வொரு மனிதனும் நிச்சயமாக தனது வாழ்நாளில் எங்காவது கடந்தி ருப்பார். அந்த அனுபவ உணர்வு மீட்டுக்கொள்ளப்படுவதையும் இப் படம் மிகக் கச்சிதமாக வெளிப்படுகி றது. மதுபானக் கடைக்கு வரும் பலவிதமான சமூகப் பின்புலங்களு டன் வரும் பல்வேறு மனிதர்களின்

உணர்வுகளையும் சிந்தனை ஓட்டங்களையும் அவர்களது வாழ்வியல் சார்ந்த பிரதிபலிப்புமே இத்திரைப் படம்.

"குடி" குடியைக் கெடுக்கும் என்றோ அல்லது குடிப்பதை வலியுறுத்தும் போதைகளை செய்தியாக முன்வைப்பதோ, இந்தப் படத்தின் நோக்கமல்ல. ஆனால் மதுபானக் கடையில் சந்திக்கும் மனிதர்கள், அங்கு ஏற்படும் உறவுகள் அவர்களது உரையாடல்கள், அவற்றின் தருணங்கள் யாவற்றையும் இணைக்கும் அரசியலும் அழகியலும் தமிழ்த் திரைப்படத்துக்கும் தமிழ்ப் பார்வையாளர்களுக்கும் புதிது. இந்த வகையில் இயக்குனரின் துணிச்சல் சமூகப் பொறுப்பு கலையார்வம் பாராட்டுக் குரியது. இப்படத்தில் மிகவும் பேசக் கூடிய பாத்திரமேற்று (பெட்டிசன் மணி) பாத்திரமேற்று கவிஞர் என்.டி.ராஜ்குமார் நடித்துள்ள இப் படத்திற்கான பாடல்களை இவரே எழுதியுள்ளார். மிதமான போதையின் தள்ளாட்டத்தை கண்களிலும் குரல் வளத்திலும் இயல்பாக வெளிப் படுத்தும்போது ராஜ்குமார் என்னும் நடிகர் முன்னிலைக்கு வருகிறார். இவரது பண்பட்ட நடிப்பு முழுமையாக வெளிப்பட்டுள்ளது. இதைவிட இவரது பாடல்களும் சிறப்பாக அமைந்துள்ளன. "கள்ளுக் குளம் வெட்டி ராமன் குளிச்சதும்" என்ற பாடல் நாம் அறிந்திராத பல குடிகளின் வரலாற்றுத் தகவல்களைத் தருகிறது. பாடல்களின் கவித்துவத்திற்கு எந்தக் காயமும் இல்லாமல் மிகச் சிறப்பாக வேத சங்க சுகவனம் என்பவர் இசையமைத்துள்ளார்.

கோடிக்கால் பூதம் உலகிலுள்ள எல்லாத் தொழிலாளர்களையும் இணைத்து ஒருமைப்படுத்தும் ஒற்றை வார்த்தை. இந்த வார்த்தையை காட்சியாக உருவப்படுத்தினால் பல்வேறு சிக்கல்பாடுகளுக்கு இயலாமைகளுக்கு முகம்கொடுக்க வேண்டும். ஆனால் இந்த ஒற்றைவரி இப்படத்தில் அனைத்தையும் மேவியுள்ளது. போதைக் கும் வண்ணமிருக்கிறதா? மஞ்சள் நிற போதையிலே கட்டறுந்து போகையிலே என்னுடைய தேவைகள் வார்த்தைக்கு வார்த்தை போதை ததும்புகிறது. பெரிய குடிகாரனையே பயமுறுத்தும் மற்றொரு குடிமகன் காதலில் தோல்வியுற்று முதன் முதலாக பீர் குடித்துவிட்டு சொல்லும் கவிதை அழகாகவும் ரசிக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

என்னை இறந்துவிடு என்று சொல்

மறுபடியும் பிறந்து விடுவேன் ஆனால்

மறந்துவிடு என்று மட்டும் சொல்லாதே

இருந்தும் இறந்து விடுவேன்!

தொடர்ந்து அந்த குடிமகன் சேர் இந்த பொண்ணுங்க யாரையும் நம்பாதீங்க சேர் காட்சியும் கோகி கோகி என்று அவர் போடும் மொக்கையில் பெட்டிசன் மணி அலறி அடித்து ஓடும் காட்சியும் சிறப்பான நகைச் சுவை எனலாம்.

இந்தத் திரைப்படத்தின் உயிர் மூச்சே வசனங்கள் தான். எந்த சமரசமும் இல்லாமல் திரைக்கதை வசனம் எழுதியுள்ளார் ஐயப்பன். இவர் இடதுசாரி அமைப்பான கலை இலக்கிய பெருமன்ற உறுப்பினர். இதுபோல் கவிஞர் ராஜ்குமாரும் இதே அமைப் பைச் சார்ந்தவர். யதார்த்தமான ஒவ்வொரு வசனத்திலும் பெரும் அரசியல் பொதிந்துள்ளது. கூர்மையாக அந்த தருணங்களைக் கடந்து அனுபவிக்கும் போது தான் அந்த வசனங்களின் பெறுமதி விளங்கும். இவை வெறும் பிரசார வகையாக அல்லாமல் அந்த களம் மனிதர்கள் இணைப்புச் சார்ந்து இயல்பாக வெளிப்படும் வசனங்கள். குடிமகன் ஒருவர் சொல்லும் வசனம் "நாம தள்ளாடினால் கவர்மென்ட் ஸ்ரெடியாக இருக்கும். நாம ஸ்ரெடியாயிட்டா கவர்மென்ட் தள்ளாடிடும்" "ஆலய மணி அடித்தால் சத்தம். அல்க்ககோல்மணி அடித்தால் யுத்தம்". இவ்வாறு நாட்டு நடப்பை சுட்டும் வசனங்கள் கூர்மையாக ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதுவே இப்படத்தின் வெற்றி. துப்புரவுத் தொழிலாளி மதுபானக் கடையில் தண்ணீர் கேட்டதற்கு அவரிடம் தீண்டாமை பேசும் குடிமகனைப் பார்த்து தொழிலாளி பேசும் வசனம் நம்மை சிந்திக்கத் தூண்டும். "எது எதுக்கோ இயந்திரம் கண்டு பிடித்தவர்கள் பீ, மூத்திரம் அள்ள ஏண்டா எதுவும் கண்டு பிடிக்கல. நாங்களும் உங்கள மாதிரி மனிஷன் தானே?" இப்படியாக அரசியல் தருணங்கள் நமது வாழ்வியல் மதிப்பீடுகள் மீதான விமர்சனமாகவும் நீட்சி பெறுவதைக் காணலாம். இதுபோலவே இங்கு இடம்பெற்றுள்ள காதலும் மதுபானக் கடையில் வேலை பார்க்கும் ரபீக் என்னும் இஸ்லாமிய இளைஞன் கடை முதலாளியின் (ஆதிக்கசாதி) மகளை காதலிப்பார். இது வழமைக்கு மாறானது. இதுவும் எமது அரசியல் புரிதலுக்கு உட்பட்டது.

இந்தப்படம் கதையென்று எதையும் தேடவேண்டாம் என்று பார்வையாளர்களை எச்சரிக்கை செய்தாலும் மதுபானக் கடை பல்வேறு மனிதர்களை அவர்களுக்கிடையிலான சமூக உறவுகளை, முரண்களை, அரசியல் உரையாடல்களை, வாழ்வியல் மீதான கலகக் கூறுகளை இப்படம் தன்னகத்தே கொண்டுள்ளது. பார்வையாளர்களுக்கு புது அனுபவமாகத்தான் நிச்சயம் இருக்கும். இது போன்ற படங்களையும் நாம் பார்க்க பயிற்சி பெறத்தான் வேண்டும். தமிழர் வாழ்குலத்தின் அன்றாடக் காட்சிகளை மதுபானக் கடை சந்திக்கும் இயல்புத் தருணங்களை கலைத்துவ வெளிப்பாடாகவும் அரசியலாகவும் இத்திரைப்படம் முன்வைக்கிறது.

இத்திரைப்படம் ஜோன் ஆபிரகாமுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. "நீ குடித்துத் திரிந்த கோவை மாநகரத்தின் வீதிகளில் கலகக்கார புழுதிக்காற்றில் இருந்து பிறந்திருக்கலாம். இப்படத்திற்கான முதல் கீற்று......" ஆபிரகாம் தமிழ்த் திரைப்பட உலகில் மறக்கப்பட முடியாத முக்கிய ஆளுமை. இவர் குடிக்கு அடிமையாகித்தான் தனது வாழ்வை முடித்துக் கொண்டார். ஆனால் அவரது கலகக்காரத் தனம் மறக்கக்கூடியவை அல்ல.

(64ஆம் பக்கத்தொடர்ச்சி

நான் பரிசோதித்த 15 பெண்களும் தங்களுக்கு பாலியல் ரீதியான துஸ்பிரயோகம் நடைபெறவில்லை என்பதனை தெளிவாக வலியுறுத்தினர். அது பொய்க் குற்றச்சாட்டு எனக்கூறி அந்தக் கருத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தனர். அந்த 15 பெண்களும் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள். அவர்களை பெண்ணியல் மருத்துவரிடம் பரிசோதிக்க வேண்டிய தேவை இல்லை. அப்படியானால் திருமணம் செய்த பெண்கள் எல்லோரையும் ஒரு பெண்ணியல் மருத்துவரிடம் அனுப்பி பரிசோதிக்க வேண்டி வரும். கணவன் விரும்பினால் கூட மனைவி அதனை ஏற்க மறுத்தால் அவளைப் பரிசோதிக்க முடியாது. அதனை மீறி பரிசோதித்தால் அதுவே அவள் மீது செய்யப்படும் பாலியல் துஸ்பிரயோகமாகும்.

''கற்பு'' சான்றிதழ்கள் கோரி நிற்கும் பலர் உண்மையில் அந்தப் பெண்களில் அக்கறை உள்ளவர்கள் அல்ல. ஏன் சமூக நலனிலும் அக்கறை உள்ளவர்கள் அல்ல. தாங்கள் உருவாக்கிக் கொண்ட புனிதம் சார்ந்த கற்பிதங்களை நிலை நிறுத்துவதற்கு என இதனைச் செய்கின்றனர். அதையும் விட தங்களது வக்கிரமான பாலியல் எண்ணங்களுக்கு தீனி போடுவதற்காக செயற்படுகின்றனர். பலரினது ஆழ் மனங்களில் அவர்கள் ஒரு மன்னரைப்போலவும் அவர்களுக்கு அந்தப்புரங்கள் இருப்பதாகவும் அதற்கு அடிக்கடி சென்று வருபவர்கள் எனவும் எண்ணக்கற்பிதங்கள் கொண்டவர்கள் எனவும் ஆழ் மன வக்கிர பாலியல் உணர்வின் வெளிப்பாடாகவே இந்த கற்புச் சான்றிதழ்கள் பற்றிய நிலைப்பாடு தோன்றுகின்றது. எமது பிரதேசத்தில் ஒரு தொகுதியினர் பாலியல் தொழிலினை செயற்படுத்துகின்றனர். இள வயது கர்ப்பத்தின் அளவு முன்னிலும் பார்க்க அதிகரித்துள்ளது. இதற்குரிய சமூகப்பின்னணியைப் பார்க்க வேண்டியுள்ளது. பெண்கள் பலவீனர்களாக சித்திரிக்கப்படுவதும் அவர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள பொருளாதாரச் சுரண்டலும் இதன் பின்னணியாக அமைந்துள்ளது. பல இள வயது கர்ப்பம் அடைதலினைச் சார்ந்த உரையாடலின் போது அவர்கள் மறுப்புத் தெரிவிக்க முடியாமையில் இதனை உள்ளடக்கப்பட்டமை தெரிய வருகின்றது. ஆனால், அவர்கள் தங்களது கல்விச் செயற்பாட்டினையும் தொடர முடியாமல் கர்ப்பத்தைச் சுமக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். ஏனெனில், கருக்கலைப்பு இலங்கையில் தண்டனைக்குரிய குற்றமாகும். இதனால் பலர் முறையற்ற வகையில் கருக்கலைப்பிற்கு உள்ளாகின்றனர். இதனால் சில உயிரிழப்புகள் கூட நிகழ்ந்துள்ளன. இந்த இழி நிலைக்குக் காரணம்தான் என்ன?

சில பாலியல் தொழிலாளர்களைச் சந்தித்த போது அவர்களது பொருளாதார நிலை இத்தகைய ஒரு வாழ்க்கைக்கு இட்டுச் செல்கின்றது என அறியக்கூடியதாக உள்ளது. சிலர் தப்பிப்பிழைத்தலுக்காக பாலியலில் ஈடுபட்டதையும் அதன் பின்னர் இதனைத் தொழிலாக மாற்றிக் கொண்டதாகவும் விவரித்தனர். சிலர் கணவனை இழந்து வாழும் நிலையில் பாலியல் தேவைக்காக உறவு கொண்டதாகக் கூறினர்.

இலங்கையில் பாலியல் தொழில் சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதில் ஈடுபடுவோர் குற்றவாளிகள் எனச் சொல்லப்படுகின்றனர். மறுமணம் செய்வது மிகக் குறைந்த அளவிலே எமது பகுதியில் காணப்படுகின்றது. பொருளாதார சுரண்டல் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. உழைப்பினைத் தரக்கூடிய குடும்ப அங்கத்தவர்களின் இழப்பு வர்த்தக நிறுவனங்களின் கவர்ச்சிகரமான விளம்பரங்களுக்கு பாலியல் சுரண்டல்களுக்கு பலர் உள்ளாக்கப்பட்டுள்ளனர். கடனை மீள் அளிக்க முடியாமல் பலர் திண்டாடுகின்றனர். இத்தகைய பின்னணியில் இந்தப் பிரச்சினைகளைப் பார்க்க வேண்டியது எமது கடமையாகும்.

இள வயது கர்ப்பம் முறையற்ற வழியில் கருக்கலைப்புச் செய்யும் போது ஏற்படும் மரணம் நோய் பற்றி நாம் கவலைப்பட வேண்டாமா? பாலியல் தொழிலாளர்களாக மாற்றப்பட்டுள்ள பலரது உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களது உடல், உள நலம் பற்றியும் பால்வினை நோய் பற்றியும் நாம் அக்கறை செலுத்த வேண்டாமா? மறுப்புத் தெரிவிக்கின்ற திடமான மனம் சிறு வயதிலிருந்து வளர்க்கப்படாத நிலையில் பாலியல் தேவையை நிறைவு செய்வதற்கு அல்லது வன்புணர்விற்கு அணுகும் ஒருவரை மறுப்புத் தெரிவிப்பதற்கு அல்லது விடுவித்துக் கொள்ள இயலாமல் இருப்ப தற்குரிய பெண்களின் பலவீனத்திற்கான சமூக பின்னணிகள் எவை என ஆராய வேண்டாமா? சமூகத்தில் நம்பிக்கையின்மை வளர்க்கப்பட்டு ஒவ்வொரு நாளும் கணவனால் சந்தேகிக்கப்பட்டு துன்புறுத்தப்படுகின்ற ''கற்புக்கரசிகள்'' நிலைமையை யாரிடம் சொல்வது. மதுபோதையினால் ஏற்படும் சந்தேக நோயினால் துன்பப்படுகின்ற பெண்களைப்பற்றி யார் கவலைப்படுவது?

புனிதர்களை உருவாக்கப் புறப்பட்டு மனிதர்களையும் தொலைத்து விட்ட இந்நிலைக்கு இந்தச் சமூகம் தள்ளப்பட்டுள்ளது. போருக்குப் பிந்திய வன்னிச் சமூகம் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகள் பற்றி பெரும்பாலானவர்களுக்கு அக்கறையில்லை என்பது கவலைக்குரியது. அன்றாட வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் இந்த மக்களுக்கு எந்தவிதமான உதவியும் ஒத்தாசையும் வழங்காமல் அவர்களிடம் ''கற்பு'' சான்றிதழ்கள் கேட்டு நமது வக்கிரமான எண்ணங்களுக்கு தீனி போடுகின்றவர்கள் கண்டனத்திற்குரியவர்கள். இவர்களை சமூகம் விலத்தி வைக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும். இல்லையெனில் வன்னிப் பெரு நிலப்பரப்பின் உளச் சமூகப்பணியின் ஒன்றாக வீடுவீடாகச் சென்று கற்புச்சான்றிதழ்களைத் தர வேண்டிய இழி நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

**கடைசிப் பக்கம்**



# கற்பும் கற்பிதங்களும்



மனநல மருத்துவர்
எஸ். சிவதாஸ்

அண்மையில் இராணுவத்திற்குச்சேர்க்கப்பட்ட தமிழ்ப் பெண்களில் சிலர் இசிப்பு நிலைக்குச் சென்றதைத் தொடர்ந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். அதனைத்தொடர்ந்து அவர்களின் மனதினை பரிசோதிக்க வேண்டி ஏற்பட் டது. பரிசோதனைகளின் பின் பாலியல் ரீதியில் துஸ்பிரயோகம் செய்யப்படவில்லை என நான் வெளியிட்ட அறிக்கை பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தி உள்ளது. எதிர்ப்பும் கிளம்பியது. தாம் எதிர்பார்த்த நிகழ்வு நடைபெறவில்லை என்ற கோபம் சிலரிடம் காணப்பட்ட போதும் இதற்குப் பின்னால் பல வக்கிரமான பாலியல் உணர்வுகள் காரணமாகும் என்பது உண்மையாகும்.

சில இணையத்தள ஊடகங்கள் உணர்ச்சிமயமான பரபரப்புச் செய்திகளின் ஊடாக பிழைப்பு நடத்துபவை. அது அவர்களது தொழில் ரீதியான பிரச்சினை எனக் கொள்ளலாம். ஆனால் பலர் கேட்கும் "கற்பு" சான்றிதழ்களின் பின்னே ஆணாதிக்க பாலியல் சுரண்டலே இருக்கின்றது. இது தனியே ஆண்களிடம் அல்ல பல பெண்களிடமும் காணப்படுகின்றது. இந்த மனநிலை ஒரு சமூகப் பிரச்சினையே "கற்பழிப்பு" என்ற சொற்பதத்தில் இருந்து "பாலியல் வன்புணர்வு" என்ற சொற் பதத்தினை நோக்கிச் செல்லவே பல நூற்றாண்டுகள் சென்று விட்டன. பாதிக்கப்பட்ட பெண்ணிற்கே தண்டனை வழங்கும் நிலையே தற்பொழுதும் சொற்பதம் மாறினாலும் நடைமுறையில் உள்ள வழக்கு என்பது யாவரும் அறிந்ததே.

"கற்பு" என்பது வெறுமனமே உடல் சார்ந்த நிலையென்றால் அது கணவனால்தான் முதல் அழியப்படுவதாக பொருள்படும் அல்லவா? அப்படியானால் திருமணத்தின் பின் அது இழக்கப்படுகின்றதா? கன்னிப் பெண்ணாக இருக்கும்போது மாத்திரமே "கற்பு" இருக்கின்றதா? "கற்பு" என்பது மனம் சார்ந்த நிலை என்றால் அது பெரிய அளவில் விவாதிக்கப்பட முடியாத தனி மனித மன நிலையே எனக் கொள்ளப்படும். ஊடல் பரிசோதனைகள் மூலம் அதனைக் கண்டுபிடிக்க முடியாதல்லவா? அத்தகைய நிலை மற்றையவர்களுக்கு முக்கியமில்லாத விடயம் அல்லவா? இந்த குழப்பத்திற்கு சமூகத்தில் விடை காண முடியாத நிலை என்பதே உண்மை.

ஒழுக்கம் சமூகத்திற்கு மிக முக்கியமானது.அது தனியே பாலியல் செயற்பாடுகளில் மட்டும் இருக்க வேண்டியது அல்லவே. எல்லாச் செயற்பாடுகளிலும் அதன் தாக்கம் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும் அல்லவா. ஒழுக்கம் பல பரிமாணங்களைக் கொண்டது. ஒரு பெண்ணிற்கு அவளது சம்மதம் இல்லாமல் அவளுடன் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அதனை மீறிச் செயற்படுவது ஒரு குற்றமாகும், மனித உரிமை மீறலாகும், வன்முறைச் செயற்பாடாகும். அதற்கு குற்றம் இழைத்தவர் பொறுப்பாக வேண்டுமே ஒழிய பெண் அதற்கு பொறுப்பேற்க முடியாதல்லவா? அதே போல் வயதிற்கு (18 வயதிற்குமேல்) வந்த பெண் இன்னுமொரு ஆணுடன் விருப்பின் பேரில் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவது அவளுடைய பாலியல் சுதந்திரம். அதனை மறுப்பது என்பதும் மனித உரிமை மீறலே. ஒழுக்கம் என்ற பெயரால் இதனைச்செய்வது ஒரு ஒழுங்கீனமே. அந்தப் பெண்ணின் பாலியல் சுதந்திரத்தில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை.

ஒரு வயதிற்கு வந்த பெண் தான் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்படவில்லை என்றும் தன்னை அதற்காக உடல் ரீதியாக பரிசோதிக்க முடியாது என மறுப்புத் தெரிவிப்பதற்கும் உரிமை உடையவள். அப்படிச் சொல்லும் பெண்ணினை எந்த மன்ற உத்தரவினாலும் பரிசோதிக்க முடியாது. அதை மீறி பரிசோதனை செய்தால் அது வன்முறைப் பாலியல் துஸ்பிரயோகமாகும். 18 வயதிற்கு உட்பட்ட பெண்ணிற்கு பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்க நீதிமன்றின் வேண்டுகோளிற்கு இணங்க, அவளின் சம்மதம் இன்றி பரிசோதிக்க முடியும். இத்தகைய பின்னணியில் தான் அவளுடைய அறிக்கை பார்க்கப்பட வேண்டும்.

*(63ஆம் பக்கம் பார்க்க...)*

## சர்வதேச தரத்தில்

## எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ்

## வெளியீடாக மாதாந்தம் வெளிவருகிறது...

KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE · HERITAGE · TRADITION · EVENTS · FASHION · INTERVIEWS · ENTERTAINMENT

மாத இதழ்




சிறப்பு
விலை
125/-

**உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்**

**சுரைனி : 0759 685658 / 0117 322741 சஹாரா : 0728 497720 / 0117 322731**

## Purchase your digital copy at

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP. READ. ENJOY

http://www.magzter.com/LK/Express-Newspapers/Kalaikesari/Lifestyle/

நமது பாரம்பரிய பண்பாட்டு கலாசாரங்களை
தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துச் செல்லும் மாத சஞ்சிகை





Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.